# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

டிசம்பர் 2008

விலை ரூ.10/-








புதுடெல்லியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்து
வெள்ள நிவாரண உதவி குறித்துப் பேசினார். (4.12.2008)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
தொலைதூர கிராமப்புற மக்களுக்கு தரமான மருத்துவ வசதிகள் அளித்திட
100 நடமாடும் மருத்துவக்குழு ஊர்திகளை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். (24.12.2008)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

கார்த்திகை - மார்கழி

டிசம்பர் 2008

மலர் : 41 இதழ் : 6



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட
அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும்
விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக் காட்டும்
ஒளிமிக்க விளக்காகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


- அறிவுலக மேதை ஒப்பற்ற ஞானி திருவள்ளுவர் ............................ 2
- புயலால் ஏற்பட்ட சேதத்தை சீர்செய்ய தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி வழங்க வேண்டும்! ......... 6
- வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் 500 கோடி ரூபாய் ........... 10
- போக்குவரத்துத் துறையில் விரைவூக்க அட்டை (ஸ்மார்ட் கார்டு) மூலம் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம் ........................................ 33
- மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகளும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன .................... 44


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


- சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்த ரூ.1,538 கோடி மதிப்பீட்டில் மாபெரும் திட்டம் .............. 50
- தமிழக அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி வருகிறது. ................................ 63


முதலாம் அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், புதுடெல்லியில் உள்ள தில்லி தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் திருவள்ளுவர் சிலையினை நாட்டினார். (4.12.2008)

நான்காம் அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், 15 கிராம ஊராட்சிகளின் தலைவர்களுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருதுகளை வழங்கினார். (19.12.2008)

# அறிவுலக மேதை ஒப்பற்ற ஞானி
# திருவள்ளுவர்

### புதுடெல்லியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை

தில்லி தமிழ்ச் சங்க வளாகத்தில் 4.12.2008 அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருவள்ளுவர் சிலையினை நாட்டி, முத்தமிழ்த் தோரண வாயிலுக்கு அடிக்கல் நாட்டி, தில்லி தமிழ்ச் சங்கம் சார்பில் வழங்கப்பட்ட செம்மொழிச் செம்மல் விருதினைப் பெற்றுக்கொண்டு ஆற்றிய விழாப் பேருரை:–






இன்று மிக மகிழ்ச்சிகரமாக – உணர்ச்சிமிக்க நிலையில் நடைபெற்று நிறைவேறியிருக்கின்ற இந்த விழாவில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக பெரு மகிழ்ச்சியடைகிறேன். நீண்ட காலமாக நான் டெல்லிக்கு வரும்போதெல்லாம் அல்லது டெல்லி தமிழ்ச் சங்கத்துநண்பர்கள் சென்னைக்கு வரும்போதெல்லாம் ஒரு கவலையைப் பரிமாறிக் கொள்வதுண்டு. திருவள்ளுவருடைய சிலை அமைந்திருக்கின்ற இடம் – அமைந்த இடம் – மிக மிக வருந்தத்தக்க கவலைப் படத்தக்க இடமாகக் கண்ணீர் விடத்தக்க இடமாக மாறிவிட்டது. எனவே வள்ளுவருடைய சிலையை இடம் மாற்றி அமைக்க வேண்டும், நாங்கள் மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் திருமதி. ஷீலா தீட்சித் அவர்களிடத்திலே இதைப்பற்றி சொல்லி அவருடைய ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம், இதைத் திறந்து வைக்க நீங்கள் வர வேண்டுமென்று அவர்கள் கேட்பதும், நானும் – நான் டெல்லிக்கு வருகிற நேரத்தில் நிச்சயமாக இந்த விழாவில் கலந்துகொள்கிறேன் என்று வாக்குறுதி




அளிப்பதும் மாறி மாறி நடைபெற்று – இன்றைக்கு அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்து – நாம் மகிழத்தக்க வண்ணம் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**மத்திய அரசுக்குப் பாராட்டு**

இந்த நிகழ்ச்சியிலே ''செம்மொழிச் செம்மல்'' என்ற ஒரு விருதினையும் இந்த டெல்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். செம்மொழித் தகுதியை வழங்கியவர்கள் யார் என்ற ஆய்விலே ஈடுபட்டால் நம்முடைய மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. ப.சிதம்பரம் அவர்கள் உள்ளிட்ட மத்திய அரசிலே உள்ளவர்கள்தான் தமிழுக்கு செம்மொழி என்ற தகுதி இருக்கவேண்டுமென்று தமிழ் அறிஞர்கள் பலரும் கேட்டபோது, தட்டாமல் அதனைத் தந்து – நம்மை மகிழ்வித்திருக்கிறார்கள். எனவே இதைப் பெறுவதற்காக வாதிட்ட என்னை நீங்கள் பாராட்டுவதற்குப் பதிலாக – இதை வழங்கிய மத்திய அரசுக்கு உங்களுடைய பாராட்டுதலை, வாழ்த்துக்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் இந்தச் செம்மொழி என்ற தகுதி தமிழுக்கு வரவேண்டுமென்று நூற்றாண்டுகளுக்கு முன்பு குரல் கொடுத்தவர் சூரியநாராயண சாஸ்திரி என்கிற பரிதிமாற்கலைஞர். பரிதிமாற்கலைஞர் தொடங்கியதை – இந்தக் கலைஞன் வந்து நிறைவேற்றவேண்டும் என்று இருந்திருக்கிறது போலும். ஆனால் அந்தப் பரிதிமாற் கலைஞருடைய வாழ்க்கையை, அவருடைய குடும்பத்தை, அவர் வாழ்ந்த விளாச்சேரி என்ற ஊரை இவைகளையெல்லாம் நினைவுகொள்ள வேண்டுமென்று கடந்த ஆண்டு மதுரைக்கு அருகிலே உள்ள விளாச்சேரி கிராமத்திற்கே சென்று அவருடைய வீட்டையும் அரசுடைமையாக ஆக்கி – அவர் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக ஆக்கி அவருக்கு மேலும் புகழ் சேர்க்கின்ற பணியிலே நான் ஈடுபட்டேன் என்றாலுங்கூட – இவற்றையெல்லாம்விட என்றென்றும் வைத்து பாதுகாக்கத்தக்க ஒரு பதக்கமாக ஒரு கடிதம் டெல்லியிலேயிருந்து எனக்கு அனுப்பப்பட்டது.

**செம்மொழிச் செம்மல்**

அந்தக் கடிதத்தில் செம்மொழித் தமிழுக்காக – அந்தத் தகுதியைப்பெற பல பேர் பாடுபட்டார்கள் என்றாலுங்கூட, அதற்காகப் போராடி வெற்றி பெற்றவர் யாரென்றால், அதற்கு வரலாற்றில் உன்னுடைய பெயர்தான் இடம் பெறும் என்று எனக்குக் கடிதம் எழுதினார் ஒருவர் – அவர் வேறு யாரும் அல்ல – நம்முடைய திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள்தான் அந்தக் கடிதத்தை எனக்கு எழுதியிருந்தார்கள். அதை நான் இப்போது நீங்கள்

அளித்த செம்மொழிச் செம்மல் என்ற பட்டயத்தைப் போல – அப்படிப்பட்ட ஒரு கடிதம் அது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவருடைய சிலை திறப்பு விழா என்று இங்கே அச்சியற்றி அறிவிப்புத் தராமல் – சிலை நாட்டு விழா என்று அச்சியற்றப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால் சிலை அமைப்பு விழா வேறு – சிலை நாட்டு விழா வேறு – இந்தப் பெயரை இந்தச் சொல்லைப் பயன்படுத்தியது நம்முடைய தம்பி கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள்தான். வேறு ஒரு இடத்தில் இருந்த சிலையை உரிய இடத்திலே கொண்டுவந்து வைப்பதில் இதை சிலை திறப்பு விழா என்று சொல்வதற்குப் பதிலாக – சிலை நாட்டு விழா என்று சொல்வதே பொருத்தம் என்று அவர் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தச் சொல்லி, டெல்லி தமிழ்ச் சங்கத்தினரும் அதை நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வைரமுத்து பேசும்போது சொன்னார். நாங்கள் காளிதாசனைப் பாராட்டுகிறோம், நீங்கள் கம்பரை மறந்து விட்டீர்களே என்று இந்தியாவிலே தெற்கு – வடக்கு என்பதைச் சுட்டிக்காட்டி தெற்கே திருவள்ளுவர் பாராட்டப்படுகிறார், ஆனால் வடக்கே திருவள்ளுவர் பாராட்டப்படவில்லை என்பதை ஆதங்கத்தோடு இங்கே குறிப்பிட்டார். நம்முடைய உள்துறை அமைச்சர் இங்கே இருக்கிற நேரத்தில் அவருக்கும் தெரியும், இருந்தாலும் நினைவுபடுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். டெல்லியில் உள்ள தமிழர்கள் – தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வள்ளுவருடைய சிலையை இங்கே நாட்டியிருக்கிறீர்கள். நன்றி. ஆயிரம் வணக்கம், பாராட்டுக்கள்.

அதே நேரத்தில் பெங்களூரிலே ஒரு திருவள்ளுவருடைய சிலை. கிட்டத்தட்ட இருபதாண்டுக் காலமாகிறது, அந்தச் சிலை அமைக்கப்பட்டு. இந்தச் சிலை எங்கேயோ குப்பையிலே இருந்தது என்று சொன்னார்களே, அது குப்பையிலே கூடக் கிடக்கவில்லை. அது பீடத்திலே அமர்த்தப்பட்டு அது யாருடைய சிலை என்று தெரியாமலே – துணி சுற்றப்பட்டு இருபதாண்டுக் காலமாக – பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் வாயிற்புறத்திலே அய்யன் திருவள்ளுவருடைய சிலை நின்று கொண்டிருக்கின்றது.

**குமரியிலிருந்து டெல்லிவரை**

இந்த அய்யன் திருவள்ளுவர் என்கின்ற அந்தச் சொற்றொடர் கூட, அவருடைய சிலையை குமரி முனையிலே திறக்கின்ற – 133 அடி உயரமுள்ள சிலையைத் திறந்து அந்த விழாவிலேதான் நான் சொன்னேன் – இனிமேல் நான் வள்ளுவர் சிலை, திருவள்ளுவர் என்றெல்லாம் அழைக்கமாட்டேன், என்னோடு சேர்ந்து நீங்களும் நான் அழைப்பதைப்போல அழைக்க வேண்டும், நம்முடைய அய்யன் இவர்தான் – எனவே அய்யன் திருவள்ளுவர் என்று நான் அன்றைக்குத்தான் சொன்னேன். அந்த அய்யன் கன்னியாகுமரியோடு நிற்காமல், டெல்லி வரையில் வந்திருப்பதை இங்கே பேசிய நம்முடைய நண்பர்கள் எல்லாம், அய்யன் திருவள்ளுவர், அய்யன் திருவள்ளுவர் என்று சொன்னதிலிருந்து நான் மிகுந்த அக மகிழ்ச்சி கொள்கிறேன்.

அந்தச் சிலை பெங்களூரிலே தமிழ்ச் சங்கத்தின் வாசலில் வைக்கப்பட்டு – இருபதாண்டுக் காலத்திற்கு மேல் ஆகிறது. அந்தச் சிலையைத் திறந்தால், கலவரம் வரும், திறக்க முடியாது என்று ஒரு சாரார் இன்னமும் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், இன்னமும் கலவரத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அங்கே நம்முடைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் போன்ற ஒருவர் பொறுப்புக்கு வராத காரணத்தாலோ என்னவோ அங்கே திருவள்ளுவருடைய சிலை மூடப்பட்டே கிடக்கிறது. பார்த்தால் வயிறு எரிகிறது. மனம் கூசும். நாம் எல்லாம் – அவருக்கு வழித் தோன்றல்கள்.

நம்மை வழி நடத்திய வள்ளுவர் பெருந்தகை உலகம் முழுவதும் உள்ள பெரும் புலவர்களால் பலமொழி வல்லுநர்களால் – மொழிபெயர்க்கப்பட்ட நூலுக்குச் சொந்தக்காரர் – அறிவுலக மேதை – ஒப்பற்ற ஞானி – அவருடைய சிலை பெங்களூரில் தமிழ்ச் சங்கத்தின் வாயிற் புறத்தில் மூடப்பட்ட நிலையில் துணி சுற்றப்பட்ட நிலையில் அனாதையாக நின்று கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. நான் உங்களுக்குச் சொல்கிறேன். இருபதாண்டுக் காலமாக பெங்களூரிலே எந்த விழாவிற்கும் என்னுடைய கட்சி சார்பிலே உள்ளவர்களே அழைத்தாலும் கூட, நான் அங்கே சூளுரைத்திருக்கிறேன். இந்தச் சிலை இங்கே திறந்து வைக்கப்படுகிற வரையில் நான் பெங்களூருக்கு வந்து எந்த விழாவிலும் கலந்து கொள்ள மாட்டேன் என்று சூளுரைத்திருக்கிறேன்.

இது பெங்களூரிலே இருக்கின்ற அரசுகளுக்கும் தெரியும். மத்திய அரசுக்கும் தெரியும். இதுவரை தெரியாமல் இருந்தால் இன்றைக்கு நான் பக்கத்தில்

அமர்ந்திருக்கின்ற நம்முடைய அருமை நண்பர் சிதம்பரம் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். நண்பர் சிதம்பரம் அவர்கள் இந்த உணர்வைப் புரிந்து கொள்ளாதவர் அல்ல. எனவே உள்துறை அமைச்சருடைய முதல் பணியாக வேறு எந்தப் பணி இருந்தாலும் – அவைகளையும் பார்க்கட்டும் – முதல் பணியிலே முதலாவது பணி பெங்களூர் தமிழ்ச் சங்கத்து வாயிலிலே நிற்கின்ற திருவள்ளுவருடைய சிலையைத் திறந்து வைப்பதுதான் – திறந்து வைக்காவிட்டாலும் பரவாயில்லை, அந்த அழுக்குத் துணியை அகற்றினால் போதும் – என் அய்யன் வள்ளுவருடைய சிறப்பை அவருடைய சிரிப்பை உலகம் உணர்ந்து கொள்ள அந்தப் பெருமையை உருவாக்க வேண்டும். இதை நான் நாடு தழுவிய அளவிலே அல்ல – நட்பு தழுவிய அளவிலே – நான் தமிழ் மீது கொண்டிருக்கின்ற காதலின் அளவிலே நான் தமிழ் நெஞ்சங்களின்பால் வைத்திருக்கிற பாசத்தின் அளவிலே, அன்பின் அளவிலே, யாரிடம் சொன்னால், மறக்காமல் நடக்குமோ அப்படிப்பட்ட நண்பரிடத்தில் – அவர் இந்தியாவிலே இன்றைக்கு உள்துறை அமைச்சர் – மக்களைப் பாதுகாக்கும் அமைச்சர் – நீங்கள் தமிழர்களுடைய நாகரிகத்தை – வள்ளுவருக்கு ஏற்பட்ட அந்த அப கீர்த்தியை துடைப்பதற்கு அதைப் பாதுகாத்திடுங்கள் என்று இந்த விழாவிலே – இது அமைச்சர்கள் நாங்கள் மூன்றுபேர் கலந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் நீங்கள் யாரும் கோரிக்கை வைக்கவில்லை, நீங்கள் வைக்காத கோரிக்கையை நான் கோரிக்கையாக வைத்து – வள்ளுவரை வாழவிடுங்கள் பெங்களூரில் என்று நம்முடைய உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டு – அதற்கு டெல்லியிலே இருக்கின்ற தமிழ்ச் சங்கத்தினர் – இங்கே நீங்கள் சிலையை நாட்டியது பெரிதல்ல – சிதம்பரம் அவர்களுக்கு இதை நினைவூட்டி, அந்தப் பணியினை திறம்படச் செய்து தமிழ் மக்களின் பாராட்டுக்களைப் பெறவேண்டும். அப்படி பாராட்டுகிற முதல் ஆளாக நான் இருப்பேன் என்பதையும் தெரிவித்து – இந்தச் சிலையைத் திறந்து வைக்க நீங்கள் என்னைப் பணித்தமைக்காக டெல்லி தமிழ்ச் சங்கத்தாருக்கு என்னுடைய அன்பை, வணக்கத்தை தெரிவித்து இந்த அளவோடு விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# இந்தியாவிலேயே மின்னணுவியல் நிர்வாகத்தில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது

நடப்பு ஆண்டுக்கு இந்தியா முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வின்படி (சர்வே), மின்னணுவியல் நடைமுறைகளிலும், குடிமக்களின் மனநிறைவிலும் தமிழ்நாடு மிகச் சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

தொழில் வடிவமைப்பு மையம் 'டேட்டாக்வெஸ்ட்' இதழ் ஆகியவற்றால் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையில், மாநிலத்தின் மின்னணுவியல் நிருவாகத் தொலைநோக்கு, ஒதுக்கீடு மற்றும் அமலாக்கம், குடிமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கருத்துகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், மிகச்சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு முதல் இடத்திலும், அடுத்த நான்கு இடங்களில் இமாச்சலப்பிரதேசம், டெல்லி, அரியானா, ஆக்ரா ஆகியவைகளும் இடம்பெற்றுள்ளன. இந்த முழு அறிக்கையும் 'டேட்டாக்வெஸ்ட்' டிசம்பர் 15 இதழில் வெளியிடப்படும்.

முதல் ஐந்து மாநிலங்களில்தான் குடிமக்கள் மனநிறைவும் மிக அதிக அளவில் உள்ளது. மின்னணுவியல் நிருவாகம் நல்ல முறையில் செயல்பட்டால் சாதாரணமான இந்தியர்களாலும் பாராட்டப்படுகிறது.

இந்த ஆய்வின் முக்கியமான அம்சம் என்ன வென்றால், தகவல் தொழில்நுட்பத் தொழில் முன்னணியில் உள்ள கர்நாடகா மாநிலம் இத்தகைய உயர்தொழில்நுட்ப சுற்றுச்சூழலின் பயன்களை அதன் குடிமக்களுக்கு அளிப்பதில் பின் தங்கியுள்ளது. கடந்த ஆண்டு 9வது இடத்திலிருந்து இந்த ஆண்டு 15வது இடத்துக்குப் பின் தங்கிவிட்டது. கர்நாடகா, கோவா போன்ற மாநிலங்களில் அரசியல் மாற்றங்கள் மிகவேகமாக நடப்பது அம்மாநிலங்களின் செயல்பாட்டைப் பாதிக்கிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

பலவிதமான அளவுகோள்களில் குடிமக்கள் மனநிறைவைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்து கேரள மாநிலம் 18வது இடத்தில் உள்ளது. பட்டியலிடப்பட்டுள்ள 21 மாநிலங்களில் கடைசியில் உள்ள மூன்று மாநிலங்கள் மேற்குவங்கம், ஜார்கண்ட், பீகார் ஆகியவையாகும்.

அரசுத்துறைகளில் நல்ல வேலைகள் இரண்டு முறை செய்யப்படுவது மிக அதிகமாக உள்ளது என்று கூறுகிறார் 'டேட்டாக்வெஸ்ட்' இதழின் தலைமை ஆசிரியர் திரு. தே. ராய், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வாக்காளர் அடையாள அட்டை, வருமான வரிக்கான 'பேன்' (PAN) அட்டைகள், ரேஷன் அட்டைகள் என்று குடிமக்களைப் பற்றிய விவரங்கள் பலமுறை எடுக்கப்பட்டு கோடிக் கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது. மாநிலங்கள் அவரவர்களுடைய விவரங்களைத் திரட்டிக் கொண்டு மத்திய அரசுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதை நம்புவதில்லை. "இந்தியாவில் மின் அணுவியல் நிர்வாகம் இன்னும் நீண்ட தொலைவு போக வேண்டியுள்ளது" என்று அவர் கூறுகிறார். ❖

# புயலால் ஏற்பட்ட சேதத்தை சீர்செய்ய தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி வழங்க வேண்டும் !

புதுடெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம்
தமிழக திட்டங்கள் குறித்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் கோரிக்கை



புதுடெல்லி சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4.12.2008 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களிடம் தமிழக திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவினை அளித்தார். அதில் தமிழகத்தில் 8 புதிய இரயில்வே திட்டங்களை மாநில அரசின் பங்களிப்பின்றி நிறைவேற்ற மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், மாநிலத்தில் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கான செலவில் 90 சதவிகிதத்தை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த திட்ட அறிக்கை விவரம் வருமாறு :–

**'நிஷா' புயலால் ஏற்பட்ட மிகப்பெரும் சேதங்களை தற்காலிகமாக, நிரந்தரமாக சீர்செய்ய தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து உடனடி நிதியுதவி அளிக்க வேண்டுகோள்:**

கடந்த நவம்பர் மாதம் நிஷா புயல் காற்றால் தமிழ்நாடு பெரும் மழையைச் சந்தித்தது. இந்தப் புயல் மாநிலம் முழுவதும் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக

கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகியவற்றில் புயலால் ஏற்பட்ட சேதம் மிகக்கடுமையாக உள்ளது. தற்காலிக மீட்புப் பணிகளுக்காக ரூ.658 கோடி மற்றும் நிரந்தர மீட்புப் பணிகளுக்காக ரூ.1,305 கோடி என மொத்தம் ரூ.1,963 கோடி உதவியை மத்திய அரசிடமிருந்து கோரி ஒரு ஆரம்ப கட்ட மனு அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரசுத்துறைகளும் மேற் கொண்ட ஆரம்ப கணிப்பின் அடிப்படையில் அந்த மனு தயாரிக்கப்பட்டது. சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கையும், பயிர்கள் சேதமடைந்த நிலப்பரப்பும் மிக அதிகமாக இருப்பதால், மாவட்ட ஆட்சியர்களும், அரசுத்துறைகளும் தற்போது சேதங்களை மறுகணிப்பு செய்து தற்காலிக மீட்புப் பணிகளுக்கு தேவையான நிதி உதவி அதிகமாக இருக்கும் என்று கணித்துள்ளனர். எனவே நிவாரணத்துக்கும், தற்காலிக மீட்புப் பணிகளுக்கும் ரூ.1,500 கோடி வரை தேவைப்படும். மறுகணிப்பு செய்யப்பட்டவற்றை சேர்த்து விரைவில் மத்திய அரசிற்கு துணை மனு ஒன்று அனுப்பப்படும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசரத் தேவை இருப்பதால் இடைக்கால ஏற்பாடாக தமிழக அரசுக்கு தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து ரூ.1,000 கோடி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தமிழக அரசுக்கு மத்திய அரசின் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தின்படி ஈடு செய்ய கோரிக்கை:**

மத்திய அரசு 2008-09ஆம் ஆண்டு பட்ஜெட்டில் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்தது. அதன் விதிகளின்படி 1.4.1997 முதல் 31.3.2007 வரையிலான வேளாண் கடன்கள் தள்ளுபடி செய்யப்படத் தகுதியானவையாகும். தமிழக அரசு 31.3.2008 அன்று வரையிலான கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட வேளாண் கடன்கள் முழுவதையும் நிலுவையிலுள்ள வட்டியுடன் தள்ளுபடி செய்தது. இதையடுத்து கூட்டுறவு வங்கிகளுக்கு வரவேண்டிய தொகை தமிழக அரசால் ஐந்து தவணைகளில் ஈடு செய்யப்பட்டது. அதன்படி தமிழக அரசு இதுவரை ஈடாக ரூ.4,082 கோடி அளித்துள்ளது.

தமிழக அரசு ஏற்கெனவே 31.3.2006 வரையிலான வேளாண் கடன்களை தள்ளுபடி செய்து விட்டதால் தமிழகத்தால் மத்திய அரசின் தள்ளுபடியை முழுமையாகப்பெற முடியவில்லை. 31.3.2006-க்குப் பிறகு நிலுவையான ரூ.159.60 கோடி என்ற குறைவான தொகைதான் தகுதி பெற்றது. தமிழக அரசு வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்யாமல் இருந்திருந்தால் மாநிலம் மத்திய அரசின் திட்டத்திற்குத் தகுதி பெற்று கூடுதலாக ரூ.3,027.88 கோடி தொகையைப் பெற்றிருக்கும். இந்த நிலையில் மத்திய அரசு தமிழக அரசுக்கு ஈட்டுத்தொகையாக ரூ.3027.80 கோடி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(இது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர், மாண்புமிகு பிரதமருக்கு 18.11.2008 அன்று எழுதிய கடிதத்தின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

**மதிப்புக் கூட்டுவரி அமலாக்கத்தால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பிற்கு ஈடு:**

தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரியை 01.01.2007 முதல் அமலாக்கியுள்ளது. இதனால் இதர அனைத்து மாநிலங்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு 100/75/50 சதவீத அளவில் வழங்கப்பட்ட ஈட்டுத்தொகைக்கு மாறாக தமிழ்நாட்டுக்கு மதிப்புக்கூட்டுவரி இழப்பிற்காக 2007 ஆம் ஆண்டுக்கு 75 சதவீதம், 2008 ஆம் ஆண்டுக்கு 50 சதவீதம் என்ற அளவிலேயே ஈடு செய்யப்பட்டுள்ளது. இந்த 2009 ஆம் ஆண்டுக்கு 50 சதவீத ஈட்டுத்தொகை வழங்கப்படவேண்டும் என்று தமிழக அரசு கோரியுள்ளது.

இந்த ஈட்டுத்தொகை தவிர, 1.1.2007 முதல் ஆகஸ்ட் 2008 வரை மத்திய அரசுக்கு மத்திய விற்பனை வரி முறையாக அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிதிக் கோரிக்கைகள் வரையறுக்கப்பட்ட வடிவத்தில் அனுப்பப்பட்டு, நிதி அமைச்சகம் கோரிய இதர விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் வரவேண்டிய பெரும் தொகைகள் இன்னமும் மாநிலத்தில் பெறப்படவில்லை. தற்போது மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள வரவேண்டிய தொகைகள் வருமாறு:

(அ) ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ள மதிப்புக் கூட்டுவரியில் இழப்புத் தொகை 2007ஆம் ஆண்டுக்கு ரூ.4,611 கோடியும், 2008 ஆகஸ்ட் வரை ரூ.3,160 கோடியும் ஆகும். அனுமதிக்கப்பட்டுள்ள விதிகளின்படியே 2007ஆம் ஆண்டு 75 சதவீதம், 2008ஆம் ஆண்டு 50 சதவீதம் என்ற அளவிலேயே தகுதியான இழப்பீடு முறையே ரூ.3,383 கோடி மற்றும் ரூ.1,575 கோடியாகும். இந்த மொத்த தகுதியான இழப்பீடான ரூ.4,958-இல் இதுவரை ரூ.2,318 கோடி மட்டும் அளிக்கப்பட்டு இந்த வகையில் ரூ.2,318 கோடி நிலுவையில் உள்ளது.

(ஆ) மாநிலத்தின் மொத்த மத்திய விற்பனை வரி ஈட்டுத்தொகையாக கோரப்பட்டுள்ளது. 1.4.2007 முதல்

31.7.2008 வரை –ரூ.1,429 கோடியாகும். இதில் இதுவரை ரூ.647 கோடிதான் அளிக்கப்பட்டு நிலுவையாக ரூ.782 கோடி உள்ளது.

இவ்வாறு இன்னமும் மொத்தமாக நிலுவையிலுள்ள இழப்பீடுத் தொகை ரூ.3,100 கோடியாகும். இதை விரைவில் அளிக்க வேண்டும்.

**மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் திட்டமிடப்பட்டுள்ள சென்னை கிழக்கு கடற்கரைச் சாலை நெம்மேலியில் 100 எம்.எல்.டி கொள்திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்:–**

சென்னை மாநகருக்குக் குடிநீர் விநியோகம் பருவமழையைச் சார்ந்து இருப்பதால் அடிக்கடி குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. குடிநீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யவும், வறட்சி நிலைமையிலும் சென்னை மாநகரின் வளர்ந்துவரும் குடிநீர்த் தேவையைச் சமாளிக்கவும் மத்திய நிதியமைச்சர் 2004– 05ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் ரூ.1,000 கோடி செலவில் சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் நிறுவப்படும் என்று அறிவித்தார். மீண்டும் 2008–09ஆம் ஆண்டு பட்ஜெட்டில் இதற்காக 2008–09ஆம் ஆண்டில் ரூ.300 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார்.

இதன் அடிப்படையில், சென்னைக்கு அருகிலுள்ள நெம்மேலியில் 100 எம்.எல்.டி. கொள்திறன் கொண்ட திட்டம் அமைக்கப்பட திட்டமிடப்பட்டது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதை 27.01.2008 அன்று மத்திய அரசிடமிருந்து மொத்த செலவிற்கு முழுமையான நிதியுதவி வழங்கக்கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர், மத்திய நிதியமைச்சரிடம் வழங்கினார்.

இந்த அறிக்கையைப் பரிசீலித்து சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து 04.04.2008 அன்று மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல் அமைப்பின் ஆலோசகர் ரூ.908.28 கோடி மதிப்பிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கினார். இப்பிரச்சினை 17.7.2008 அன்று புதுடெல்லியில் செலவின நிதிக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இத்திட்டத்துக்கு ரூ. 871.24 கோடி நிதி உதவி பரிந்துரைக்கப்பட்டது. இதற்கிடையில், தேசிய கடற்கரை மண்டல நிருவாகக் குழுமம் அதன் 26.11.2008 கூட்டத்தில் அனுமதி அளித்துள்ளது.

இந்தத் திட்டம் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் முன் அதன் அனுமதிக்காக வைக்கப்பட வேண்டியுள்ளதை விரைவுபடுத்த வேண்டப்படுகிறது.

**மாநிலத்துக்குள் நதிகள் இணைப்பு – நிதி உதவி**

நாட்டில் தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை மாநிலங்களில் ஒன்றாகும். போதுமான பாசன வசதியை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே மாநிலத்தில் வேளாண்துறையில் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் எந்த முயற்சியும் வெற்றி பெறும். இது தொடர்பாகத்தான், நாட்டில் தண்ணீர் உபரியாக உள்ள நீர்ப் படுகைகளிலிருந்து வீணாகப் போகும் நீர் ஆதாரங்களை நீர்த்தேவை உள்ள வறண்ட பகுதிகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய நதிகளை இணைக்கவேண்டும் என்று தமிழகம் வலியுறுத்தி வருகிறது.

கடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில், நதிகளை இணைக்க வேண்டிய அவசரத் தேவை வலியுறுத்தப்பட்டது. இதை நிறைவேற்றுவதற்கான திட்டத்தையும் 11ஆவது ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துள்ளது. இதற்கிடையில், மாநிலத்துக்குள் கிடைக்கும் நீரை விரயமாகாமல் பயன்படுத்தும் வகையில் மாநிலத்துக்குள் உள்ள நதிகளை இணைக்கும் திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

துரிதப்படுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்திற்கு தற்போதுள்ள வழிகாட்டும் நெறிமுறைகள் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களையும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் வழிவகுக்கிறதே தவிர மாநிலங்களுக்குள்ளான நதிகளை இணைக்கும் திட்டங்களுக்கு நிதி வழங்க வழிவகை செய்யவில்லை.

எனவே, தேசிய நதிகளை இணைக்கும் அடுத்த பெரிய இலட்சியத்தை நோக்கி இத்தகைய திட்டங்கள் சிறந்த படிக்கல்லாக அமையும் என்பதால் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் வகையில் மேற்கூறிய வழிகாட்டும் நெறிமுறைகள் மாற்றப்படவேண்டும்.

இதற்கிடையில், பிரதானமாக வெள்ளநீரைக் கொண்டு செல்லவும், வெள்ளத்தைத் தடுக்கும் நடவடிக்கைக்காகவும், நீரை விரயமாகாமல் வறட்சிப் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் மாநிலத்துக்குள் உள்ள நதிகளை இணைக்க தமிழ்நாடு அரசு முன் முயற்சி எடுத்துள்ளது. அதன்படி கடந்த ஜூன் மாதம் தமிழக அரசு கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களை 90 சதவீத நிதி உதவி கோரி மத்திய அரசின் நீர் ஆதாரங்கள் அமைச்சரவைக்கு அனுப்பியுள்ளது.

(அ) கீழ்க்கண்ட கட்டங்களின் அடிப்படையில் காவிரி (கட்டளை) அக்னியாறு, கோரலாறு, பம்பாறு, வைகை, குண்டாறு (255 கி.மீ.) இணைப்புத் திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- தற்போதுள்ள கட்டளை மதகை காவிரி நதியின் குறுக்கே தடுப்பணையாக உயர்த்துதல்,
- மணிமுத்தாறு வரை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பம்பாறு ஆகியவற்றை (169 கி.மீ.) இணைப்பது,
- மணிமுத்தாறு, வைகை, குண்டாறு (86 கி.மீ.) இணைப்பு மற்றும்

(ஆ) தாமிரபரணி, கருபேணியாறு, நம்பியாறு ஆகியவற்றை இணைத்து (ரூ.369 கோடி செலவு) கன்னடியான் கால்வாயிலிருந்து வறட்சிப் பகுதிகளான திசையன்விளை, சாத்தான்குளம் ஆகியவற்றிற்கு வெள்ளநீர் கொண்டு செல்லும் வாய்க்கால் அமைப்பது.

தற்போது இந்த இரண்டு திட்டங்களும் மத்திய தண்ணீர் ஆணையம், நீர் ஆதார அமைச்சகம் ஆகியவற்றில் நிலுவையிலுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியை விரைவில் வழங்கி, திட்டச் செலவின் 90 சதவீதத்தை வழங்கக் கோருகிறோம்.

**தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்கள் – முழுச் செலவையும் மேற்கொள்ள வேண்டுகோள் :**

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட எட்டு புதிய இரயில் தடங்களை அமைக்க உத்தேசித்து மாண்புமிகு மத்திய ரயில்வே இணை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

1) ரூ. 288.87 கோடி செலவில் ஈரோடு – பழனி (91.05 கி.மீ.) புதிய தடம்,

2) ரூ. 622.52 கோடி செலவில் சென்னை (பெருங்குடி) யிலிருந்து மாமல்லபுரம், புதுச்சேரி வழியாக கடலூர் வரை புதிய தடம்,

3) ரூ. 210 கோடி செலவில் நீடாமங்கலத்திலிருந்து மன்னார்குடி வழியாக (70 கி.மீ.) பட்டுக்கோட்டை வரை புதிய தடம்,

4) ரூ. 160 கோடி செலவில் தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை (50 கி.மீ.) புதிய தடம்,

5) ரூ. 108 கோடி செலவில் மொரப்பூர் – தருமபுரி (36 கி.மீ.) புதிய தடம்,

6) ரூ. 330 கோடி செலவில் திண்டுக்கல் – குமுளி (110 கி.மீ.) புதிய தடம்,

7) ரூ. 281.20 கோடி செலவில் அரியலூர் – தஞ்சாவூர் (97.78 கி.மீ.) புதிய தடம்,

8) ரூ. 198.27 கோடி செலவில் அரியலூர் – தஞ்சாவூர் புதிய தடம்.

இந்தத் திட்டங்கள் பொருளாதார ரீதியில் இலாபகரமானவை அல்ல என்ற போதிலும், இந்தத் தடங்கள் செல்லும் பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க இவை தேவை என்றும் அவர் எழுதியுள்ளார். புதிய திட்டங்களுக்கு ரெயில்வே துறையிடம் நிதியிருப்புக் குறைவாக இருப்பதால் மேற்கூறிய திட்டங்களின் செலவின் 50 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ள தமிழக அரசின் விருப்பத்தை பரிசீலிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

போடி வழியாகத் திண்டுக்கல் – குமுளி, திருவண்ணாமலை – ஜோலார்பேட்டை, மன்னார்குடி வழியாக பட்டுக்கோட்டை மன்னார்குடி புதிய திட்டங்களுக்கு கொள்கை அளவில் அனுமதி கேட்டு திட்டக் கமிஷனிடம் கோரியபோது, இவற்றின் செலவைப் பகிர்ந்து கொள்வது பற்றி மாநில அரசின் ஒப்புதலைப் பெற்ற பிறகு கொள்கை அளவில் இந்தத் திட்டங்களைப் பரிசீலிக்கும்படி திட்டக் கமிஷன் கூறியுள்ளதாக 24.9.2008 அன்று இரயில்வே வாரியத்தின் பொறியியல் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இரயில்வே வாரியம் மேற்கூறிய புதிய திட்டங்களுக்காக எடுத்த முயற்சிகளைப் பாராட்டி தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கடிதம் எழுதினார். ஏற்கெனவே வேளச்சேரி முதல் பரங்கிமலை வரை பறக்கும் இரயில் மூன்றாவது கட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு பெரும் செலவை ஏற்றுக் கொண்டுள்ளதால் இந்தப் புதிய திட்டங்களின் செலவில் 50 சதவீதத்தை மேற்கொள்வது பெரும் சுமையாக அமையும் என்று எழுதியுள்ளார். சமீப ஆண்டுகளாக இரயில்வேதுறை நல்ல இலாபம் ஈட்டி வருவதால், இந்தத் திட்டங்களை இரயில்வேதுறை முழுச் செலவில் மேற்கொள்வதை பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாநில அரசின் பங்களிப்பை வலியுறுத்தாமல் இரயில்வே நிருவாகமே மேற்கூறிய இரயில்வே திட்டங்களை மேற்கொள்ள மாண்புமிகு பிரதமர் அவர்களின் தலையீடு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. ❖

# வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் 500 கோடி ரூபாய்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் அறிவிப்பு வருமாறு:

**4.12.2008** அன்று டெல்லி சென்றிருந்தபோது – மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி. சோனியா காந்தி, மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் ஆகியோரை நேரில் சந்தித்து – அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மழை, வெள்ள சேதாரம் பற்றியும் – உயிரிழப்பு மற்றும் பயிரிழப்புகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்ததோடு – முதற்கட்டமாக ஆயிரம் கோடி ரூபாய் உதவி நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அதற்கிடையே பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் – ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைச்சர்களின் குழுக்களை அனுப்பி, சேத விவரங்களை நேரில் அறிந்து வரச் சொன்னதின் பேரில் – அவர்களும் அவற்றையெல்லாம் அறிந்து வந்து இன்றைய தினம் என்னிடத்தில் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

விவசாயிகளின் பயிர் பாழானது மாத்திரமல்லாமல், அவர்களுடைய உடைமைகள், கால்நடைகள், வாழ்வாதார தேவைகளான பல்வேறு தானியங்களும் பாழடைந்து போயிருக்கின்ற செய்தியையும், பெருமளவுக்கு சாலைகள் பழுதடைந்திருக்கின்ற நிலையையும் அவர்கள் விளக்கிக் கூறிருக்கிறார்கள். இதற்கெல்லாம் – முழுவதும் பாதிக்கப்பட்ட, ஓரளவு பாதிக்கப்பட்ட, குறைவாகப் பாதிக்கப்பட்ட – என்ற மூன்று நிலை பாதிப்புகளையும் கணக்கெடுக்கவும், அதற்கேற்ற வாறு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் – ஆலோசித்து செயல்படுவதற்கு வருகிற 8ஆம் தேதி பாதிக்கப்பட்ட மாவட்டகளான கடலூர் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, இராமனாதபுரம், திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைத் தலைமைச் செயலகத்தில் கூட்டியிருக்கிறேன்.

அதற்கிடையே ஆங்காங்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக நிவாரணங்கள் வழங்கப்பட்டதையும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இன்றையதினம் அறிந்து கொண்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய 8ஆம் தேதி கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்து முடிவெடுத்து செயல்படுவதற்கு முன்பு பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளும், ஏழையெளிய மக்களும், குடிசை வாசிகளும், வீடிழந்தோரும் நிவாரணம் பெறுகின்ற அளவிற்கு அவசர அவசியம் கருதி மொத்தமாக 500 கோடி ரூபாய் மேலும் உதவி நிதியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மத்திய அரசு நம்முடைய கோரிக்கையையேற்று நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.12.2008** அன்று நடைபெறும் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரையில் நடைபெற்றுள்ள நிவாரணப் பணிகளையும் இனி நடைபெறவேண்டிய நிவாரணப் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும் ஆய்ந்து தொடர்ந்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

### அண்ணாவின் பொன்மொழிகள்



**பழஞ் சிறப்பைப் பெறும் பணி**

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும், உதயசூரியனின் ஒளியையும் அனுமதித்து நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும். அத்தகைய பொலிவு மிக்க உருவம்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப் பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.

# பெருமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், விவசாயிகளுக்கும் தமிழக அரசு செய்து வரும் வெள்ள நிவாரணப் பணிகள்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் விளக்கம்**

அமைச்சரவைக் கூட்டத்தில் – நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக நூறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் – மழையினால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கவும் – பகுதியாகவோ முழுவதுமாகவோ பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கவும் முடிவெடுக்கப்பட்டதோடு, அதற்கடுத்த நாளே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடலூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும்; வெள்ளப் பகுதிகளுக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டு, அவர்களும் அவ்வாறே அந்தப் பகுதிகளுக்கு விரைந்து பணிகளை மேற்கொண்டனர்.

கடந்த நவம்பர்த் திங்கள் இறுதியில் தமிழகம் முழுவதும் சில நாட்கள் தொடர்ந்து பலத்த மழை பெய்து, அதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்று தெரிந்தவுடன் 26–11–2008 அன்றே தலைமைச் செயலாளரை அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு தொடர்பு கொண்டு, உடனடியாக நிவாரணப் பணிகளிலே ஈடுபட வேண்டுமென்றும், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட வேண்டுமென்றும் கூறினேன். பல்வேறு பல்கலைக்கழகங்களின் சார்பில் நடைபெறவிருந்த





தேர்வுகள் எல்லாம் இரத்து செய்யப்பட்டன. மீனவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது. அன்றைய தினம் நான் விடுத்த அறிக்கையில் மாவட்ட அமைச்சர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வெள்ள நிவாரணப் பணிகளிலே உடனடியாக ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்திட, சென்னை மாநகரத்தில் மண்டலந்தோறும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டதோடு, பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு அன்றே அனுப்பப்பட்டனர். 27ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் – வெள்ள நிவாரணப் பணிகள்தான் அவசரப் பொருளாகச் சேர்க்கப்பட்டு, அது குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

28.11.2008 அன்று விடியற்காலை 4 மணி அளவில், மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச்

சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் எல்லாம் நானே நேரடியாகத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, அவர்களையெல்லாம் நிவாரணப் பணிகளிலே விரைந்து ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நான் அவ்வாறு 4 மணி அளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்ட காரணத்தினால், திருவாரூர் மாவட்ட ஆட்சியருடன் மீண்டும் 6 மணி அளவிலே பேச முற்பட்டபோது, அவர் அம்மையப்பன் என்ற ஊரிலே வெள்ளப் பகுதிகளிலே பணியாற்றிக் கொண்டிருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்தது.

தொலைபேசியிலே பேசியதோடு விட்டு விடாமல், அதே நாள் காலையில் சென்னை மாநகரிலே பெரு மழையினால் பாதிக்கப்பட்ட கோட்டூர்புரம், காந்தி மண்டபம், சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், பெரம்பூர் பகுதிகளுக்கு நானே நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நிவாரணப் பணிகளில்

அந்தக் குழுவினரும் என்னிடம் உடனடியாக வந்து விவாதித்துள்ளார்கள்.

29.11.2008 அன்று மீண்டும் தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய்த்துறைச் செயலாளர் ஆகியோரிடம் நிவாரணப் பணிகள் குறித்து நீண்ட நேரம் விவாதித்தேன். அதன் விளைவாக, பகுதியாகவோ, முழுமையாகவோ பாதிக்கப்பட்ட வீடுகளுக்குத் தலா 2,000 ரூபாய் கொடுப்பதன்னியில், பத்து கிலோ அரிசியும் வழங்க வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த அறிவிப்பும் செய்யப்பட்டு அவ்வாறே வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பகுதியாகவோ முழுமையாகவோ பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளுக்கு மட்டும்தான் நிவாரணம் வழங்கவேண்டுமென்ற மத்திய அரசின் வழிகாட்டு





விரைந்து ஈடுபட வேண்டுமென்று அதிகாரிகளை அறிவுறுத்தி ஊக்கப்படுத்தினேன். என்னைப் போலவே வட சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், தென் சென்னையில் கோடம்பாக்கம், வேளச்சேரி, கிண்டி பகுதிகளில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களும், மத்திய சென்னையில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும் சென்று நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டனர். அதைப்போலவே மற்ற மாவட்ட அமைச்சர்கள் எல்லாம் தங்கள் தங்கள் மாவட்டங்களிலே இத்தகைய பணிகளிலே ஈடுபட்டுள்ளார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை எடுத்திட அமைச்சரவை துணைக் குழு ஒன்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில் அமைத்து, அதன் முதல் கூட்டமும் 3.12.2008 அன்று நடைபெற்று,

நெறிமுறைகளுக்கு கூடுதலாக – ஊரகப் பகுதிகளில் வெள்ளத்தால் சூழ்ந்த அனைத்து வீடுகளுக்கும் பாகுபாடின்றி தலா ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு– அவ்வாறே அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கிடவும்; நகர்ப்புற பகுதிகளிலும் மழை நீர் – வெள்ளம் புகுந்த அனைத்து வீடுகளுக்கும் வேறுபாடு கருதாமல் ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கிடவும்; சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளிலேயும் மழை நீர் – வெள்ளம் புகுந்த அனைத்து வீடுகளுக்கும் தலா இரண்டாயிரம் ரூபாய் வீதம் வழங்கிடவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதுபோல மழை வெள்ளம் ஏற்படும்போது எந்த அளவிற்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசு வரையறை செய்து ஆணையாகவே பிறப்பித்துள்ளது. நமது மாநிலத்தில் மத்திய அரசின் அறிவுரைக்கு மேலாகவே கூடுதலாக நிதி உதவிகள் செய்யப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் –



**சிறு குறு விவசாயிகளுக்குப் பாசன வசதியுள்ள இடங்களில் எக்டேர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று மத்திய அரசு கூறியுள்ளது. ஆனால் தமிழகத்தில் கடந்தமுறை எக்டேர் ஒன்றுக்கு 7,500 ரூபாய் அளவிற்கு நஷ்டஈடு வழங்கியிருக்கிறோம்.**

இதே சலுகையை தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் பயிர் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கும் நீடித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சலுகையைக்கூட மத்திய அரசின் விதிமுறையில் இரண்டு எக்டேர் அளவிற்கு மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக, விவசாயிகள் எத்தனை எக்டேர் இழப்புக்கு ஆளானாலும், அத்தனை எக்டேர் நிலத்திற்கும் இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாது, தி.மு.க. ஆட்சியில்தான் முதல்முறையாக விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீடு பிரிமியம் தொகையில் ஐம்பது சதவிகிதத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டு செலுத்தி வருகிறது. 2005–06ஆம் ஆண்டில் அ.தி.மு.க ஆட்சியில் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 967 விவசாயிகளே பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர் என்பதற்கு மாறாக; 2006–07ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 444 விவசாயிகளும்– கடந்த 2007–08ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 57 ஆயிரத்து 481 விவசாயிகளும் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக 2007–08ஆம் ஆண்டுக்கு 279.32 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளுக்கு இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கோ, விவசாயிகளுக்கோ உதவி செய்வதில் தி.மு.கழக அரசு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு உதவிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறது. ❖

# போர்க்கால அடிப்படையில் தமிழகத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்

## சேதாரத்தை தடுத்திட நீண்ட கால நிரந்தரத் திட்டம்

பல்வேறு துறைகளால் எடுக்கப்படும் நிவாரணப் பணிகளை கண்காணிக்கவும், ஒருங்கிணைக்கவும், துரிதப்படுத்தவும் அமைச்சரவை துணைக் குழு ஒன்றினை அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆணையிட்டுள்ளார். இக்குழுவிற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைவராகவும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இத்துணைக் குழுவின் முதல் கூட்டம் 2.12.2008 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த இக்குழு பல்வேறு துறைகளின் பணிகளை ஆய்வு செய்தது.

19.11.2008 முதல் 2.12.2008 அன்று வரை பெய்த பெரு மழையால் 177 நபர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 2,782 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும், 61,216 குடிசைகள் முழுமையாகவும் 1,57,960 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணத் தொகைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மேலும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை குறித்து புதிதாக அரசால் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி பாதிக்கப்பட்ட வீடுகள் பற்றிய கணக்கெடுப்பை உடனடியாக இறுதி செய்ய வேண்டும் என்றும் வெள்ளம் சூழ்ந்த குடியிருப்புகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் ரூபாய் ஆயிரம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட வேண்டும் என்றும் சென்னை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் வெள்ள நீர் புகுந்த வீடுகள் அனைத்திற்கும் ரூபாய்



இரண்டாயிரம் நிவாரணமாக உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு 1,327 நிவாரண முகாம்கள் நடைபெற்று வருவதாகவும் அவற்றில் 8,80,897 நபர்கள் தங்கியுள்ளதாகவும், இதுவரையில் 14,87,911 உணவுப் பொட்டலங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள், இந்த நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும் என்றும், அவர்கள் மீண்டும் தங்களது வீடுகளுக்கு செல்லும்வரையிலும் தேவையான உணவுகளை வழங்க வேண்டும் என்றும், மேலும் இந்த முகாம்கள் சரியாகப் பராமரிக்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான அனைத்துக் குடிசை வீடுகளுக்கும் அரசு உத்தரவின்படி ரூ.2,000 நிவாரணத்தொகையாகவும், அதோடு 10 கிலோ அரிசியும் உடனடியாக வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அமைச்சரவைத் துணைக்குழு கேட்டுக்கொண்டது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 7,72,327 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதால், இது பற்றிய கணக்கெடுப்பை விரைவுபடுத்தி நிவாரணத்தொகை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

பெருமழையின் காரணமாக ஆங்காங்கே சேதமடைந்த சாலைகள் உடனடியாக செப்பனிடப்பட்டு போக்குவரத்து சீராக நடைபெற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள நெடுஞ்சாலைத் துறையை அமைச்சர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும் பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்பு மூலமாக பராமரிக்கப்பட்டுவரும் குளங்கள் மற்றும் கண்மாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளையும் சேதங்களையும் உடனடியாகச் சீர் செய்யவேண்டும் என்றும், குளங்கள் மற்றும் கண்மாய்களில் உள்ள தண்ணீர் மேலும் வீணாகாதபடி உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகள் அனைத்தையும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும் என்றும், ஒவ்வொரு துறையும் இப்பணிகளை விரைவில் நிறைவேற்றி அவற்றை 6.12.2008 அன்று நடைபெறவிருக்கும் அமைச்சரவை துணைக்குழுவின் இரண்டாவது கூட்டத்தில் தெரிவிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மேலும் ஒவ்வொரு பகுதியிலும் வெள்ளம் வரும்பொழுதெல்லாம் ஏற்பட்டுள்ள சேதாரங்களைக் கருத்தில் கொண்டு, இச் சேதாரங்களை நிரந்தரமாகத் தவிர்த்திட ஒவ்வொரு துறையும் ஒரு நீண்டகாலத் திட்டத்தை ஒருமாத காலத்திற்குள் இறுதி செய்து இக்குழுவிற்கு அளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., விழிப்புப் பணி மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை ஆணையர் திருமதி. தங்கம் சங்கரநாராயணன், இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் திரு. தேவ ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., நிதித்துறை செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., வீட்டுவசதித்துறை செயலாளர் திரு. அரங்க. செல்லமுத்து, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு. அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் செல்வி. லீனா நாயர், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை செயலாளர் திரு. ஆதிசேஷய்யா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை செயலாளர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை செயலாளர் திரு. சுர்ஜித். கே. சௌத்ரி, இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையாளர் டாக்டர். என். சுந்தரதேவன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் டாக்டர். செந்தில்குமார், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. கே. கோசலராமன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் முனைவர். கோபால், இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் திரு. அ. இராமலிங்கம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் முனைவர். ஆ. சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை ஆணையாளர் டாக்டர். சந்திரமோகன் இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

# வெள்ள நிவாரணப் பணிகளை துரிதப்படுத்திட அமைச்சரவை துணைக் குழு அறிவுரை



**வெ**ள்ள நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவை துணைக்குழுவின் இரண்டாம் கூட்டம் 6.12.2008 அன்று நடைபெற்றது.

கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில். மு.பெ.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் 5.12.2008 வரை மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்த தகவல்கள் குழுவின் முன் வைக்கப்பட்டன. இதன்படி, இதுவரை வெள்ளத்தால் 189 பேர் இறந்துள்ளதாகவும், 4,997 கால்நடைகள் உயிர் இழந்துள்ளதாகவும், 5,06,675 குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், 4,93,970 குடிசைகள் பகுதியாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

மேலும், 1,597 கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மரணமடைந்த 189 நபர்களில், 139 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், 9 குடும்பங்கள் நிவாரணத் தொகையை வாங்க மறுப்பு தெரிவித்ததாகவும், மீதமுள்ள 41 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த 4,997 கால்நடைகளில், 150 கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 94,367 முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று 47,548 பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

மேலும், தற்போது 595 வெள்ள நிவாரண முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும், இவைகளில் 43 முகாம்

காஞ்சிபுரம் மாவட்டத்திலும், 47 முகாம் நாகப்பட்டினம் மாவட்டத்திலும், தஞ்சாவூர், திருவள்ளூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு முகாம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் 502 முகாம்கள் தொடர்ந்து நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இம்முகாம்களில், 3,23,615 நபர்கள் தற்போது தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை, பாதிக்கப்பட்டோருக்கு 29.57 கோடி ரூபாய் நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்த கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு ரூபாய் ஆயிரம் வழங்கவேண்டும் என்ற அரசாணையின்படி இதுவரை சுமார் 10,87,712 வீடுகளுக்கு நிவாரணத்தொகை வழங்க கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கணக்கீடு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை, மாநில நெடுஞ்சாலைகளில் 2,062 கிலோ மீட்டர் சாலைகள் வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவற்றில், 932 கி.மீ. சாலைகள் செப்பனிடப்பட்டு உள்ளதாகவும், மேலும் பெரிய மாவட்டச் சாலைகள் 2,224 கி.மீ. பழுதடைந்து உள்ளதாகவும், அவற்றில் 796 கி.மீ. சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளது.

இதுபோல், இதர மாவட்டச் சாலைகளில் 4,998 கி.மீ. பாதிப்புக்குள்ளாகி உள்ளதாகவும், அவற்றில் 992 கி.மீ. சாலைகள் இதுவரை பழுது நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், தேசிய நெடுஞ்சாலைகள் 383 கி.மீ. தூரம் பழுதடைந்துள்ளதாகவும், அவற்றில் 326 கி.மீ. டபிள்யு.பி.எம். அளவுக்கு சரிசெய்யப்பட்டுள்ளன. மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் பராமரிக்கப்படும் சாலைகளில் 945 கி.மீ. சாலைகள் பழுதடைந்துள்ளதாகவும், அவற்றில் 30 கி.மீ. டபிள்யு.பி.எம். அளவுக்கு சரிசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுப்பணித்துறை மூலம் பராமரிப்பிலுள்ள கண்மாய்களைப் பொறுத்தவரையில் 1,957 சேதமடைந்துள்ள கண்மாய்களில், 1,149 கண்மாய்கள் சரிசெய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள கண்மாய்களை 15.12.2008க்குள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள 2,439 கிராமங்களில், 93 கிராமங்களைத் தவிர மீதமுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் மின்சார விநியோகம் சரி செய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 93 கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பணிகளை மேலும் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று அமைச்சரவை துணைக்குழு அறிவுரை வழங்கியது.

பழுதடைந்துள்ள நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை தலைமைச் செயலாளர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கூட்டத்தைக் கூட்டி, சாலைகளை செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அதனடிப்படையில், பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பாதிப்படைந்த வீடுகளுக்கு, நிவாரணத்தொகை வழங்கும் பணி விரைவுபடுத்தவும், பாதிப்புக்குள்ளான பயிர்களை கணக்கெடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த கூட்டத்தில் அமைச்சரவை துணைக்குழு அறிவுறுத்தியவாறு மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய வெள்ளச் சேதார அறிக்கையைத் திருத்தி, திருத்திய அறிக்கையின்படி தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கான நிதி ரூ.658 கோடியிலிருந்து ரூ.1,893 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், வெள்ள நிலைமையை கண்காணிக்க மத்தியக்குழுத் தலைவரை நியமித்து, மத்திய அரசு ஆணைகள் வெளியிட்டதாகவும், இந்தக் குழு விரைவில் தமிழகத்திற்கு வந்து வருகை தந்து, வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட உள்ளதாக தெரிகிறது.

மேலும், தற்போது தமிழ்நாடு கடலோரப் பகுதியிலிருந்து 900 கி.மீ. தூரத்தில் உள்ள காற்றழுத்த மண்டலம் மேலும் வலுப்பெற்று புயலாக மாறும் சாத்தியக்கூறுகள் உள்ளது என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அமைச்சரவை துணைக்குழு கேட்டுக்கொண்டது.

கூட்டத்தில் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். □

# புயல் – பெருமழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி உடனடியாக வழங்கப்படும்

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

**வெ**ள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், அதுகுறித்து ஆலோசித்து செயல்படுவதற்காகவும் – பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 7.12.2008 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

வெள்ள நிவாரணப் பணிகளை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர்கள் இதுவரையில் செய்திருக்கும் துயர் துடைப்புப் பணிகளை நான் பாராட்டுகின்றேன். வருவாய்த்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, மின்சார வாரியம், மக்கள் நல்வாழ்வுத்துறை, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகள் ஆற்றிய பணிகளையும் நான் பாராட்டுகிறேன். எனினும் இன்னும் வேகமாகவும், நல்ல முறையிலும் அவர்கள் தங்களுடைய பணிகளை மேற்கொண்டால்தான் இதுபோன்ற இயற்கை இடர்களிலிருந்து எதிர்காலத்திலே மக்களைக் காப்பாற்றவும், பயிர்களைக் காப்பாற்றவும் முடியும் என்பதை வலியுறுத்திக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த வேகமும் ஊக்கமும் தொடர்ந்து நீங்கள் செய்யும் பணிகளின் மூலமாக வெளிப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். சீரமைப்புப் பணிகள் சிறப்பாகவும், தரத்தோடும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ஆறுதலும் நம்பிக்கையும் தரத்தக்க வகையில் உங்கள் பணிகளை வகுத்துக் கொண்டு நிறைவேற்றிட வேண்டும். புயல் – பெருமழை காரணமாக உயிரிழந்த ஒவ்வொரு குடும்பங்களுக்கும்; கால்நடைகளை இழந்தோர்க்கும் நிவாரண உதவியை உடனடியாக அதாவது இப்போது நாங்கள் நிர்ணயித்த 10–12–2008 க்குள் வழங்கி முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வெள்ளம் சூழ்ந்த வீடுகளுக்கும் – வெள்ளம் நுழைந்த வீடுகளுக்கும் – பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்த வீடுகளுக்கும் – வழங்க வேண்டிய நிவாரண உதவிகளை; ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக வழங்க வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம், டிராப்ட் ஆகவோ, காசோலையாகவோ வழங்கலாமா என்ற கருத்துக் கூட பேசப்பட்டாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை பணமாகவே நேரில் ஒவ்வொருவரிடமும் வழங்குவதில் தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்தி அளிக்கும். அந்த நிதி உதவிகளை 15–12–2008க்குள் வழங்கி முடித்திட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பயிர்கள் சேதம் பற்றிய கணக்கெடுப்பை நடத்தி முடித்திடவும்; அவற்றிற்கு நிவாரண நிதி உதவி வழங்கிடவும்; 31–12–2008க்குள் முடித்திட அதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிவாரண உதவிகளை, பாதிக்கப்படாதோர் தட்டிச் சென்று விடாமல் மிகுந்த முன்னெச்சரிக்கை யோடு இருக்கவேண்டும். பாதிக்கப்படாதோர் ஓரிருவர் நிவாரண உதவிகளைத் தட்டிச் செல்ல முயன்றாலும்; பாதிக்கப்பட்டோர் எவரும் நிவாரண அந்த உதவிகளைப் பெறுவதிலிருந்து விடுபட்டு விடாமல்; கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக வெள்ளம் – வறட்சி ஏற்படும்போது நிலவிடும் சூழல்களை; அந்த நிலைமைகள் மாறியதற்குப் பிறகு – அவற்றை முற்றிலும் நாம் மறந்து விடுகிறோம். அரசிலே உள்ள நாங்கள் மாத்திரமல்ல, அதிகார வர்க்கத்திலே உள்ளவர்களும் மறந்து விடுவது இயல்பாக ஆகிவிட்ட ஒன்றாக உள்ளது. இந்தமுறை அப்படி இல்லாமல்; வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வுகளைப் பற்றி தொடர்புடைய துறைகளோடு கலந்தாலோசனை செய்து; தேவையான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பணிகளைத் தொடங்கிச் செய்யத்தான் இப்போது அமைச்சர்களைக் கொண்ட ஒரு துணைக் குழு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் தலைமையிலே அமைக்கப்பட்டு, அதன் பணிகளை ஆற்றி வருகிறது. அதை இன்னும் தீவிரப்படுத்தி, ஆழ்ந்து யோசித்து நம்முடைய அரசின் சார்பில் செய்ய வேண்டியவைகளை கூடுமானவரையில் பட்ஜெட் வெளியிடுவதற்கு முன்பாகவோ அல்லது சிலவற்றை பட்ஜெட் வந்த பிறகோ நாட்டிற்கு அறிவிக்கும் வகையில் ஆவன செய்திட வேண்டுமென்று அந்தக் குழுவினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை இழப்புக்கு நிவாரண உதவி வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியரிடமிருந்து கோட்ட வருவாய் அலுவலர்களுக்கு மாற்றிக் கொடுக்க இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆறுகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சியர்களே மேற்பார்வையிட்டு தரத்தை உறுதி செய்திட வேண்டும் என்றும் இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை நல்ல முறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடைமைகள் முழுவதையும் இழந்துவிட்ட குடும்பங்களுக்கு அந்தக் குடும்பங்களிலே எத்தனை பேர் இருந்தாலும் அத்தனை பேருக்கும் தலா ஒரு வேட்டி, ஒரு சேலை என்ற முறையில் வழங்க வேண்டும். பொங்கல் நேரத்திலே வழங்குவது என்பது ஒருபுறம் இருந்தாலுங்கூட, நான் முதலிலே கூறியதைப் போல, இந்தப் பாதிப்பை ஈடுகட்ட அவர்களுக்கு இந்த இலவச வேட்டி சேலைகளை உடனடியாக நாளைக்கே தொடங்கி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அம்மாதிரியான குடும்பங்களில் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவியருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கவும் முடிவு செய்திருக்கிறோம். அவைகள் நேர்மையான முறையில் அவர்களுக்குச் சென்று கிடைத்திட பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பெருமழை காரணமாக உயிரிழந்தோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்குவதென்று அறிவித்திருக்கிறோம். அது போதுமானதல்ல என்று எதிர்க்கட்சிகளின் சார்பில் – பொதுவான சில கட்சிகளின் சார்பில் குரல் இன்றைக்கு ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. எனவே இந்தக் கூட்டத்தில் எடுக்கின்ற முடிவாக அந்தத் தொகையை – இறந்தோர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் உதவித்தொகை என்பதை – இரண்டு இலட்சம் ரூபாய் என்று உயர்த்தி அறிவிக்கப்படுகிறது. அந்தத் தொகையும் அவர்களுக்கு உடனடியாகப் போய்ச் சேர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு – ஏற்கெனவே ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டவர்களுக்கு மேலும் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கின்றேன்.

இன்றையதினம் மாலையிலே டெல்லியிலிருந்து வெள்ளப் பாதிப்புகளையும், நிவாரணப் பணிகளையும் பார்வையிட மத்தியக் குழு



வருகிறது. அந்தக் குழு வருகிற நேரத்தில் அவர்கள் பார்ப்பதற்காக மாத்திரமல்ல, பாதிக்கப்பட்ட மக்கள் கண்டு, ஆறுதல் அடைவதற்காக நம்முடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் – அதிலும் குறிப்பாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னின்றும், எல்லா அதிகாரிகளையும் வயல்களில் – எந்தெந்த இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடங்களில் – ஆற்றுப் பகுதிகளில், வாய்க்கால் பகுதிகளில், சாலையோரங்களில் – அங்கெல்லாம் நின்று பணியாற்ற வேண்டும். ஒருமுறை நம்முடைய மதுராந்தகம் ஏரி தூர்வாரும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களை அழைத்து வந்து பார்வையிடச் செய்தபோது, அவர்கள் பிரமித்துப் போய்விட்டார்கள். அந்த ஏரி முழுவதும் – ஏதோ பூச்சிகள் பறப்பதைப் போல – பக்கத்திலே உள்ள வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் பறப்பதைப்போல அத்தனை மக்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந்த காட்சியைப் பார்த்து நாம் கேட்ட பணத்தை உடனடியாகக் கொடுத்தார்கள், இவ்வளவு பேர் வேலை செய்கிறார்களே என்று. அந்த அளவிற்கு இதை டெல்லியிலே உள்ளவர்களை நம்ப வைப்பதற்காக அல்ல, நம்முடைய மக்களை ஆற்றுப்படுத்துவதற்காக, அமைதிப்படுத்துவதற்காக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு, கவலைகளை மறப்பதற்கு – பரவாயில்லை, நம்முடைய அரசும், அதிகாரிகளும் நமக்காக இந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள் – என்கின்ற அந்த உணர்வை அவர்களுடைய உள்ளத்திலே பதியவைக்க நம்முடைய அதிகாரிகள் பாடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் நம்முடைய கடமைகளைச் செய்கின்ற நேரத்தில் இயற்கையின் இதுபோன்ற தொல்லைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. கடந்த மாதம் வயல்வெளிகளைப் பார்த்தபோது பயிர் பச்சைகள் எல்லாம் செழித்துக் குலுங்கி நாம் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சியடைகின்ற அளவிற்கு இருந்ததும் – திடீரென்று ஏற்பட்ட இயற்கை சூழலின் மாற்றத்தால் இப்படி ஒரு நிலை ஏற்பட்டதும் – எதிர்பார்க்கவில்லை – இருந்தாலும் எதிர்பாராதது நடந்தாலுங்கூட, அவைகளை எதிர்கொள்கின்ற திறன் நம்முடைய அரசுக்கு உண்டு. அரசு என்றால் அமைச்சர்கள் மாத்திரமல்ல, உங்களைப் போன்ற அதிகாரிகளையும் கொண்டதுதான் அரசு. எனவே அப்படிப்பட்ட இந்த அரசுக்கு மேலும் மேலும் நல்ல பெயரும், திறமையான அரசு, மக்களிடம் அன்பும் அரவணைப்பும் உள்ள அரசு, ஏழைகளுக்காக இரக்கம் காட்டுகின்ற அரசு என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்ற ஒரு பொறுப்பினை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி இந்த மாநாட்டிலே கலந்து கொண்டு அரிய பல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்ன உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் நான் என் உரையை நிறைவு செய்கிறேன். ❖

# 15 கிராம ஊராட்சிகளுக்கு
# உத்தமர் காந்தி ஊராட்சி விருதுகள்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்



தமிழகத்திலுள்ள கிராம ஊராட்சிகள் அனைத்தும் அடிப்படை வசதிகளை விரைந்து பெறவேண்டும் என்னும் விழைவோடு, அவற்றின் செயல்பாடுகளில் போட்டியுணர்வை ஏற்படுத்தி, திட்டப் பணிகளை விரைவுபடுத்திடும் நோக்கத்துடனும், ஊராட்சிகள் மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்கமளித்திட வேண்டும் என்பதற்காகவும், கிராம ஊராட்சிகளின் சிறப்பான செயல்பாடுகளின் அடிப்படையில், அவை மேற்கொண்டுள்ள புதுமையான முயற்சிகளைப் பாராட்டி சிறப்பிக்கும் வகையில், "ஆண்டுதோறும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் கேடயமும், அந்த ஊராட்சிகளின் தலைவர்களுக்கு அவர்களின் செயல்திறன்களைப் பாராட்டி பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்" என்று 11.8.2006 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து வழங்கப்படும் விருதுக்கு "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெயர் சூட்டினார்.

மாநில அளவில் முன்மாதிரியாக அரசின் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்திச் சாதனைகள் நிகழ்த்தியுள்ள 84 கிராம ஊராட்சிகள்

குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பரிந்துரைகள் பெறப்பட்டன. அவற்றிலிருந்து 43 கிராம ஊராட்சிகளை 4 பேர் கொண்ட குழு தேர்வு செய்தது. இந்த 43 கிராம ஊராட்சிகளிலும், கூடுதல் இயக்குநர் நிலையிலான 3 குழுவினர் நேரடியாக ஆய்வு செய்து, அதற்கான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைத்தனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், 2007–2008ஆம் ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்குத் தகுதியுடைய 15 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன.

அதன்படி, விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள,

1. திருவாரூர், பள்ளிவர்த்தி ஊராட்சிமன்றத் தலைவர் திரு. ஜெ. ஜெயராமன்.
2. இராமநாதபுரம், திருவரங்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ச.இ. மரியராஜ்.
3. நாமக்கல், முதலைப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கா. பழனிவேல்.
4. ஈரோடு, மைலம்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மை.அ. திருஞானசம்பந்தம்.
5. சிவகங்கை, காட்டேந்தல் சுக்கானூரணி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.சூ. அருள்மேரி.
6. திருநெல்வேலி, கீழவெள்ளகால் ஊராட்சிமன்றத் தலைவர், திருமதி. மு. இராமாத்தாள்.
7. விருதுநகர், பெத்துரெட்டியப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சா. க. சு. இராஜேந்திரன்.
8. இராமநாதபுரம், தாமரைக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. சி.கிருஷ்ணவேணி.
9. நாகப்பட்டினம், விழுந்தமாவடி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. ம. இராதாமணி.
10. திருநெல்வேலி, இடையன்குடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஜெ. சேகர்.
11. தஞ்சாவூர், சீனிவாசநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. ரா. யசோதா.
12. கரூர், ஈசநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. நா. இராமசாமி.
13. நீலகிரி, தும்மனட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. போ. விஸ்வநாதன்.
14. தேனி, இராமசாமி நாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. மா.மணிமேகலை.
15. திண்டுக்கல், ம.மு. கோவிலூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மு.அ. சாகுல் ஹமீது.

ஆகிய 15 கிராம ஊராட்சிகளின் தலைவர்களுக்கும் 19.12.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” நல்கி, தலா 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், பதக்கம், சான்றிதழ் ஆகியவைகளை வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

விருது பெற்ற 15 ஊராட்சிகளுள் முதல் 5 ஊராட்சிகளில் கடந்த முறை ஊராட்சிமன்றத் தலைவர்களாக இருந்தவர்களே தற்போதும் தலைவர்களாக உள்ளனர்; எஞ்சிய 10 கிராம ஊராட்சிகளில் ஏற்கெனவே தலைவர்களாக இருந்த,

1. திருநெல்வேலி, கீழவெள்ளகால் ஊராட்சி, திரு. தி. பூமாரியப்பன்.
2. இராமநாதபுரம், தாமரைக்குளம் ஊராட்சி, திரு.சே. சிவலிங்கம்.
3. நாகப்பட்டினம், விழுந்தமாவடி ஊராட்சி, திருமதி. கி. முத்துலெட்சுமி.
4. திருநெல்வேலி, இடையன்குடி ஊராட்சி, திருமதி. பா.ஜெயாகனி
5. நீலகிரி, தும்மனட்டி ஊராட்சி, திருமதி. பெ. ருக்குமணி.
6. தேனி, இராமசாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, திரு. பா. இராசாராம்.
7. திண்டுக்கல், ம.மு. கோவிலூர் ஊராட்சி, திரு. சா. ஹ. நைனா முகமது

ஆகிய முன்னாள் தலைவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்றைய நிகழ்ச்சியில் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” வழங்கிப் பாராட்டி சிறப்பிக்கப்பட்ட இந்த 15 கிராம ஊராட்சி மன்றங்களின் முன்னாள், இந்நாள் தலைவர்கள் 22 பேருக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலர் திரு. க. அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். விருது பெற்ற கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அமைச்சர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்அவர்களால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

★ ★ ★




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளித்து போலியோ நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமினை, தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், முதல்வரின் துணைவியார் திருமதி. தயாளுஅம்மாள், சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், உள்ளிட்டோர் உடனிருந்தனர். **(21.12.2008)**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் 7.12.2008 அன்று கொடிநாள் நிதி வசூலை நிதி அளித்து துவக்கி வைத்தார். உடன் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. மைதிலி கே. ராஜேந்திரன் இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

# வலவன் ஏவா வான ஊர்தி

## - கலைஞர்

**வி**ஞ்ஞானம் வளர்ந்ததாலே விண்ணூர்ந்து; இற்றைநாளில்
வியத்தகு புதுமைகளை விளைக்கின்றார் அறிவுடையார்! - முற்றிலும்

அஞ்ஞானம் நிறைந்த காலமல்ல பழங்காலம்;
அன்றைக்கும் வானத்துக் கோள்களை ஆராய்ந்து

காலமாறுதலைக் கணக்கிட்டு, கோள்களின் சுழற்சிக்
கோலமதைத் தீட்டிக்காட்டி; குமிழ் மின்னல் சிரிப்புக்

கொட்டுகின்ற விண்மீன்கள்; தாங்களிருக்குமிடம்
விட்டுப் பெயர்கின்ற நிலையறிந்து நாழிபார்த்துக் கூறி;

கதிரவனைச் சந்திரனைப் பூமியின் நிழல் சூழ்ந்து – நம்
கண்ணுக்கு ஒருநாள் மறைக்கின்ற 'கிரகணம்' வருகின்ற



நாளைக்கூட நமது முன்னோர் வானநூல் இயற்றித்தந்து
வேளைதவறாமல் விரித்துரைத்தார் எனல் வேடிக்கையல்ல!

ஒளிபெற்று வாழ்ந்த நாமோ; திடுமென இருட்டில் வீழ்ந்தோம்!
வெளிநாட்டு விஞ்ஞான வளமோ; விரிந்தது வான் முகட்டில்!

தேய்ந்து வளரும் திங்களை நாம் தெய்வமென்றோம்
தினம் வந்து கடமையாற்றும் சூரியனை தேவனென்றோம்

ஓய்ந்திருக்கும் வேளையிலே உப்பில்லாக் கற்பனையில்
சாய்ந்து சயனித்துக் கிடந்தோமன்றி – முன்னோர்

ஆய்ந்தறிந்து வகுத்திட்ட வானநூற் புதுமைகளை; வறட்சியினால்
காய்ந்த பயிர் ஆக்கிவிட்டு மடமைக் கதைகளிலே மாய்ந்துபோனோம்!

இலக்கியத் தமிழ் இன்பம் பருகுதற்கு முற்பட்டு
இனிய சங்கப் பாடல் ஒன்றில் கண்புதைத்தபோது;

இதயத்தைப் பூரிப்பால் நனைக்கின்ற ஒரு செய்தி! அதனை
எடுத்தெழுதி உம்மையெலாம், "நான் பெற்ற இன்பம்;

பெறுக நீவிர்!" என உவகையுடன் அழைக்கின்றேன்.
பெருமை மிகு தமிழகத்தின் பழஞ்சிறப்பு காண வாரீர்!

முடியுடைச் சோழன் நலங்கிள்ளியின் கீர்த்திபாடும்
முதுகண்ணன் சாத்தனார் எனும் உறையூர்ப்புலவர்;

வளர்தலும், தேய்தலும், பிறத்தலும், இறத்தலும்
வாடிக்கையாய்க் கொண்டதிவ் வுலகமென்றும்,

வருந்தி வந்தோர்க்கு வழங்கிடும் வள்ளலாய்
வாழ்வதே மண்ணாளும் அரசுக்கு மாண்பென்றும்,

போற்றுதற்கிடையே பொன்மொழி புகன்று
ஊற்றுப் பெருக்காய் உதவிடுக வறியோர்க்கென்றார்!

**மற்றும்**
வழிவழியாக இவ்வையகம் தனிலே
வாழ்ந்து மறைந்தோர்; எண்ணிலடங்கார்!



சேற்றில் முளைத்திடும் செந்தாமரையின்
செழிப்புறு இதழ்கள் பலவே ஆயினும்

வேற்றுமை காண இயலா அளவில்
விளங்கும் எழிலைக் காணுதல் எளிது!

சாற்றுவேன் ஒன்று, சரியெனத் தோன்றியதை; இந்த
செகத்தினில் உதித்தோர் பலரில் சிலரே – உண்மைப்

புலவர் பாடிடும் புகழுக்குரியோர் – மற்றும்
பலரோ தாமரையிலை எனப் பொலிவிழந்து போயினர்!

இதழின் அழகுக்கும் இலையின் பயனிலாத் தன்மைக்கும்
இப்படியோர் உவமையைப் பொருத்திய புலவர்;

பாவலர் ஏத்திடும் பாராட்டுக்குரிய மன்னர் – இந்தப்
பாரில் எய்திடும் புகழின் உயர்வைக் காட்டுவார்; கவிதையில்!

**அதாவது,**
வலவன் எனும் ஓட்டுபவன் இல்லாமலே
வானில் பறந்திடும் ஊர்தியில் செல்லும்

வாய்ப்பினை எய்திடும் வகை கிடைத்தோர்க்கு;
வாழ்வின் உயர்வு – அந்த வானின் உயர்வாம்!

வைரமென ஒளிபொழியும் இப்புறப்பாட்டில்;
'வலவன் ஏவா வான ஊர்தி' என வருதலாலே

வலவன் ஏவுகின்ற வான ஊர்தியும் அக்காலம்
வழக்கத்தில் இருந்ததெனக் கொள்ளலாம் அன்றோ ?

ஆதியிலே அறிவியலில் அக்கறை காட்டியதால்; வான
வீதியிலே வலவரென்போர் ஊர்தியினைச் செலுத்தியிருக்கவும் கூடும்!

பாதியிலே படையெடுத்த பத்தாம்பசலி எண்ணத்தினால்
பகுத்தறிவுக்கு வேலையின்றிப் பாழ்பட்டுப் போனதம்மா இந்த நாடு!

பாவாணர் முதுகண்ணன் சாத்தனார்; சோழனைப்
பாராட்டி எடுத்து வைத்த அறிவுரையில் – என்



பார்வையினை இந்தச் செய்தி ஈர்த்ததினால் – நீவிரும்
படித்தாய்ந்து உரைத்திடுக எனப் படைத்திட்டேன்;
பிழையெனில் திருத்திடுவீர்!
ஏற்றுக்கொள்வேன்!

* * * * *

**"சேற்றுவளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,**
**நூற்றிதழ் அலரின் நிறைகண் டன்ன,**
**வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து,**
**வீற்றிருந் தோரை எண்ணுங் காலை,**
**உரையும் பாட்டும் உடையோர் சிலரே;**
**மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே;**
**புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்**
**வலவன் ஏவா வான ஊர்தி**
**எய்துப, என்ப, தம் செய்வினை முடித்து எனக்**
**கேட்பல்; எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!**
**தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,**
**மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,**
**அறியா தோரையும், அறியக் காட்டித்,**
**திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து**
**வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,**
**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,**
**அருள் வல்லை ஆகுமதி; அருளிலர்**
**கொடா அமை வல்லர் ஆகுக;**
**கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே."**

புறநானூறு: பாடல்: 27
பாடியவர்: உறையூர் முதுகண்ணன் சாத்தனார்)

**பொருள் விளக்கம் :**

பயந்த = பூத்த. ஒண்கேழ் = ஒளிபொருந்திய நிறம்.
விழுத்திணை = உயர்குடி. மரை இலை = தாமரையிலை.
விசும்பு = ஆகாயம். வலவன் = செலுத்துபவன், ஓட்டுபவன்.
பாகன், திங்கள் புத்தேள் திரிதரும் உலகம் = திங்களெனும்
புதுமை இயங்குகின்ற உலகம்.

– *"கலைஞரின் சங்கத்தமிழ்"*
நூலிலிருந்து...





# தொலைதூர கிராமப்புற மக்களுக்குத் தரமான மருத்துவ வசதிகள் அளித்திட மேலும் 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
தொடங்கி வைத்தார்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மலைப்பகுதி கிராமப்புற மக்களுக்கும், போதுமான வாகன வசதி இல்லாத தொலைதூர கிராமங்களில் வாழும் மக்களுக்கும் அவர்கள் வாழும் இடங்களிலேயே தரமான மருத்துவ உதவிகளை அளித்திட ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு துப்புரவுப் பணியாளர் மற்றும் ஓர் ஓட்டுநர் ஆகியோர் அடங்கிய ஒரு 'நடமாடும் மருத்துவக் குழு' வீதம் மாநிலத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 385 நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைத்திட இந்த அரசு முடிவு செய்தது.

ஒவ்வொரு நடமாடும் மருத்துவக் குழுவும், வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின் பயனாளிகள் நல்வாழ்வு சங்கத்துடன் இணைக்கப்பட்டு, மாவட்ட நல வாழ்வு சங்கத்தின் நிருவாகச் செயலாளர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் ஆகியோரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் இயங்கும்.

இக்குழு தனது வட்டாரத்தில் எந்த ஊருக்கு எந்த நாளில் சென்று மருத்துவ சிகிச்சைகளை அளிக்கும் என்பதை முன்னரே திட்டமிட்டு, அதற்கேற்றவாறு அனைத்து சாதனங்களுடனும் சென்று அடிப்படை மருத்துவ உதவிகளை மக்களுக்கு அளிக்கும். இந்த நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் கிராமங்களில் வாழும் மக்களுக்கு நோய்களைக் கண்டறிந்து, அவர்களின் இருப்பிடத்திலேயே மருத்துவச் சிகிச்சைகளை அளித்தல், நோய் வருமுன் காத்தல், தடுப்பூசி போடுதல், கர்ப்பிணிப் பெண்கள் பராமரிப்பு, பிரசவித்த தாய்மார்கள் மற்றும் இளம்சிசு பராமரிப்பு போன்ற பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகத்தான இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, 2006–2007 ஆம் ஆண்டில் 146 ஊராட்சி ஒன்றியங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு, மக்களுக்கு மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன. இரண்டாம் கட்டமாக, தற்போது மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் 6 கோடி ரூபாய்

செலவில் 100 ஆம்புலன்ஸ் வாகனங்களில் அடிப்படை மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான அனைத்துச் சாதனங்களும் பொருத்தப்பட்டு, மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய 100 நடமாடும் மருத்துவக் குழுக்களின் பணிகளை, வாகனங்கள் அணிவகுத்துச் செல்ல மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 24.12.2008 அன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக 2 கோடியே 4 இலட்சத்து 55 ஆயிரத்து 775 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் வழங்கினார்.

எஞ்சிய 139 ஒன்றியங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் நடப்பு நிதி ஆண்டிலேயே அமைக்கப்பட்டு, 2009ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்படத் தொடங்கும். இத்திட்டத்தின் மூலம் அனைத்துக் கிராமப்புறப் பகுதிகளும் அடிப்படை வசதிகளை உடனுக்குடன் பெறும் வாய்ப்பு உருவாக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., மாநில ஊரக நலவாழ்வு இயக்ககத்தின் இயக்குநர் திருமதி. கிரிஜாவைத்தியநாதன், இ.ஆ.ப., மாநில பொது சுகாதார இயக்குநர் டாக்டர் எஸ். இளங்கோவன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். ★

## அறிஞர் அண்ணா பொன்மொழிகள்

## அந்த உணர்ச்சிதான்

நமது நாடு தொழில் துறையில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்னணியில் நிற்கிறது எனினும். வளம் குறைந்த நாடா இது? இல்லை! பெட்ரோலியம் இல்லாத நாடுகள் உண்டு; இரும்பு இல்லாத நாடுகள் உண்டு; நிலக்கரி இல்லாத நாடுகள் உண்டு; மற்ற கனிவளங்கள் இல்லாத நாடுகள் உண்டு; ஆனால் நம் நாட்டிலோ எல்லாவகைக் கனி வளங்களும் உண்டு தோண்ட வேண்டிய கனிச்சுரங்கங்கள்; கட்டவேண்டிய கப்பல் துறைகள் இன்னும் இருக்கின்றன; ஆகவே, ஏராளமான வளத்தை நாம் பெற்றிருக்கிறோம்.



"நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும்—நமது வளத்திற் கேற்ப முன்னேறவில்லை! நமது தேவைக்கேற்பவும் முன்னேறவில்லை! ஆகவே, எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கையை உடையவராக இருந்தாலும் நமது திறமையை உழைப்பை ஒன்றுபடுத்தி ஆக்கப்பணியில் செலுத்தினால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். இரண்டாம் உலகப் போரில் அழிந்த ஜப்பான் நாட்டினர் பெரும் சேதத்திற்கு ஆளானபோதும், பத்துப் பதினைந்தே ஆண்டுகளில் கடுமையான உழைப்பினால் பழைய நிலையை அடைந்தார்கள். அதுமட்டுமல்ல நம்மைப் போன்றவர்களுக்கும் உதவ முன்வருகிறார்கள். அந்த உணர்ச்சிதான். எழுச்சிதான் நமக்குத் தேவை".

# தமிழகத்தில் அமெரிக்காவை சேர்ந்த கேட்டர் பில்லர் இந்தியா நிறுவனம் ரூ.800 கோடியில் விரிவாக்கத் திட்டங்கள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழகத்தில் திருவள்ளூரிலும், ஓசூரிலும் ஏற்கெனவே அமைந்துள்ளன. அவற்றுள் 2 ஆயிரத்து 400 பேர் நேரடியாகவும், 7 ஆயிரத்து 500 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இந்நிறுவனம் தற்போது 800 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டுமானம் மற்றும் சுரங்கத் தொழில்களுக்குப் பயன்படும் கனரகப் பொறியியல் இயந்திரங்களைத் தயாரிப்பதற்கான விரிவாக்கத் திட்டங்களைச் செயல்படுத்திட முடிவு செய்துள்ளது.

அதன்படி, திருவள்ளூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள இந்நிறுவனத்தின் தொழிற் சாலைகளை விரிவாக்குவதுடன், சென்னைக்கருகில் மற்றுமொரு புதிய இடத்திலும் ஒரு தொழில் பிரிவைத் தொடங்கிட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.



ஏறத்தாழ 600 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், 1,900 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கக் கூடிய இப்புதிய விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 18.12.2008 அன்று நடைபெற்றது.

அமெரிக்காவைச் சேர்ந்த கேட்டர்பில்லர் நிறுவனம் கட்டுமானம் மற்றும் சுரங்க இயந்திரங்கள் தயாரிப்பில் உலக அளவில் சிறந்து விளங்கும் ஒரு மிகப் பெரிய நிறுவனமாகும். இதுவரை 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 100க்கும் அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள இந்நிறுவனம் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இந்தியாவில், பெருமளவில் முதலீடுகள் செய்துள்ள கேடர்பில்லர் நிறுவனத்தின் கட்டுமான இயந்திரங்கள், டீசல் மின்உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் இஞ்சின் தயாரிப்புப் பிரிவுகள்

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எஃப். பாருக்கி, இ.ஆ.ப., கேடர்பில்லர் இந்தியா நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் தலைவர் கெவின் ஆர்.தீனமேன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோரும், கேடர்பில்லர் இந்தியா நிறுவனத்தின் மூத்த அலுவலர்களும் உடனிருந்தனர். ❖

# சுனாமி சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வுப் பணிகள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விளக்கம்

தமிழகத்தில் ஆழிப் பேரலையின் சுனாமிப் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வுப் பணிகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அளித்த விளக்கம் வருமாறு :–.

சுனாமிப் பேரலை ஏற்பட்ட 26.12.2004இல் இருந்து 12.5.2006 வரை கடந்த ஆட்சியில், பாதிக்கப்பட்டோருக்கென மேற்கொள்ளப்பட்ட 8 ஆயிரத்து 406 வீடுகளின் கட்டடப்பணிகள் முடிவடையாத நிலையில் இருந்ததால்; 13.5.2006 அன்று பொறுப்பேற்ற கழக ஆட்சி, சுனாமி பாதித்த பகுதிகளின் மாவட்ட ஆட்சியர் மாநாட்டைக் கூட்டி, ஆய்வு நடத்தி, அதன் விளைவாக, அவற்றைக் கட்டி முடித்ததுடன்; 30.11.2008 வரை மேலும் 29 ஆயிரத்து 567 வீடுகளைக் கட்டி பயனாளிகளுக்கு வழங்கி உள்ளது.

சுனாமி பாதித்த பகுதிகளில் வீடுகளைக் கட்டுவதற்கு நடைமுறையில் உள்ள விதிகள் தடையாக இருந்ததால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நகரமைப்புத் திட்டங்களின் அனுமதிகளை வழங்குவதற்கேற்ப அரசின் விதிகள் தளர்த்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன.

மேலும், கடலோரத்தில் குடியிருக்கும் பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த இருளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், இதர சமுதாயத்தினர் ஆகியோரின் 5 ஆயிரத்து 954 வீடுகள் புதுப்பிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இராஜீவ் காந்தி மறுவாழ்வு தொகுப்புத் திட்டத்தின்கீழ் சுனாமி பாதித்த மாவட்டங்களில் பாலங்கள் கட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் 362 கோடியே 67 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு; கடந்த இரண்டாண்டுகளில் 19 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; 1,387 கிலோமீட்டர் நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன.

சுனாமி பாதித்த விவசாய மற்றும் தோட்டக்கலைத் துறை சார்ந்த 8 ஆயிரத்து 800 எக்டேர் நிலங்களின் சீரமைப்புப் பணிகள் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவடைந்துள்ளன.

கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 778 எக்டேர் நிலப்பரப்பில் கடலோரக் காடுகளும்; 2 ஆயிரத்து 162 எக்டேர் நிலப்பரப்பில் மாங்குரோவ் காடுகளும்; உலக வங்கி உதவியுடன் 29 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.



**“சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கடந்த இரண்டாண்டுகளில் கழக அரசு 220 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் மின் இணைப்பு வழங்குதல், தெருவிளக்கு அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், உட்புறச் சாலைகள் அமைத்தல், கழிவுநீர் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றியுள்ளது”**

சுனாமி பாதித்த 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 591 மீனவக் குடியிருப்புகளில், 151 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், 42 ஆயிரம் மீனவர்களுக்கு எந்திரப் படகுகள், கட்டுமரங்கள், வள்ளங்கள், வலைகள் முதலியவை வழங்கப்பட்டுள்ளன.

110 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள வலைகள், உயிர்காக்கும் ரப்பர் ஆடைகள், பேட்டரி பொருத்திய கைவிளக்குள், குளிரூட்டும் ஐஸ்பெட்டிகள் முதலியவை வழங்கப்பட்டுள்ளன.

5 ஆயிரத்து 635 மீனவர்கள் – மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கியிருந்த 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் கடன் இரத்து செய்யப்பட்டுள்ளது.

61 ஆயிரத்து 995 மீனவர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு; 102 கோடியே 42 இலட்சம் ரூபாய் சுழல்நிதியும், 39 கோடியே 77 இலட்சம் ரூபாய் பொருளாதார உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

35 ஆயிரத்து 732 ஊனமுற்றவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் – 35 கோடியே 73 இலட்சம் ரூபாய்ச் செலவில் பொருளாதார மேம்பாட்டு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுனாமியில் தாய் அல்லது தந்தை இழந்த 1,713 குழந்தைகளுக்கு தலா 51 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 8 கோடியே 74 இலட்சம் ரூபாய் வங்கிகளில் இருப்பு வைக்கப்பட்டு, அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித்தொகை மூலம் அவர்களது கல்விச் செலவுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளின் பள்ளிப்படிப்பு தடைபடாத வகையில் மாதந்தோறும் 300 ரூபாய் நிதிஉதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

# நியாய விலைக்கடைகளில் பாமாயில் லிட்டருக்கு 5 ரூபாய் விலை குறைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உத்தரவு

**வி**லைவாசியைக் கட்டுப்படுத்த செயல்படுத்தப் படும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், தமிழக அரசால் பாமாயில் லிட்டர் ரூ.35க்கு தற்போது நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவி வரும் விலை நிலவரத்தைக் கருத்தில் கொண்டு 15.12.2008 முதல் நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் பாமாயில் விலையை லிட்டருக்கு ரூ.5 குறைத்து ரூ.30க்கு விற்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

எனவே 15.12.2008 முதல் நியாய விலைக் கடைகளில் பாமாயில் லிட்டருக்கு ரூ.30க்கு விற்பனை செய்யப்படும் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தெரிவித்துள்ளார். ❖

# அண்ணா பொன்மொழிகள்

**ச**ட்டம் – உயிர், உடைமை, உரிமை, அமைதி ஆகியவைகளுக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக் கொள்ள விழிப்புடன் இருக்கிறது!

**ச**ட்டத்துக்கு அடங்கி நடப்பது கேவலப்போக்கு என்றோ கோழைத்தனம் என்றோ கூறுபவர் எங்கும் இரார் – ஏனெனில், சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு!

# போக்குவரத்துத் துறையில் விரைவூக்க அட்டை (ஸ்மார்ட் கார்டு) மூலம் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்



தமிழகத்தில் வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் நாளுக்குநாள் பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களையும் கணினி மூலம் இணைத்து வாகனப் பதிவுச் சான்றிதழ்களையும் (R.C. Book), ஓட்டுநர் உரிமங்களையும் வழங்கும் பணிகள் எளிமைப்படுத்திட கணினி மயமாக்கும் திட்டத்தை 1999ஆம் ஆண்டில் அன்றைய தி.மு.க. அரசு அறிமுகப்படுத்தியது.

அதன் தொடர்ச்சியாக வாகனப் பதிவுகளிலும், ஓட்டுநர் உரிமங்களிலும் மேலும் எளிய முறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடன் தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் விரைவூக்க அட்டை (ஸ்மார்ட் கார்டு) முறையை நடைமுறைப்படுத்திட திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ள இந்த விரைவூக்க அட்டையில் முதல் பகுதி கண்ணால் பார்த்து படித்து அறியக் கூடியது. இரண்டாவது பகுதி கணினியால் மட்டும் கண்டறியக்கூடியது.

* இந்த விரைவூக்க அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் போலி ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் போலி வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் பயன்படுத்துவதை முற்றிலும் தடுக்கமுடியும்.
* விரைவூக்க அட்டையில் பதிவு செய்யப்பட்ட தகவல்களை அழிக்கமுடியாது. ஆனால் கூடுதல் தகவல்களைச் சேர்க்க முடியும்.
* மாற்றவோ, திருத்தவோ இயலாத அடையாள அட்டையை விண்ணப்பதாரர்களுக்கு வழங்க இயலும்.

* பொதுமக்களுக்கு விரைவாக சேவை அளிக்க முடியும்.

* கணினிமயமாக்கப்பட்ட அடிப்படைத் தகவல் தொகுப்பிலிருந்து தகவல்களைப் பெற இயலுவதால், தேவையான விவரங்களை மிகக் குறுகிய காலத்திலேயே சரிபார்க்க இயலும்.

* வாகன மற்றும் வாகன ஓட்டுநரின் அனைத்து குற்றங்களும் பதிவு செய்யப்படுவதால் வாகன ஓட்டுநர்கள் சோதனை அலுவலர்களிடமிருந்து உண்மையை மறைக்க இயலாது.

* விரைவூக்க அட்டையில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் மின்னணு மூலம் பாதுகாப்பு அணுகு முறையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதால், இத்தகவல்களை அங்கீகரிக்கப்பட்ட நபர்களைத் தவிர மற்றவர்கள் பார்க்க இயலாது.

* விரைவூக்க அட்டையில் தகவல்கள் பதிவு செய்யப்படுவதால் அதிக தகவல்களைப் பதிவு செய்ய இயலும்.

* தற்பொழுது பயன்பாட்டிலுள்ள வாகனப் பதிவுச் சான்றிதழைவிட இந்த விரைவூக்க அட்டையை எடுத்துச் செல்வது மிக எளிது.

* விரைவூக்க அட்டை முறையைச் செயல்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்குச் சீரிய முறையில் சேவை செய்யவும் தகவல்களைப் பாதுகாக்கவும் இயலும்.

இத்தகைய பல்வேறு பயன்களை அளிக்கக்கூடிய இந்த விரைவூக்க அட்டையில் உள்ள தகவல்களைப் படிக்க ஏதுவாக அனைத்து அமலாக்கப் பிரிவு அதிகாரிகளுக்கும் கூடிய விரைவில் ரீடர் கருவி வழங்கப்பட உள்ளது. தற்போது அமலாக்க அதிகாரிகள் சோதனை செய்யும் அனைத்து ஆவணங்களும் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு உரிய பதிவுகள் விரைவூக்க அட்டையில் மேற்கொள்ளப்படும்.

ஓட்டுநர் உரிமம் வழங்குவதிலும், வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்குவதிலும் ஒரு முக்கிய திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடிய இந்த விரைவூக்க அட்டை வழங்கும் முறை தென்னிந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் **10.11.2008** அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார். இதன்பயனாக சென்னை (தெற்கு), திருவான்மியூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் **10.11.2008** அன்று முதல் புதியதாக வழங்கப்படும் அனைத்து ஓட்டுநர் உரிமங்களும், வாகனப் பதிவுச் சான்றிதழ்களும் விரைவூக்க அட்டை மூலமே வழங்கப்படுகிறது. இம்முறை படிப்படியாக தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் பின்பற்றப்பட உள்ளது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, உள்துறைச் செயலாளர் திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் திரு. சி.பி. சிங், இ.ஆ.ப., போக்குவரத்து இணை ஆணையர்கள் திரு. நாராயணமூர்த்தி, திரு. சிவஞானம், திரு. பிராங்க்ஸ்டீபன்லூயிஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

**அண்ணாவின் பொன்மொழி**



**பெண் கல்வி**

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும் போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர் பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

# உடனடி நடவடிக்கையால் மனநோயாளிகள் காப்பாற்றப்பட்டனர்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உடனடி நடவடிக்கையால், சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நோயாளிகளில் மேலும் பலர் தேங்கிய தண்ணீரைக் குடித்து உடல்நலம் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டனர் என 'இந்து' (The Hindu) ஆங்கில ஏட்டில் செய்தி விமர்சனக் கட்டுரை வெளிவந்துள்ளது.

1.12.2008 தேதியிட்ட 'இந்து' ஆங்கில ஏட்டில் திரு. ஆர்.கே. இராதாகிருஷ்ணன் எழுதியுள்ள செய்தி விமர்சனம் வருமாறு:–

கடந்த நவம்பர் 28ஆம் தேதியன்று இந்த மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மனநோயாளிகள் பலர் வயிற்றுப்போக்கு, வாந்தி காரணமாக தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மனநல மருத்துவமனையில் மழைநீர் தேங்கியிருப்பதாலும், கூரைகள் ஒழுகுவதாலும் அங்கிருந்து மனநோயாளிகளை அகற்றவேண்டும் என்ற ஆலோசனை அன்றிரவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டவுடனேயே அவர் நடவடிக்கை எடுத்தார்.

மனநல மருத்துவமனையில் நான்கு நோயாளிகள் அத்தகைய தண்ணீரைக் குடித்து நோயுற்று இறந்தனர். அவர்கள் வைக்கப்பட்டிருந்த நூற்றாண்டுக் கட்டடம் ஒழுகுகிறது. அவர்கள் பூட்டி வைக்கப்படும் அந்தக் கட்டடத்தில் மாலை 5 மணியிலிருந்து மறுநாள் காலை சிற்றுண்டி அளிக்கப்படும் வரை அவர்கள் அந்தத் தேங்கிக் கலங்கிய அசுத்த நீரைக் குடித்துள்ளனர்.

மருத்துவமனையில் பொதுப்பணித்துறை புதிய கட்டடம் ஒன்றைக் கட்டியிருந்தாலும், அதற்கு இன்னமும் மின் இணைப்பு தரப்படவில்லை என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். மழை நிற்கும் வரை அந்தக் கட்டடத்தைத் தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாண்புமிகு முதலமைச்சரிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

### ஒரே நாளில் பல பணிகளை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர்

வழக்கமாகவே ஒரு நாளில் பணியாற்றும் நேரம் மிக அதிகமாகவும், ஓய்வு நேரம் மிகக் குறைவாகவும் பழகிவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 29.11.2008 அன்று மேலும் நீண்ட நாளாக அமைந்தது. அதிகாலை 4 மணிக்குப் பணியாற்றத் துவங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களிலிருந்து அவர் இல்லத்துக்கு அதிகாலையில் வந்திருந்த 'பேக்ஸ்' செய்திகளைப் படித்தார். மழையால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு பொறுப்பு அளிக்கப்பட்ட அமைச்சர்களிடமும் தொலைபேசியில் பேசினார். சென்னையில் மழையின் பாதிப்பை நேரடியாக அறிந்துகொள்ள மூன்று மணி நேரத்துக்கும்மேல் நகரின் பல பகுதிகளில் பயணம் மேற்கொண்டார். மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதலை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் உள்ளிட்ட ஒரு டஜனுக்கும் மேற்பட்ட கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். உடனடி கட்சிப் பணிகளையும் கவனித்தார்.

அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களைப் பார்த்துமருத்துவர்களிடம் அவரது உடல்நிலை மற்றும் சிகிச்சைபற்றி மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். வெள்ள நிலைமை பற்றியும், தீவிரவாதிகள் தாக்குதல் பற்றியும் ஆலோசிக்க மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. டி.ஆர். பாலு, திரு. ஆ. இராசா ஆகியோரை புதுடெல்லியிலிருந்து வரவழைத்தார்.

அவர்களிடம் ஆலோசனைகளை முடித்து, மத்திய அரசுக்கு வெள்ளச்சேதம் பற்றிய அறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்த பிறகு, அவர் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களை வரவழைத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களிடம் பேசுமாறு கூறினார். முந்தைய அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வுத்துறையை கவனித்த மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள் மனநல மருத்துவமனையில் அவசரமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அப்போது கடலூரில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களிடம் விளக்கினார்.

மறுநாள் காலை மனநல மருத்துவமனைக்கு விரைந்த மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் பொதுப்பணித்துறை கட்டடம் பற்றி விசாரித்தார். மின் இணைப்பு இல்லாவிட்டாலும் தற்போதுள்ள வசதிகளைவிட இந்தக் கட்டடம் பெருமளவில் நன்றாக இருப்பதாக அவர் மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்களிடம் தெரிவித்தார். கட்டடத்தை உடனடியாக மருத்துவமனை நிருவாகத்திடம் ஒப்படைக்க வேண்டிய தேவை குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி, அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களிடம் பேச அவரும் ஏற்றுக்கொண்டார். சில மணி நேரத்தில் அந்தக் கட்டடத்தின் சாவிகள் மருத்துவமனை நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அன்றே நோயாளிகள் இடம் மாற்றப்பட்டனர்.

# மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் மற்றும் பதிவுத் தலைவர் (Registrar General and Commissioner. Census, Delhi) உள்துறை, மைய அரசு தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கு 2001 விவரங்களை மென்வட்டுப் படிவமாக (CD) வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டின் 2001 ஆம் ஆண்டு நிலவரப்படியான மக்கள் தொகை விவரம்

**மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை – 6,24,05,679**

**ஆண் – 3,14,00,909**

**பெண் – 3,10,04,770**

**(2001 நிலவரப்படி)**

அதிகப்படியான மக்கள் தொகை உள்ள மாவட்டம் சென்னை **43,43,645**

குறைந்தபடியான மக்கள் தொகை உள்ள மாவட்டம் பெரம்பலூர் **4,93,646.**

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகை விவரம் மாவட்டம் வாரியாக கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் தொகை குறித்த புள்ளி விவரங்கள் கீழ்க்கண்ட வலைதளத்தில் கணினியில் காணலாம்.

**http:/census.tn.nic.in**

நகல் வேண்டுவோர் அதனை எந்தக் கணினி மையத்திலும் அணுகிப் பெறலாம் (by browsing) மேலும் விவரங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் (மாவட்ட முதன்மை மக்கள் தொகை கணக்கு அலுவலர்) மற்றும் மாநகர ஆணையர் (மாநகர முதன்மை மக்கள் தொகை கணக்கு அலுவலர்) அலுவலகத்தில் பெறலாம்.

❖ ❖ ❖

# மின் ஆளுமையை அமலாக்கி மக்களுக்கு மிகச் சிறப்பாகச் சேவை செய்யும் மாநிலங்களில் தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் காரணம்

– **முனைவர் மு. அனந்தகிருஷ்ணன்,** முன்னாள் துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்

'E Governance' எனப்படும் மின் ஆளுமையில் ஒட்டு மொத்த இந்தியாவிலும் முதல் மாநிலமாகத் தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. டேட்டாக்வெஸ்ட் என்ற ஐ.டி. துறை பத்திரிகையும், ஐ.டி.சி. எனப்படும் இன்டர்நேசனல் டேட்டா காா்ப்பரேஷன் என்ற அமைப்பும் சேர்ந்து ஒரு ஆய்வு நடத்தின.

இதில் மின் ஆளுமையை அமலாக்கி மக்களுக்கு மிக சிறப்பாகச் சேவை செய்யும் மாநிலங்களில் முதல் மாநிலம் என தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் நடக்கும் இந்த ஆய்வில் கடந்த ஆண்டு முன்னணியில் இருந்த டெல்லியை பின்னுக்குத் தள்ளி 2008–2009ஆம் ஆண்டுக்கான விருதை நமது மாநிலம் (தமிழகம்) வென்றுள்ளது.

இதுகுறித்து அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் மு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் கூறியதாவது:–

1995–1996ஆம் ஆண்டில் இந்தியாவில் தகவல் தொழில் நுட்ப புரட்சி மிக வேகமாக வளர்ந்து வந்த ஒரு கால கட்டம், அந்தக் காலத்தில் இந்தியாவில் தமிழகம், கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் பல நிறுவனங்கள் ஈடுபட்டன. அதே மாதிரி அந்த நிறுவனங்களுக்கு ஆதரவு அளிப்பதில் தமிழ்நாடு மிகவும் முன்னிலையில் இருந்தது. முதன் முதலாக 1997ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பக் கொள்கை முதன் முதலில் மத்திய அரசிடம் கூட இல்லாத கால கட்டத்தில் தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது.

அந்தத் தகவல் தொழில் நுட்பக் கொள்கை வந்த உடனே தமிழகத்தில் எந்த வேகத்தில், எந்தெந்த துறைகளில் அதனை வளர்க்கவேண்டும் என வழிவகுக்கப்பட்டது.

அதில் ஒரு முக்கியமான கொள்கை 'E' Governance's என்றால் மின் ஆளுமை என்று சொல்வார்கள் – அதாவது இந்தக் கணிப்பொறி துறையில் – தகவல் தொழில் நுட்பத்துறையில் மிக வேகமாக, புரட்சிகரமான வளர்ச்சிகள் ஏற்படும்போதும், அந்த வளர்ச்சிகள் எப்படி சாதாரண மக்களுக்கு போய்ச்சேர வேண்டும் என்பதுதான் இந்த மின் ஆளுமை – அந்த தகவல் தொழில் நுட்பத்தின் சக்தியை, அதனுடைய வல்லமைகளையெல்லாம் பொதுமக்களுக்கு கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக, இந்த ஆட்சி முறையில் எத்தகைய வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையிலேதான் நிறுவப்பட்டது.

1999–2000ஆம் ஆண்டு முதன்முதலாக ஐ.டி. டாஸ்க் போர்ஸ் என்று ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் இருந்தது. அந்த டாஸ்க் போர்ஸில் இந்த ஆளுமை செய்வதற்காக என்னென்ன வழிகளெல்லாம் செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதன்மூலமாக சென்னை, மதுரை உள்ளிட்ட பெரிய நகரங்களில் மட்டுமல்லாமல் சிறிய சிறிய கிராமங்களில் கூட ஒரு சிறிய கணிப்பொறி மூலமாக எப்படி அவர்களுக்கு வேண்டிய தகவல்களைத் தரமுடியும். அவர்களுக்கு வேண்டிய சான்றிதழ்களைத் தரமுடியும். இதே மாதிரி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தருவதற்காக 16 விதமான சேவைகள் மக்கள் சேவைக்காக முதலில் திட்டங்கள் தீட்டி அவை அமல்படுத்தப்பட்டது.

இவை இந்தியாவில் முதன்முதலாக தமிழகத்தில்தான் கணிப்பொறி தகவல் தொழில்நுட்பம் மக்களுக்குப் போய் முழுமையாக சேவைத் துறையாக செயல்படவேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்படுத்தப்பட்டது.

அதற்குப் பிறகுதான் ஆந்திரா, கர்நாடகா என்று இந்தியாவில் பிற மாநிலங்கள் சிறிது, சிறிதாக 10,15 ஆண்டுகளாக செயல்படுத்திக் கொண்டு வருகின்றன. இப்படிச் செய்யும்போது முதல் நடவடிக்கையாக என்ன செய்தார்கள் என்றால் மக்களுக்கு எந்தெந்த சேவைகளில் மிக அதிகமான அலைச்சல், மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை தேர்ந்தெடுத்து அந்த சேவைகளுக்கு முன்னுரிமை தரப்பட்டது. அடிப்படையாக இந்த செய்திகளெல்லாம் தமிழில் வர வேண்டும்.

குறிப்பாக கிராமங்களில் சிறிது அளவு படித்தவர்களுக்கு இந்த சேவை போய்ச் சேர வேண்டும் என்றால் இவையெல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமின்றி தமிழில் போய்ச் சேர வேண்டும். 1999ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் தமிழ் இணைய மாநாடு ஒன்று நடந்தது – உலகத் தமிழ் இணைய மாநாடு. அந்த மாநாட்டில் தமிழை எப்படி கணிப் பொறியில் மிக எளிதாகப் பயன்படுத்திட என்னென்ன வழிமுறைகள் வகுக்கவேண்டும் என்று முடிவுகள் எடுக்கப்பட்டது. அதற்கு அன்றைய கலைஞர் அரசும் ஒப்புக்கொண்டு, அதற்கு அரசாணைகள் எல்லாம் வெளியிடப்பட்டது.

மின் ஆளுமை – ஐ.டி. டேட்டா பேஸில் எடுக்கப்பட்டு நமது கொள்கையில் அதனைப் புகுத்தி செயல்படுத்திட என்ன வழி முறைகள் பயன்படுத்த வேண்டும் என்று பயிற்சிகள் கொடுத்து அந்தப் பயிற்சிகளுக்குப் பிறகு தமிழில் கொண்டுவருவதற்கு என்ன செய்யவேண்டும் என்று யோசிக்கப்பட்டது.

டேட்டா பேஸ் முறையில் நிலப் பட்டா, சாதிச் சான்றிதழ், பிறப்பு, இறப்பு சான்றிதழ் இவைகளையெல்லாம் கேட்ட உடனேயே–கணிப்பொறியில் டைப் செய்து உடனே சான்றிதழ் கிடைக்கவேண்டும்.

மக்கள் இரண்டு நாள் மூன்று நாள் விண்ணப்பம் கொடுத்த உடனே சான்றிதழ்கள் கிடைக்க வேண்டும். இவை தமிழில் கொண்டு வரப்பட்டு, எல்லோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வாறு முனைவர் மு.அனந்தகிருஷ்ணன் கூறினார்.

**“கலைஞர் செய்திகள்” தொலைக்காட்சியில் ‘ஈ கவர்னன்ஸ்’ என்ற தலைப்பில் கணினி வல்லுநர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இருந்து... (16.12.2008)**

❖ ❖ ❖

# தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயல்வழிக் கற்றல் முறை சிறப்பாக செயல்படுகிறது

**இந்தியாவிற்கான இங்கிலாந்து நாட்டின் தூதர் திரு. ரிச்சர்ட் ஸ்டேக் பாராட்டு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை இந்தியாவிற்கான இங்கிலாந்து நாட்டின் தூதர் ரிச்சர்ட் ஸ்டேக் சந்தித்துப் பேசினார். முன்னதாக சென்னை மாநகராட்சிப் பள்ளியில் செயல்வழிக்கற்றல் முறை கற்பிக்கப்படும் முறையை அவர் ஆய்வு செய்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இந்தியாவிற்கான இங்கிலாந்து நாட்டின் தூதர் ரிச்சர்ட் ஸ்டேக் 12.12.2008 அன்று மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். அப்போது சென்னையில் உள்ள இங்கிலாந்து நாட்டின் துணைவேந்தர் மைக்கானர், தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

முன்னதாக, சென்னை அமைந்தகரையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் மாணவர்களுக்கு செயல் வழிக்கற்றல் முறையில் பாடம் கற்பிக்கும் முறையை இங்கிலாந்து நாட்டின் தூதர் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்தனர். இந்தப் புதிய முறை குறித்து ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் அந்தக் குழுவினர் கேட்டறிந்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இங்கிலாந்து நாட்டின் தூதர் தமிழகத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயல்வழிக்கற்றல் முறை மிகச்சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ள செயல்வழிக் கல்வித் திட்டம் இந்தியாவிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதாகவும் இங்கிலாந்து நாட்டின் தூதர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய மேயர் மா. சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் செயல்வழிக் கற்றல் திட்டத்தின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். ❖

# வீரபாண்டிய கட்டபொம்மன், விஜயரகுநாத சேதுபதி, மருதுபாண்டியர் வழித்தோன்றல்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.1000ஆக உயர்வு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவு



நமது நாட்டு விடுதலைப் போரில் பங்குகொண்டு வரலாற்றில் போற்றப்படும் வீரப் பெருமக்களின் தியாகத்தைப் பாராட்டி, அவர்களுடைய வழித்தோன்றல்களுக்குச் சிறப்பு ஓய்வூதியம் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. அந்த வகையில், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டிய சகோதரர்கள், இராமநாதபுரம் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி ஆகியோரின் வழித்தோன்றல்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் மாதம் 500 ரூபாய் என்பதை அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாதம் 1,000 ரூபாய் என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.12.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி, வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள் 7 பேரும், மருதுபாண்டிய சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 132 பேரும், முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் 80 பேரும் இனி மாதம் 1,000 ரூபாய் வீதம் சிறப்பு ஓய்வூதியம் பெறுவர்.

## தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியத்தின் செய்தி ஏடு வெளியீடு

புவிப்பரப்பு அறிவியலில் இந்தியா ஒரு முதன்மையான நாடாக உருவாகி வருகிறது. தகவல் தொழில் நுட்பத்தின் உதவியால் வரைபடம் உருவாக்குதல், ஆராய்ச்சி, தகவல்களை அளித்தல் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி நம் நாட்டில் புவியியல் தகவல் அளிப்பதில் காணப்படும் இடைவெளிகளை நீக்க வேண்டும்.

மாநிலத் திட்டக்குழுவின்கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியம், சிறந்த முறையில் நிலவள, நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்ய நீர் மறுசெறிவூட்டும் ஆய்வுகள் வண்டல் அகற்றும் ஆய்வுகள், நீர்நிலைகள் மீட்கும் ஆய்வுகள் போன்ற புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு மாநில நிலப்பயபாட்டு வாரியத்தின் தலைவரான மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், அவர்கள், செய்தி ஏட்டின் முதல் பிரதியை, 19.11.2008 அன்று மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டார். இந்நாள் (19.11.2008) புவியியல் தகவல் அமைப்பு நாள் என்று கொண்டாடப்படுகிறது.

ESRI அமைப்பைச் சேர்ந்த திரு. கிருஷ்ணா ராவ் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவின் அலுவலர்கள், ஊழியர்களிடையே 'புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள்' என்ற பொருளில் உரை நிகழ்த்தினார். ❖



# சுற்றுலாவை மேலும், மேலும் வளர்க்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது.

**சென்னை தீவுத்திடலில் 35ஆம் இந்திய சுற்றுலா – அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சியை துவக்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை**

சென்னை தீவுத் திடலில் 24.12.2008 அன்று நடைபெற்ற 35 ஆம் இந்திய சுற்றுலா–அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்து விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

சென்னை மாநகரத்தில் 1971 ஆம் ஆண்டு கழக அரசினால் உருவாக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இந்தப் பொருட்காட்சி இன்றைக்கு நண்பர்கள் சுட்டிக்காட்டியவாறு, 35ஆவது பொருட்காட்சியாக தொடங்கி வைக்கப்படுகின்றது. இந்த அரியவாய்ப்பினைப் பெற்றமைக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தாருக்கும், அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை இன்று தொடங்கி வைப்பதன் மூலம், கடந்த ஆண்டு வருமானமாகக் கிடைத்த தொகையைவிட, அதிகத் தொகை கிடைக்குமென்று அமைச்சர் தம்பி சுரேஷ் ராஜன் குறிப்பிட்டார். எவ்வளவு தொகை கிடைத்தது என்பதைவிட, எவ்வளவு பேர் இந்தப் பொருட்காட்சியைக் கண்டார்கள், களித்தார்கள், அறிய வேண்டியவற்றை அறிந்தார்கள் என்பதுதான் மிக முக்கியமான ஒன்றாகும். அதற்கேற்ப ஏறத்தாழ 40–க்கும் மேற்பட்ட அரங்குகள் இந்த மைதானத்திலே பொருட்காட்சிக்காக அமைக்கப்பட்டு, நம்முடைய மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் அரங்குகள் எல்லாம் இவற்றில் இடம்பெற்று, பல கருத்துக்களைப் போதிக்கக்கூடிய வகையிலே விளங்குகின்றன என்பதை எண்ணி நான் பெருமையடைகின்றேன்.

சுற்றுலா என்பது நாம் ஒரு அமைப்பாக, அதற்கென ஒரு வளர்ச்சிக் கழகத்தைத் தொடங்கி ஆண்டுதோறும் நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றாலும்கூட, ஒவ்வொரு மாநிலத்திலும் ஆங்காங்கு பொருத்தமான இடங்களிலே அமைத்து, கொண்டாடி வருகின்றோம் என்றாலும்கூட, பழங்காலத்திலேயே நம்முடைய பெரியவர்கள், புலவர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், இந்தச் சுற்றுலாவை அவர்கள் அறிந்தோ, அறியாமலோ, அரவணைத்து, ஆதரித்து வளர்த்திருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

**இராமயணம் – சிலப்பதிகாரம்**

இராமாயணத்தை எடுத்துக் கொண்டால் கூட அதுவொரு புராணக் கதைதான். ஆனால்,




இராமாயணம் முழுக்க முழுக்க ஒரு சுற்றுலாக் கதை. அயோத்தியிலே தொடங்கி, தண்டகாருண்யத்திற்கு வந்து, கிஷ்கிந்தைக்குச் சென்று, இலங்கை வரையிலே வந்து போர் நடத்தி, இப்படி பல நாடுகளை, பகுதிகளை, இந்தியாவிலே இணைக்கின்ற ஒரு நிலையினை இராமாயணம் கொண்டிருக்கிறது. அதைப்போலவே சிலப்பதிகாரத்தை எடுத்துக்கொண்டால் இன்னும் சொல்லப்போனால், அதை திட்டமிட்டே, சுற்றுலா வளர்ச்சிக்காகவே இளங்கோவடிகள் எழுதினாரோ என்று எண்ணுகின்ற அளவிற்கு அமைந்த ஒரு இலக்கியம், சிலப்பதிகார இலக்கியம். காவிரிப்பூம் பட்டினத்திலே அறிமுகப்படுத்தி, அங்கே வந்து இறங்குகின்ற, அங்கிருந்து ஏற்றுமதியாகின்ற பொருள்களையெல்லாம் விளக்கி, அவைகள் எந்தெந்த நாட்டிற்குச் சென்றன, எந்தெந்த நாட்டிலிருந்து வந்து இறங்கின என்பவைகளை யெல்லாம் எடுத்துச்சொல்லி, காவிரிப்பூம்பட்டினம் எவ்வளவு பெரிய துறைமுகம் என்பதை எடுத்துக்கூறி, அங்கே வாழ்ந்த கண்ணகியும், கோவலனும், இல்வாழ்க்கையிலே எவ்வளவு இன்பமாக இருந்தார்கள் என்பதையெல்லாம் புலப்படுத்தி, அதற்குப்பிறகு அவர்களுக்கிடையிலே ஏற்பட்ட சிறு ஊடல் காரணமாக மாதவியோடு சென்ற கோவலன் வீடு திரும்புகின்ற நிலை ஏற்பட்டு, பிறகு கண்ணகியும், கோவலனும் பூம்புகாரிலேயே தங்கி, வேறுவிதமான நிலையிலே வாழ்க்கையை அமைத்து, இழந்த பணத்தை, இழந்ததாகச் சொல்லப்படுகிற பணத்தைச் சம்பாதித்திருக்கக்கூடும். அப்படிச் செய்யாமல், அவர்கள் மதுரை வரையிலே சென்றதற்குக் காரணம், அவர்களை மதுரைக்கு அனுப்புகின்ற முயற்சியிலே இளங்கோவடிகள் ஈடுபட்டார். அவர்கள் பூம்புகாரிலே இருந்தால், பாண்டிய நாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லமுடியாமல் போய்விடும் என்பதற்காக, அவர்களைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி, மதுரை மாநகரத்திலே கோவலன் கண்ணகியினுடைய சிலம்பை விற்பதற்குச் சென்றபோது, அவன் 'கள்வன்' என்று குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டிக்கப்பட்டு, உயிர்ப் பலி கொடுக்கப்பட்டு, அதிலே ஆவேசம் கொண்ட கண்ணகி, மதுரை மாநகரத்தையே சபித்து, அதற்குப் பிறகு அவள் சிலையாக நின்றாள்.

**சுற்றுலாக்கதை**

அப்படிச் சிலையாக நின்ற கண்ணகிக்கு, உண்மையிலேயே ஒரு சிலை வடிக்கவேண்டுமென்று சேரன் செங்குட்டுவன் புறப்பட்டு, அந்தச் சிலை வடிக்கக்கூட பக்கத்து ஊரிலே உள்ள கல்லை எடுத்தால், எங்கே சுற்றுலா வர்ணனை சுருங்கி விடுமோ என்ற காரணத்தால், இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவனை இமயமலை வரையிலே அனுப்புகிறார். அப்போதுதான் சுற்றுலா முழுமையடைகிறது. அவன் இமய மலைக்குச் சென்று கனக விசயன் என்கின்ற ஆரிய மன்னர்களைத் தோற்கடித்து, குயிலாலுவம் என்ற இடத்திலே அவர்களை அடிமைகளாகப் பிடித்து, அவர்களுடைய தலையிலே கல்லை ஏற்றி, அந்தக் கல்லைக் கொண்டுவந்து வஞ்சிமூதூரில் கண்ணகிக்குச் சிலை வைத்தான் என்கின்ற வரையிலே அந்தக் கதை சென்று முடிகிறதென்றால், எவ்வளவு பெரிய சுற்றுலாக் கதை அது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளமுடியும்.

ஆகவே, இராமாயணம் என்ற இதிகாசப் புராணக் கதையானாலும் சுற்றுலாவைத்தான் விளக்குகிறது; சிலப்பதிகாரம் என்ற இலக்கிய வரலாறானாலும்

---

**"இராமாயணம் என்ற இதிகாசப் புராணக் கதையானாலும் சுற்றுலாவைத்தான் விளக்குகிறது; சிலப்பதிகாரம் என்ற இலக்கிய வரலாறானாலும் சுற்றுலாவிற்குத்தான் முக்கியத்துவம் தருகிறது. இப்படி இன்று நேற்றல்ல; இலக்கியக் காலத்தில், புராணக் காலத்தில், சங்க காலத்திலேகூட சுற்றுலாவிற்கு ஒரு தனி இடம் இருந்தது"**

---

சுற்றுலாவிற்குத்தான் முக்கியத்துவம் தருகிறது. இப்படி இன்று நேற்றல்ல; இலக்கியக் காலத்தில், புராணக் காலத்தில், சங்க காலத்திலேகூட சுற்றுலாவிற்கு ஒரு தனி இடம் இருந்தது. சங்க காலப் பாட்டு ஒன்று; சுற்றுலாவிற்குக் கணவன், மனைவி, குழந்தைகள் இவர்கள் சென்று ஒரு ஊரிலே தங்குகின்ற அந்தக் காட்சியைச் சங்ககாலப் புலவன் மிக அழகாக வர்ணிக்கிறான். அதை அவர்களுடைய சுற்றுலாப் பயணம் என்றே எடுத்துக்காட்டுகின்றான். இப்படி சங்ககாலம் தொட்டு இதுவரையிலே சுற்றுலாத் தன்மை வேறுபட்டிருக்கக் கூடும், மாறுபட்டிருக்கக் கூடும். அதனுடைய நோக்கம் அன்று முதல், இன்று வரை ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கிறது. அந்த வகையிலே சுற்றுலாவை மேலும், மேலும் வளர்க்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது.

இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். சென்ற ஆண்டு 15 இலட்சம் பேர் இந்தச் சுற்றுலா பொருட்காட்சியைக் கண்டார்கள்; இந்த ஆண்டு 20 இலட்சம் பேர் காண்பார்கள் என்று சொன்னார்களென்றால், அப்படி ஆர்வத்தை வளர்க்கின்ற அளவிற்கு, அப்படி அவர்களுக்கு ஆவலைத் தூண்டுகின்ற அளவிற்குப் பல அதிசயங்களை அவர்கள் காண வாய்ப்பை வழங்கவேண்டும். நாம் நமது ஊரிலே இருக்கின்ற பொருட்களைக் காட்டி இதுதான் பொருட்காட்சி என்று சொன்னால் பயனில்லை. வெளியூர்களிலே, வெளி மாநிலங்களிலே, வெளிநாடுகளிலே இருக்கின்ற பொருட்களை, அதிசயங்களைப் படங்களாகத் தீட்டி, ஓவியங்களாக வரைந்து, சிலைகளாக வடித்து, சிற்பங்களாகச் சமைத்து, நம்முடைய பொருட்காட்சியிலே அவைகளையெல்லாம் வைத்து, பார்க்க வருகின்றவர்களுக்கு அதன்மூலமாகப் பாடம் பயிற்றுவிக்க வேண்டும்; அந்த நிலையையும் நீங்கள் மேற்கொள்ளவேண்டும். ஏதோ 40 கடைகள் வந்தன; 40 ஸ்டால்கள் இருந்தன; அதிலே அரசாங்கத்தினுடைய ஸ்டால் எத்தனை? வெளி மாநில ஸ்டால் எத்தனை? தனியாருடைய ஸ்டால் எத்தனை என்ற கணக்கைப் பார்த்தால் மாத்திரம் போதாது. வந்தவைகள் எப்படியெல்லாம் பயன்பட்டன, எப்படி மக்கள் அதைப் பார்த்து ரசித்தார்கள், சுவைத்தார்கள் என்பதற்கேற்ப அவைகள் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, இங்குள்ள அதிகாரிகளும், அலுவலாளர்களும், நிருவாகப் பொறுப்புக்கு வருகின்ற நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் போன்றவர்களும் இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்துப் பாடுபட்டால், வெளியூரிலேயிருந்து வருகின்றவர்களுக்குத் தனியாக ஒரு பொருட்காட்சியிலிருந்து, இவைகளையெல்லாம் பார்த்து ரசிக்க வேண்டுமென்றில்லை.

ஒரு காலத்திலே சென்னை மாநகரம் ஏறத்தாழ ஒரு கிராமத்தைப் போலவே இருந்தது. நான் ஊட்டிக்குச் சென்றபோது, உதகையிலே ஆளுநர் மாளிகையைக் காண நேரிட்டது. அங்கே மாட்டப்பட்டிருந்த படங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பு கிடைத்தது. அப்போது அந்தப் படங்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து, நம்முடைய ஆளுநர் மாளிகையில் அமைக்க வேண்டுமென்று எண்ணியதுண்டு; அவற்றை நிறைவேற்றியதும் உண்டு. ஏனென்றால், பழைய சென்னை எப்படியிருந்தது என்பதற்கு அந்தப் புகைப்படங்கள் எல்லாம் சான்று. பழைய சென்னையில் இன்றைக்கு ஓடுவதைப்போல பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்காது. பழைய சென்னையில் கைரிக்ஷாக்கள் ஓடும். இப்பொழுது புதிய சென்னையில் சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடுகின்றன; ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன; வண்ண வண்ணப் பேருந்துகள், சீருந்துகள் ஓடுகின்றன. இது புதிய சென்னை. பழைய சென்னை நம்மைவிட்டு இன்னும் அகல மறுத்துக் கொண்டிருக்கிறது; அதை நாம் மாற்றியாக வேண்டும்.

கூவத்தை அழகுபடுத்துவதற்காக எடுத்த முயற்சிகளெல்லாம் இதுவரையிலே வீணாகத்தான்



ஆகியிருக்கிறது. அந்த முயற்சியிலே வெற்றி பெறுவதற்கு என்னென்ன மாற்றுத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமோ, அவற்றைச் சிந்தித்துக் கொண்டுவந்து, கூவத்தைத் தமிழகத்தினுடைய தேம்ஸ் நதிபோல ஆக்குகின்ற அந்த முயற்சியிலே நாம் வெற்றி பெற வேண்டும். அப்பொழுதுதான் சென்னை மாநகரத்தை அழகுபடுத்துவதிலே நாம் வெற்றி பெற்றோம் என்று மார்தட்டிக் கொள்ளமுடியும்.

சென்னை மாநகரத்தை ஒரு பத்தாண்டுகளுக்கு முன் பார்த்தவர்கள் இன்றைக்குப் பார்த்தால், அதனுடைய உருவம் மாறியிருப்பதைக் காணமுடியும். ஏன், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்தவர்கள்கூட மன்னிக்கவேண்டும்; பார்த்தவர்கள் என்று சொன்னேன்; அப்போது பார்க்கமுடியாது; எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய விளம்பரப் பலகைகள் (Hoardings). இவைகள் இருந்து சென்னையின் அழகைப் பார்க்கமுடியாத அளவிற்கு மறைத்துக் கொண்டிருந்தன. அவைகளையெல்லாம் அங்கிருந்து எடுக்க வேண்டுமென்பதற்காக நாம் பட்ட பாடு இருக்கிறதே, முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காகப் பட்டபாட்டைவிட, அந்த "ஹோர்டிங்சை" அகற்றுவதிலே நான் வெற்றி பெறுவதற்காகப்பட்ட பாடு அவ்வளவு பாடு. இங்குள்ள சாதாரண நீதிமன்றத்திலேயிருந்து, உச்சநீதிமன்றம் வரையிலே சென்று போராடி, வாதாடி, எப்படி சேரன் செங்குட்டுவன் இமய மலை வரையிலே சென்று, கண்ணகிக்குச் சிலை கொண்டு வந்தானோ, அதைப்போல சென்னைக்கு அழகு கொண்டுவர, உச்சநீதிமன்றம் வரையிலே நாம் செல்ல நேரிட்டது. அதற்குப்பிறகு கிடைத்த வெற்றிதான், இன்றைக்கு நீங்கள் சென்னை மாநகரத்தை இவ்வளவு அழகு குலுங்கப் பார்க்க முடிகிறது.

நான் அந்த எண்ணம் கொண்டதற்கு என்ன காரணம்? அந்த ஹோர்டிங்ஸ் எல்லாம் எடுக்கப்பட வேண்டும் என்று அந்த ஹோர்டிங்ஸ்மீது ஆத்திரமா? அல்ல. பெங்களூரைப் பார்த்தேன்; டெல்லியைப் பார்த்தேன்; மும்பையைப் பார்த்தேன். அந்தப் பெரு நகரங்களெல்லாம் அழகுற விளங்குவதற்கு இன்னும் சொல்லப்போனால் பெங்களூர், 'கார்டன் சிட்டி' என்று சொல்லுகின்ற அளவிற்குப் புகழ் பெற்று விளங்குவதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் பார்த்தபோது, 'ஏன் அதைப்போல சென்னையை ஆக்கக்கூடாது' என்று எடுத்த சபதம்தான், எத்தனையோ இன்னல்களுக்கிடையே, எவ்வளவோ பேருடைய தடைகளுக்கிடையே, நீதிமன்றத்திலே வாதாடி, போராடி, நாம் பெற்ற வெற்றிதான், இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே இவ்வளவு "ஹோர்டிங்சை" எடுத்தும், ஆங்காங்கு தழைத்த மரங்கள், செடி, கொடிகள், இவைகளைக் காணவுமான ஒரு அற்புதமான நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை யாராவது பாராட்டுகிறார்களா என்றால், மாட்டார்கள். ஏன்? கிலோ அரிசி ஒரு ரூபாய்க்குக் கொடுக்கிறோமே,

**"ஏழை ஆத்மாக்கள் எளிய ஆத்மாக்கள், சாதாரண, சாமானிய ஆத்மாக்கள், நம்மைப் பாராட்டுகின்ற அளவிற்கு நம்முடைய பணி தொடரவேண்டும்"**

அதையே யார் பாராட்டுகிறார்கள்? பாராட்டமாட்டார்கள். இங்கே நம்முடைய மேயர் பேசும்போது ஆதங்கத்தோடு சொன்னாரே, அதைப்போல நாம் செய்கின்ற காரியங்களுக்குப் பாராட்டு கிடைக்காது. இதற்காகத்தான் அந்தக் காலத்திலே சொன்னார்கள் பெரியவர்கள், 'ஆத்ம திருப்தி' என்று. யார் பாராட்டினாலும், பாராட்டா விட்டாலும், அவர்களுடைய ஆத்மாவிற்கு ஒரு திருப்தி. 'அப்பா, இந்தக் காரியத்தைச் செய்துமுடித்தோம்' என்கின்ற ஒரு ஆர்வம். அதற்குப் பெயர்தான் 'ஆத்ம திருப்தி' என்பது. அந்த ஆத்ம திருப்தி நமக்கு ஏற்படுகிறதல்லவா? நமக்கு அதுபோதும். இந்த ஆத்மாவிற்குத் திருப்தி ஏற்பட்டால், மற்ற ஆத்மாக்கள் நம்மைப் பாராட்டினால் என்ன, பாராட்டாவிட்டால் என்ன? அது பாராட்ட மறுக்கின்ற ஆத்மா; மகாத்மாவாக இருந்தாலும்கூட நான் கவலைப்படமாட்டேன். ஏழை ஆத்மாக்கள், ஏழை ஆத்மாக்கள் எளிய ஆத்மாக்கள், சாதாரண, சாமானிய ஆத்மாக்கள், நம்மைப் பாராட்டுகின்ற அளவிற்கு நம்முடைய பணி தொடரவேண்டும். அப்படிப்பட்ட பணி தொடர, அதற்கெல்லாம் ஊக்கமளிக்க, உற்சாகம் அளிக்க, உத்வேகம் அளிக்க, தூண்டுதலாக இருக்கக்கூடிய முயற்சிகளிலே ஒன்றுதான் இந்தச் சுற்றுலா பொருட்காட்சி முயற்சியாகும்.

இதை இன்றைக்குத் திறம்பட நடத்தியிருக்கின்ற அருமைத் தம்பி அமைச்சர் சுரேஷ் ராஜனை நான் பாராட்டுகிறேன். அவருக்கு உதவியாக இருந்து செயல்படுகின்ற நம்முடைய சுற்றுலாத்துறைச் செயலாளர் நண்பர் இறையன்பு, ஐ.ஏ.எஸ். அவர்களைப் பாராட்டுகின்றேன். நல்ல கலை ஆர்வமும், இலக்கிய ஆர்வமும் படைத்தவர் இறையன்பு. இறைவனிடத்திலே அன்பு கொண்டவரோ அல்லவோ, அவர் இலக்கியத்திலே காதல் கொண்டவர் என்ற முறையிலே இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி திறம்பட உருவாக பணியாற்றியிருக்கின்றார். அவருக்கு நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி இந்த ஆண்டு பெறுகின்ற வெற்றியிலேயிருந்து, அடுத்தடுத்த ஆண்டுகளிலே பெறவேண்டிய வெற்றிகளுக்கு இவை அச்சாரமாக ஆகட்டும் என்று கூறி, இதைத் திறந்து வைப்பதிலே பெருமையும், இந்த வாய்ப்பை அளித்த நண்பர்களுக்கு நன்றியும் கூறி விடைபெறுகிறேன்.

★

# மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகளும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன!

சென்னையில் 29.12.2008 அன்று
கோபதி நாராயணா சாலை - திருமலைச் சாலை சந்திப்பு மேம்பாலத்தை திறந்துவைத்து,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.



இன்றைய தினம் இங்கே நடைபெறுகின்ற மேம்பாலத் திறப்புவிழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வெள்ளம்போல் கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைவதோடு, பெருமிதமும் கொள்கின்றேன். ஏனென்றால், சென்னை மாநகரத்தைக் காண்போர் அனைவருமே கவலையோடு தெரிவித்துக் கொண்டிருக்கின்ற ஒரு செய்தி போக்குவரத்து நெரிசல். 'என்ன, காலையிலே பத்து மணிக்கு வருவதாகச் சொன்னீர்கள்; 12-00 மணி வரையிலே வரவில்லையே' என்று கேட்டால், 'என்ன செய்ய, போக்குவரத்தில் நெரிசல் அப்படி' என்று சமாதானம் சொல்லுகின்ற நிலை இன்னமும் சென்னை மாநகரத்திலே இருப்பதை நம்மால் காண முடிகின்றது.

**பாலங்கள்**

அந்த நெரிசலைப் போக்குவதற்கு வழி என்ன என்று சிந்திக்கின்ற ஒரு ஆட்சி, சிந்திக்கின்ற ஒரு மாநகராட்சி மன்றம் சென்னையிலே இருக்கின்ற காரணத்தால், அந்த ஆட்சியை நடத்துகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கின்ற காரணத்தால், அந்த இயக்கத்திற்குத் துணையாக காங்கிரஸ் போன்ற இயக்கங்கள் விளங்குகிற காரணத்தால், அவர்களுடைய துணையோடும், நேர்மையான, நாணயமான, ஊக்கம் மிகுந்த, உற்சாகம் மிகுந்த அதிகாரிகளுடைய துணையாலும், நாம் பாலங்களை, மேம்பாலங்களை சென்னை மாநகரத்திலே அதிகமாக உருவாக்கினால், போக்குவரத்து நெரிசலை ஓரளவிற்குச் சமாளிக்க முடியும் என்ற முடிவிற்கு வந்து, அந்த முடிவின்படிதான்



எதிர்க்கட்சிக்காரர்கள் தமிழகத்திலே இருந்தார்கள்; இருக்கிறார்கள். நான் இந்த வழியாகப் பாலங்களைக் கடந்து செல்லும் போதெல்லாம், இப்பொழுதல்ல; நாம் மீண்டும் ஆட்சிக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்தோமே அதற்கு முன்பு, உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்கு எதிரேயிருக்கின்ற பாலத்தைக் கடந்து என்னுடைய கார் செல்லும்போதெல்லாம், இரண்டு போலீஸ் அதிகாரிகள் உட்கார்ந்து, கடப்பாரையை வைத்து அங்கே இடித்துக் கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் தெரிந்த அதிகாரி ஒருவரிடம்– 'என்னய்யா இடித்துக் கொண்டிருக்கிறீர்கள்; போகும் போதெல்லாம் பார்க்கிறேன்' என்று கேட்டால், 'ஊழல் எங்கேயாவது இருக்கிறதா என்று நாங்கள் தேடிப் பார்க்கிறோம்' என்று சொல்வார்கள். அதல்ல, நான் விளையாட்டாக ஒருமுறை சொன்னேன். 'ஒரு தங்க நாணயத்தை இந்தப் பாலத்திலே, ஒரு பக்கத்திலே புதைத்திருக்கிறேன்' என்று நான் சொன்னேன். இது எப்படியோ, எந்த போலீஸ் அதிகாரியின் காதிலே விழுந்து, தெரிந்து, அது எங்கேயிருக்கிறது என்று தேடிப் பார்ப்பதற்காக அந்தப் பாலத்தையே பல இடங்களில் புண் ஆக்கிய காட்சியை நான் கண்டேன்.

இன்றைக்கு இதுவரையிலே இங்கே எடுத்துச் சொல்லப்பட்டதே 76 பாலங்கள் என்றும், அவற்றிலே சிறிய பாலங்களுடைய கணக்கு 26 என்றும், மேம்பாலங்களுடைய கணக்கு 10–க்கும் மேற்பட்டவை என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. அந்தப் பாலங்கள் எல்லாம், கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு உருவானவை என்பதை யாரும் மறந்திருக்கமுடியாது.

அப்படி உருவான பாலங்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக, இந்தப் பாலங்களெல்லாம் ஊழல் நிறைந்தவை என்று சொல்லி, பாலங்களைக் கட்டிமுடித்த மறுநாளே அதைக் கட்டுவதற்கு முற்பட்ட தம்பி ஸ்டாலினையும், அதற்குத் துணைபுரிந்த அரசின் தலைவராக அன்றைக்கு முதலமைச்சராக இருந்த என்னையும், என்னைச் சார்ந்தவர்களையும் கைது செய்து – 'ஏன் இப்படி கைது செய்கிறீர்கள்' என்று கேட்டபோது; 'இவர்கள் கட்டிய பாலங்களிலே ஊழல்' என்று சொல்லி, 'அதற்கு என்ன ஆதாரம்' என்று கேட்டபோது, 'ஆதாரம் பிறகு தரப்படும்'; 'அரெஸ்ட் இப்போது செய்யப்படும்' என்ற நிலையிலே முடிவெடுத்து, அதை நடைமுறைப்படுத்தி ஒரு வார காலம் எங்களைச் சிறையிலே வைத்து, வதைத்து, எங்களைத் தெருவிலே உட்கார வைத்து, எந்தச் சிறைச்சாலைக்கு அனுப்புவது என்பதையே விவாதப் பொருளாக ஆக்கி, பட்டிமன்றம் நடத்தி, அதற்குப்பிறகு ஆறு நாட்கள் கழித்து மத்திய அரசு தலையிட்டு, மக்கள் எழுச்சி பொங்கி உயர்ந்தபிறகு, எங்களை விடுவித்த கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

ஆக, நாம் பாலம் கட்டினோம் என்றால், அதைப் பலரும் தங்கள் வசதி வாய்ப்புகளுக்காகக் கடந்து செல்ல, நடந்து செல்லப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், நாம் கட்டிய பாலத்திற்குப் பழுது சொல்லத்தான்

**“எங்கு பார்த்தாலும் வெளிநாட்டிலே இருப்பதைப்போல சாலைகள், தெருக்கள், சந்து பொந்துகள்கூட வெளிநாட்டை நினைவுபடுத்துகிற அளவிற்கு அமைந்திருக்கின்றன' என்று சொன்னால், அது மிகையாகாது”**

இப்படி ஊழலைத் தேடித் தேடி அலைந்து, பாலங்களை ஆங்காங்கு புள்ளி வைத்து, கெடுத்து, குட்டிச் சுவராக்குவதற்கு ஒரு ஆட்சி, ஒரு ஐந்தாண்டுக் காலம் இடையிலே நடைபெற்றது. மீண்டும் நாம் மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தவுடன், நம்முடைய தம்பி ஸ்டாலின் அப்பொழுது மேயராக இருந்தபோது கட்டிய பாலத்தைவிட அதிகமாக, அந்தத் துறைக்கே அமைச்சராக ஆனபிறகு, இன்னும் அதிகமாகப் பாலங்களை சென்னை மாநகரத்திலே கட்டுகிற நிலைமை ஏற்பட்டு, அந்தப் பாலங்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றார். அவை மிகச் சிறந்த பாலங்களாக இன்றைக்கு அமைந்திருக்கின்றன.

இங்கே நம்முடைய தலைமைச் செயலாளர் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, 'ஜகஜோதியாக இருக்கின்ற நிலை சென்னை மாநகரத்திலே நாம் காணுகின்றோம். அப்படிப்பட்ட முன்னேற்றம் நம்முடைய சென்னை மாநகரத்திற்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி உரிய தோழமைக் கட்சிகளுடைய உறவோடு, அவர்களுடைய ஒத்துழைப் போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இந்த வாய்ப்புக்களை, வசதிகளை சென்னை மாநகரத்து மக்கள் பெறமுடிகிறது; பெற முடிந்திருக்கிறது; தொடர்ந்து பெறமுடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலிலே, திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, தமிழகத்திலே ஒரேயொரு மாநகராட்சி மன்றம்; சென்னை மாநகராட்சி மன்றம். அந்த சென்னை மாநகராட்சி மன்றத்திலே நம்முடைய தோழர்கள் போட்டியிட்டு, ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரை ஊர் ஊராக அழைத்துச் சென்று, 'பாருங்கள் எங்கள் மேயரை; பாருங்கள் எங்கள் மேயரை' என்று காட்டிக்கொண்டிருந்தோம். அது நமக்கெல்லாம் மிகப் பெருமையாக இருந்தது. ஓராண்டு காலத்திற்குத்தான் அப்போது ஒரு மேயர்.

**ஒரேயொரு மேயர்**

யாரை மேயராகத் தேர்ந்தெடுப்பது என்று அண்ணா அவர்களும், மற்றவர்களும் அன்றைக்கு ஆராய்ச்சி செய்தோம். அ.பொ. அரசு, தோழர் முனுசாமி என்று ஒரு ஐந்தாறு பேர், 'நாங்கள் இந்த ஓராண்டு மேயர் பதவியை அனுபவிக்கிறோம்' என்று அவர்கள் சொன்னபோது, முனுசாமியைப் பார்த்து, வேறு நண்பர்களைப் பார்த்து அண்ணா சொன்னார்; 'நீங்களெல்லாம் கவுன்சிலர்களாகப் பல நாள் இந்த கார்ப்பரேஷனிலே இருந்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த ஓராண்டு காலத்திற்கு மேயராக ஒருவர் புதிய ஆளாக வரட்டுமே; யார் வரலாம் என்பதை நீங்களே உட்கார்ந்து முடிவு செய்து, நாளை காலையிலே எனக்கு வந்து சொல்லுங்கள்' என்று சொன்னார்கள்.

கோபாலபுரத்தில், வீட்டு முன் தாழ்வாரத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது என்னுடைய தாயார் அஞ்சுகம் அம்மையார்– ஸ்டாலினுடைய பாட்டி; ஏன் தயாநிதி மாறனுக்கும் பாட்டிதான்–அந்த பாட்டி வெளியே வந்தார்கள். 'என்ன தம்பி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று அண்ணாவைப் பார்த்துக் கேட்டார்கள். அண்ணா சொன்னார்; 'நீங்கள் சொல்லுங்கள் அம்மா, நாங்கள் ரொம்ப நேரமாகத் தலையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறோம்; யாரை முதல் மேயராகப் போடலாம்' என்று அண்ணா கேட்டார்கள். அஞ்சுகத்து அம்மையார் சொன்னார்கள்; 'யாரைப் போடப் போகிறீர்கள் ? அரசைப் போடுங்கள், அப்போதுதான் நமக்கு அரசே வரும்' என்று அம்மா சொன்னார்கள். அது ஏதோ ஒரு ஆசிர்வாதம் போல, ஒரு அசரீரி போல 'அரசைப் போடுங்கள், அப்போதுதான் அரசே வரும்' என்று அவர்கள் சொன்னார்கள்; அதைத் தட்டாமல் அண்ணா அவர்கள் அ.பொ. அரசை மேயராக ஆக்கினார். அப்போது நமக்கிருந்தது ஒரேயொரு மேயர்.

**அண்ணா அணிவித்த கணையாழி**

ரொம்ப காலத்திற்குப்பிறகு ஏழைகளுடைய கட்சிக்கு, ஏழைக் குடும்பத்திலே பிறந்து, அச்சுக் கோப்பாளராக இருந்து, அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருந்த அ.பொ. அரசு–சிந்தாதிரிப்பேட்டை அ.பொ. அரசு–நம்முடைய சென்னை மாநகரத்தினுடைய மேயராக ஆனார். அவருக்கு அங்கி அணிவித்து, அவருக்கு அழகான உடைகளை அணிவித்து அழகு பார்த்தோம். அவரை ஊர் ஊராக அழைத்துச் சென்றோம். நமக்கு ஒரு மேயர் அதிசயமாகக் கிடைத்தார். அந்த மேயர் கிடைப்பாரா, மாட்டாரா, தகுந்த வாக்குகள் நமக்குக் கிடைக்குமா என்ற பொழுதுதான், 'நான் நிச்சயமாக நம்முடைய மேயர்தான் வரப்போகிறார்' என்றபோது, அண்ணா மறுத்தார்.

'நீ இப்படித்தான் சொல்வாய்' என்று அண்ணா சொன்னார். பந்தயம் கட்டினார். 'என்ன பந்தயம்; எதற்கும்

நான் தயார்' என்று நான் அண்ணாவிடம் சொன்னேன். அண்ணா சொன்னார், 'நீ சொல்கிறபடி, கார்ப்பரேஷனிலே நாம் ஜெயித்து நம்முடைய மேயர் வந்தால், என்னுடைய கையால் உனக்கொரு கணையாழி அணிவிக்கிறேன்' என்று சொன்னார். அ.பொ. அரசு மேயராக வந்தவுடன், என்னுடைய அடுத்த வார்த்தை அண்ணாவைப் பார்த்து, 'அண்ணா, எப்போது கணையாழி அணிவிக்கிறீர்கள்; நான் பந்தயத்திலே ஜெயித்து விட்டேன்' என்று சொன்னேன்.

கடற்கரையிலே கூட்டம். அந்தக் கூட்டத்திலே சொன்னார் அண்ணா; 'என்னுடைய மனைவிக்குக்கூட ஒரு நகை வாங்க நான் கடைகளுக்குச் சென்றதில்லை. இந்தக் குறும்புக்கார கருணாநிதிக்காக கடை கடையாக ஏறி என் காலெல்லாம் வலிக்கிறது' என்று சொல்லி, இந்தக் கணையாழியை (கணையாழி அணிவிக்கப்பட்ட தன்னுடைய விரலைக் காட்டி) என்னுடைய விரலில் அணிவித்தார்.

**தியாகராயர் சிலைக்கு மாலை**

இந்தக் கணையாழியைப் பார்க்கும்போதெல்லாம், சென்னையிலே நம்முடைய மாநகராட்சியை உருவாக்க நாமெல்லாம் சேர்ந்து பட்டபாடு நினைவுக்கு வருகிறது. அதிலே பெற்ற வெற்றி நினைவுக்கு வருகிறது. அதைக் கண்டு களித்த அண்ணா முகத்திலே தெரிந்த மின்னல் சிரிப்பு நினைவுக்கு வருகிறது. அப்படிப்பட்ட நினைவுகளை யெல்லாம் பெறக்கூடிய அளவிற்கு இந்தக் கணையாழியும் நம்முடைய முதல் கார்ப்பரேஷன்– நாம் வெற்றி பெற்ற முதல் கார்ப்பரேஷன்– சென்னை மாநகரத்துக் கார்ப்பரேஷன் கிடைத்தபோது, நன்றி மறவாமல் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்; 'நீங்கள் வெற்றி பெற்று விட்டதாகக் கருதாதீர்கள்; திராவிட இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்த தியாகராயர் சென்னை மாநகராட்சி மன்ற முகப்பில் சிலையாக நின்று கொண்டிருக்கின்றார். நாளைக்குக் காலையிலே நீங்கள் மேயர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் செல்லும்போது, ஆளுக்கொரு மாலை எடுத்துச் சென்று, அவருடைய கழுத்திலேயிருந்து கால் வரையில், ஆளுயர ஒரு மாலையைத் தியாகராயர் சிலைக்கு அணிவித்துவிட்டு, உங்களுடைய ஆசிர்வாதத்தால்தான், உங்களுடைய உழைப்பால்தான், உங்களுடைய அறிவாற்றலால் அல்லவா, இந்த இயக்கம் வந்தது; நாங்கள் இன்றைக்கு

> **நம்முடைய நகராட்சி நிருவாகத்திலே ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு பகுதியும், தூய்மையாக இருக்கவேண்டும்; எடுப்பாக இருக்கவேண்டும்; கவர்ச்சியாக இருக்கவேண்டும்; சுற்றுலாப் பயணிகளைச் சுண்டியிழுக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் நம்முடைய நகரங்களும், நம்முடைய சாலைகளும், நம்முடைய ஊர்களும், நம்முடைய ஊர் நிருவாகமும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், நாம் பணியாற்றி வருகின்றோம்.**

இந்த உயர்வைப் பெற்றிருக்கிறோம் என்று தழைய தழைய அவருடைய உருவத்திற்கு ஆளுயர மாலையை அணிவியுங்கள்' என்று அண்ணா அன்றைக்கு வழியனுப்பி வைத்தார்.

**அருமையான திட்டங்கள்**

அண்ணாவினுடைய கனவும் வீணாகவில்லை. தொடர்ந்து இடையிடையே சில சறுக்கல்கள்; இடையிடையே சில தொய்வுகள் ஏற்பட்டால்கூட, சென்னை மாநகராட்சி மன்றத்தை இன்றைக்கு இயக்கிக் கொண்டிருக்கின்ற இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகமும், அதற்குத் துணையாக காங்கிரஸ் போன்ற பேரியக்கங்களும், தோழமைக் கட்சிகளும் நமக்கிருக்கின்ற காரணத்தால், இன்றைக்கு எடுத்துச் சொல்லப்பட்ட இவ்வளவு நற்பணிகளும், இந்த மாநகரத்திலே நடை பெற்றிருக்கின்றன.

சென்னையிலே முதன்முதல் மாநகராட்சி மன்றம். நாம் அரசு பெற்ற காரணத்தால், அரசோச்சுகின்ற வாய்ப்பும் மக்கள் நமக்களித்த காரணத்தால், திருச்சி, கோவை, சேலம், மதுரை, நெல்லை, திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி என்று இத்தனை மாநகராட்சி மன்ற மேயர்களை நாம் காணுகின்றோம். அன்றைக்கு ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு; அ.பொ. அரசு. அரசு நமக்கு வந்து விட்ட காரணத்தால், இன்றைக்குப் பத்து மேயர்கள் இருக்கின்றார்கள். அந்த மேயர்கள் ஆட்சி நடத்துகின்ற ஒவ்வொரு மாநகரத்திலும் எவ்வளவு அருமையான திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்பதைப் பார்க்கின்றோம்.

**மாற்றாரின் பாராட்டு**

இன்றைக்குக் காலையில் நம்முடைய தம்பி ஸ்டாலின் ஒரு காலண்டர் தயாரித்து, அதில் 10–15 படங்கள் நிறைந்த ஒரு தொகுப்பைக் காட்டினார். அந்தத் தொகுப்பில் என்னை மிக மிகக் கவர்ந்த ஒரு படம். அதிலே பல படங்கள் இருந்தன. மிக மிகக் கவர்ந்த ஒரு படம்; ஒரு கோபுரம், அந்தக் கோபுரத்தைச் சுற்றி மதில்சுவர். அந்த மதில் சுவருக்கு அப்பால் ஒரு அருமையான பளிங்கு கற்கள் பதிக்கப்பட்ட சாலை. ‘இது எந்த ஊர்’ என்று கேட்டேன். ‘இது மதுரை மீனாட்சி அம்மன் கோவில்’ என்று ஸ்டாலின் சொன்னார். ‘மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பிரகாரத்தை முன்பு சுற்றும்போது, சாலையெல்லாம் வெறும் மண் சாலையாக அல்லவா இருக்கும். இப்போது வந்துள்ள நம்முடைய மாநகராட்சி மேயருடைய பணி இது’ என்று சொன்னார். கண்ணாடியைப் போல இருக்கிறது; கோவிலைச் சுற்றியுள்ள அந்தச் சாலை. நம்முடைய கொள்கைகள் வேறு என்றாலும் கூட, கிராமங்கள் நகரங்களாகவும், நகரங்கள் மாநகரங் களாகவும் மாறினால்தான், நாம் ஆட்சி நடத்துகிறோம் என்பதற்குப் பொருள். இல்லாவிட்டால், எல்லோரையும்போல நாமும் வந்தோம்; அவர்களைப் போல நாமும் முடிந்தவரையிலே ஆட்சி நடத்தினோம்; அதிகாரிகள் சொன்னதைக் கேட்டோம்; நாம் நினைத்து எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை; மக்களுக்கென்று எந்தக் காரியத்தையும் நாம் செய்யவில்லை; மாற்றார் பார்த்துப் பாராட்டுகின்ற அளவிற்கு, மற்ற நாட்டுக்காரர்கள் பார்த்து வியக்கின்ற அளவிற்கு, எந்தக் காரியத்தையும் செய்யவில்லை யென்றால், நாம் பதவிக்கு வருவதற்கும், ஏற்கெனவே இருந்தவர்கள் பதவியிலே இருந்ததற்கும், எந்தவித வேறுபாடும் கிடையாது.

> “கூவம் திருந்துகிற வரையில் எனக்குத் திருப்தி இருக்காது. கூவத்திலே தெளிந்த நீரோடைபோல, பளிங்குபோல தண்ணீர் செல்கிற வரையில், அங்கே நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் குதித்து, நீந்தி விளையாடுவதைப் பார்க்கிறவரையில், எனக்கு நிச்சயமாக நிம்மதி இருக்காது; மகிழ்ச்சி இருக்காது”

அந்த வேறுபாட்டை உணர்த்துகின்ற வகையிலேதான், இன்றைக்குச் சென்னை மாநகராட்சியிலே என்னுடைய அருமை தம்பிமார்கள் மேயராகவும், பல்வேறு குழுக்களிலே தலைவர்களாகவும் இருந்தும், அவர்களுக்கெல்லாம் அமைச்சராக தம்பி ஸ்டாலினைப் போன்றவர்கள் இருந்தும், அவர்களுக்கெல்லாம் அறிவுரை கூறுகின்றவர்களாக, அவர்களோடு விவாதித்து நல்லவைகளைச் செய்பவர்களாக மத்திய அரசிலே இருக்கின்ற நம்முடைய தம்பி பாலுவைப் போன்றவர்கள் இருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தம்பி தயாநிதி மாறனைப் போன்றவர்கள் இருந்தும், அத்தகைய யோசனைகளை இன்றைக்குச் சொல்லுகின்ற காரணத்தால்தான், நாம் நம்முடைய வழியிலே மேலும் மேலும் சிறந்து விளங்க வழி ஏற்பட்டிருக்கிறது; பாதை அமைக்கப்பட்டிருக்கின்றது.

நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்; நம்முடைய சென்னை ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு எப்படி யிருந்தது? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எப்படியிருந்தது? சாலைகள் உண்டா? சாலைகள் ஒழுங்காக இருந்ததுண்டா? இல்லை. இன்றைக்கு எவ்வளவு நேர்த்தியாக சென்னை மாறியிருக்கின்றது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இந்த மாற்றம் போதாது. இன்னும் நிறைய மாற்றங்கள் தேவை. அதைத்தான் தம்பி ஸ்டாலின் பேசும்போது குறிப்பிட்டார்.

இன்னமும் என் தந்தைக்குப் பூரண திருப்தியில்லை என்று சொன்னார், உண்மைதான்.

ஏனென்றால், நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; நான் பார்த்ததில்லை. நம்முடைய தந்தையர் காலத்திலே சொல்லியிருக்கிறார்கள்.– 'பச்சையப்ப முதலியார் கூவத்திற்கு வந்து குளித்துவிட்டுச் செல்லுவார்; கூவத்திலே பச்சையப்ப முதலியார் இறங்கிக் குளிப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்' என்று. ஆனால், நீங்கள் பச்சையப்பர்களாக ஆகமுடியாவிட்டாலும், தமிழின் பால், அறிவின் பால், கல்வியின்பால், இச்சையப்பர்களாக ஆகவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கெல்லாம் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வெவ்வேறு மாநகராட்சி மன்றங்கள்; நான் மதுரையைச் சொன்னேனே, அதைப்போல எல்லா மாநகராட்சி மன்றங்களும், ஏதாவது ஒரு முனைப்பான காரியத்தைச் செய்யவேண்டும் என்கின்ற எண்ணம் ஏற்பட்டு, அதற்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கின்ற காட்சி இன்றைக்குத் தமிழகத்திலே எல்லா இடங்களிலும் காணுகின்றோம். அது எந்த மாநகராட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியினுடைய ஆதிக்கம் இருக்கின்ற மாநகராட்சியாக இருந்தாலும் சரி, இந்த ஆட்சியில் நகராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியத்திலே உள்ளவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப் பட்டிருக்கிறது; உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. நகராட்சிகளுடைய செலவிற்குப் போதுமான அளவிற்கு நிதி அவ்வப்போது ஒதுக்கப்படுகிறது.

நிதிப் பற்றாக்குறை எந்த ஊராட்சி மன்றத்திற்கும், எந்த நகராட்சி மன்றத்திற்கும், எந்த மாநகராட்சி மன்றத்திற்கும் இல்லையென்கின்ற அளவிற்கு நிதியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்களோடு பணி செய்கின்ற, அவர்களுக்கெல்லாம் தலைவராக, அமைச்சராக இல்லாமல், அவர்களைப்போலவே ஒரு ஊழியராக நம்முடைய தம்பி ஸ்டாலின், அவர்களோடு சேர்ந்து இன்றைக்குப் பணியாற்றுகின்ற காரணத்தினாலேதான், அவர்களும் ஆர்வத்தோடு தங்களுடைய பணிகளிலே வெற்றி பெற முடிகிறது. தங்களுடைய ஊர்களை, கிராமங்களை, நகரங்களை, மாநகரங்களை மற்றவர்களெல்லாம் வியப்படைகின்ற அளவிற்கு எடுத்துக்காட்ட முடிகின்றது. அந்த முன்னேற்றம் நான் விரும்பிய ஒன்று. ஆனால், எனக்கு முழு திருப்தியை அளிக்காத ஒன்று. மேலும் மேலும் முன்னேற வேண்டும்; மேலும் மேலும் கவர்ச்சிகரமாக வெளிநாட்டுக்காரர்கள் பார்த்து வியப்படைகின்ற அளவிற்கு, இந்த ஊர்களும், கிராமங்களும், பேரூர்களும், சிற்றூர்களும், நகரங்களும், மாநகரங்களும் விளங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கான உழைப்பை நல்கிட 'வாரீர், வாரீர்' என்று இளைஞர்களை, இதுபோன்ற பணிகளில் ஆர்வம் படைத்தவர்களை அழைக்கின்றேன்.

**"இன்றையதினம் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பாலத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தேன். அருகில் அண்ணா மேம்பாலம் இருக்கிறது. கலைவாணர் என்.எஸ்.கே.–வினுடைய சிலையை இங்கே அமைத்தவர் அண்ணா. சிறப்பாக அந்த நினைவாகவும், என் தலைமையிலே நடைபெற்ற அந்த விழாவில், அண்ணா அவர்களுடைய வாழ்க்கையில் கடைசி நிகழ்ச்சியாக கலைவாணருடைய சிலையை இந்தச் சாலையிலேதான் திறந்துவைத்தார் என்பதற்காகவும், அந்தச் சாலையை இணைக்கின்ற இந்தப் பாலத்திற்கு "கலைவாணர் மேம்பாலம்" என்ற பெயரைச்சூட்டிடுகிறேன்"**

★ ★ ★

# ரூ.2,256 கோடி மதிப்பில் 13 திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்குப் பரிந்துரை! சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்த ரூ.1,538 கோடி மதிப்பீட்டில் மாபெரும் திட்டம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தகவல்



ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் மாநில அளவிலான எட்டாவது ஒப்பளிப்புக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 4.12.2008 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ரூ.2,256 கோடி மதிப்பீட்டிலான 13 திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

**சென்னை மாநகரங்களில் மழைநீர் வடிகால் வசதியை மேம்படுத்த திட்டம்**

சென்னை மாநகரத்தில் ஏற்படும் வெள்ள அபாயத்தைக் கட்டுப்படுத்த ரூ.1,538.04 கோடிகளில் சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப் பணித்துறை, திட்டம் சமர்ப்பித்திருந்தது.

5வது மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு சென்னை மாநகராட்சி முழுவதற்கும் முழுமையான ஒரு திட்டத்தை மத்திய அரசிற்கு அனுப்பி இருந்தது. இதில் மத்திய அரசு சில மாறுதல்கள் கோரியிருந்தது. அதன்படி ரூ.1,538.04 கோடிகளில் திட்டம் கலந்தறிதர்க்குரியவர்களால் தயாரிக்கப்பட்டு மீண்டும் இக்குழுவின் முன் சமர்பிக்கப்பட்டது. இதனை மத்திய அரசுக்கு இக்குழு பரிந்துரைத்திட முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி ரூ.838.02 கோடியில் சென்னை மாநகராட்சியால் அனைத்துப் பகுதிகளிலும் வடிகால் வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையால் ரூ.415.47 கோடியில் திட்டங்களை செயல்படுத்தி நீர் நிலைகளில் வடிகால் வசதியை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**குடிநீர்த் திட்டங்கள்**

**ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த ரூ.47.50 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

### அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த ரூ.193.50 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 16.5 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்– நெசப்பாக்கம் பகுதி

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் நெசப்பாக்கம் பகுதியில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த ரூ.51.48 கோடியில் திட்டம்.

### தாம்பரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் தாம்பரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.148.90 கோடியில் திட்டம். இத் திட்டத்தின் மூலம் 3.6 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.24.96 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 66 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள்.

### பள்ளிக்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பள்ளிக்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.50.55 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 2.14 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### பீர்க்கங்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பீர்க்கங்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.19.55 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 37 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.18.17 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 1.6 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### செம்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் செம்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.50.55 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 2.14 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### திருமழிசை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் திருமழிசை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.20.40 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 37 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### பெருங்களத்தூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பெருங்களத்தூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.42.63 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 1.90 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

### பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.49.75 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 3.42 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டுபிட்கோ தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைச் செயலர் திரு. ஆதிசேஷய்யா, இ.ஆ.ப, நெடுஞ்சாலைத்துறை முதன்மைச் செயலர் திரு. கே.அலாவுதீன், இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலர் திரு. சந்திர மௌலி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. சுவரன்சிங், இ.ஆ.ப., நிதித்துறை சிறப்புச் செயலர் திரு. பிரவீன்குமார், இ.ஆ.ப., பேரூராட்சிகள்துறை ஆணையர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னைக் குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுனில்பாலிவால், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகத்துறை இயக்குநர் திரு. கே.செந்தில் குமார், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

❖ ❖ ❖



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை 12.12.2008 அன்று தலைமைச் செயலகத்தில் இங்கிலாந்து நாட்டின் தூதர் சர் ரிச்சர்ட் ஸ்டாக் அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். உடன் சென்னையில் உள்ள இங்கிலாந்து நாட்டின் துணைத் தூதர் திரு. மைக் கானர், தலைமைச் செயலாளர் திரு.கே. எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் திரு. தேவஜோதி ஜெகராஜன் இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சென்னை தியாகராயர் அரங்கில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நடந்தது. இவ்விழாவில் அண்ணா பற்றிய நூலை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி பெற்றுக் கொண்டார். உடன் சுற்றுலாத்துறை இயக்குநர் முனைவர் மு. இராஜாராம் இ.ஆ.ப., தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் இராம. நாராயணன், செயலாளர் கவிஞர் இளையபாரதி ஆகியோர் உள்ளனர். (6.12.2008)



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 130ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 10.12.2008 அன்று, சென்னையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., உள்ளிட்டோர் உள்ளனர்.



மகாகவி பாரதியார் அவர்களின் 127ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு. கா. இராமச்சந்திரன், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., உள்ளிட்டோர் உள்ளனர். (11.12.2008)

# ரூ.22 கோடி மதிப்பீட்டில் மதுரை எல்லீஸ் நகரில் மேம்பாலம்

### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

### திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்

மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள எல்லீஸ்நகர் மேம்பாலத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் **18.08.2008** அன்று திறந்து வைத்தார்.

எல்லீஸ்நகர் புதிய மேம்பாலத்தை திறந்து வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது, மதுரையின் மையப்பகுதியான பெரியார் பேருந்து நிலையம் அருகே ஏற்கெனவே ஒரு இரயில்வே மேம்பாலம் இருந்தது. அந்தப் பாலம் மிகவும் குறுகலாக இருந்ததால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. அதனால் அதனை மாற்றி அமைத்து புதிய மேம்பாலம் அமைக்கத் திட்டமிடப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டப்பட்டது.

இந்த மேம்பாலம் பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள கட்டபொம்மன் சிலையில் இருந்து டி.பி.சாலை வழியாக அரசரடி செல்லும் வகையில் ஒரு பிரிவாகவும், பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து எல்லீஸ்நகர் பகுதிக்குச் செல்லும் வகையில் மற்றொரு பிரிவாகவும், இரயில்வே மேற்கு நுழைவு வாயில் செல்வதற்கு இன்னொரு பிரிவாகவும் மொத்தம் 5 பிரிவாக பிரமாண்டமாக அமைக்கப்பட்டு உள்ளது.




கட்டபொம்மன் சிலை பகுதியிலிருந்து செல்லும் பகுதி **233.95** மீட்டர் நீளமும், பெரியார் பேருந்து



நிலையத்தில் இருந்து செல்லக்கூடிய பகுதி 118 மீட்டர் நீளமும், அரசரடி பக்கம் செல்லக்கூடிய பகுதி 290.6 மீட்டர் நீளமும், இரயில்வே மேற்கு நுழைவு வாயில் பகுதி செல்லக்கூடிய பகுதி 308.80 மீட்டர் நீளமும் கொண்டுள்ளதாக இப்பாலம் கட்டப்பட்டுள்ளது.

மதுரை மாநகரின் போக்குவரத்து நெரிசலைப் பெருமளவில் குறைக்கும் வகையில் இந்த மேம்பாலம் ஏற்படுத்தப்பட்டு பாலத்தில் இரவைப் பகலாக்கும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன, என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளகோவில் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி, மாண்புமிகு கைத்தறித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. அலாவுதீன், இ.ஆ.ப., தென்னக இரயில்வே தலைமை நிருவாக அதிகாரி திரு. இ. ராமநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.எஸ். ஜவஹர், இ.ஆ.ப, வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி மேயர் திருமதி. தேன்மொழி கோபிநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன், திரு. என். நன்மாறன், திரு.எஸ்.எஸ். கௌஸ்பாட்சா, திரு. பி. மூர்த்தி, மதுரை மாநகராட்சி துணை மேயர் திரு. பி.எம். மன்னன், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையக்குழு உறுப்பினர் திரு. வ. வேலுச்சாமி, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு. அரிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖



## அண்ணாவின் பொன்மொழிகள்

### அடிப்படை உண்மை

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங்கண்டு ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை, செயல்களை அழித்தொழிப்பதுதான் ஆகும். முனைப்புடனும் உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும்.

# மதுரை மாவட்டத்தில் தன்னிறைவு பெற்ற பேரூராட்சிகள்

மதுரை மாவட்டத்தில் உள்ள 12 பேரூராட்சிகளில் அனைத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் வெள்ளாப்பட்டி, எழுமலை பேரூராட்சிகளில் தலா ரூ.5 இலட்சம் மதிப்பில் ஊருணி அமைக்கப் பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டிற்கு அலங்காநல்லூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட குறவன்குளம் பகுதியில் இராஜகணபதி ஊருணியினை ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டு குளத்தினைச் சுற்றிலும் வேலி அமைத்து அழகிய மரக்கன்றுகள் நடப்பட்டு தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டு அமரும் இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளது. தற்போது பெய்த கனமழையினால் நீர் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இப்பகுதியில் நிலத்தடிநீர் உயர்ந்துள்ளது. வருகிற ஆண்டிற்கு பேரையூர், சோழவந்தான். விளாங்குடி, கல்லுப்பட்டி, பரவை, வாடிப்பட்டி போன்ற ஊர்களின் குளங்களும் புனரமைக்கப் படவுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சோ.சு. ஜவஹர், இ.ஆ.ப, அவர்கள் கூறும்போது,

> **அண்ணாவின் பொன்மொழிகள்**
>
> **தன்னலம் கருதாத்தன்மை**
>
> முகத்தில் புன்னகையும் – அகத்தில் நம்பிக்கையும், செய்கையில் சுத்தமும், சிந்தனையில் தன்னலம் கருதாத் தன்மையுமிருந்தால் போதுமானது!

மாவட்டம் முழுவதும் உள்ள 431 கிராமப் பஞ்சாயத்துகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் 240 கிராமங்களில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.12 கோடி மதிப்பில் ஊருணி அமைக்கப்பட்டு நிலத்தடி நீர் அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதமுள்ள கிராம பஞ்சாயத்துகளுக்கு வருகிற ஆண்டில் ஊருணிகள் அமைக்கப் படவுள்ளது. உள்ளாட்சியின் மூலம் கிராமக் குளங்கள் மேம்படுத்தப்பட்டு விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் மட்டும்தான் அதிகமான குளங்கள் அமைக்கப்பட்டு மாநிலத்தில் முன்னோடியாகத் திகழ்கிறது, என்றார்.

மேலும் அவர் கூறும் போது மிகவும் நிதிவசதியில் நலிவுள்ள அ.வல்லாளப்பட்டி, ஹார்விபட்டி, எழுமலை பேரூராட்சிகளில் 38 பணிகள் ரூ.158.10 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பேரூராட்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்யப்பட்டு பேரூராட்சி தன்னிறைவு பெற்றுள்ளது. பிறதுறை ஒருங்கிணைப்பு செய்து 123 பணிகள் ரூ.571 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் கிராமத் தூய்மை, பசுமை, சுகாதாரம் போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அதை நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. அ.வல்லாளப்பட்டி, ஹார்விபட்டி பேரூராட்சியில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதி கொண்ட சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டு ஏழை, எளிய கிராம மக்களின் வீடுகளில் நடைபெறும் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு குறைந்த கட்டணத்தில் விடப்பட்டு பேரூராட்சியின் வருவாயினைப் பெருக்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகள் அனைத்தும் தன்னிறைவு பெற்று சிறப்பாகத் திகழ்கிறது'' என்றார்.

* * *

# கோ-ஆப்டெக்சின் நவீன வடிவமைப்புகளில் புதிய ரக பட்டுச் சேலைகள்



மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் 20 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் மூலம் இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவைப் பெற்று 2007-2008ஆம் ஆண்டில் விற்பனைக் குறியீடு ரூ.1,140 இலட்சத்தை தாண்டி ரூ.1,221.87 இலட்சம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. விற்பனையின் சாதனையை பாராட்டி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் முதல் பரிசு மதுரை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது.

மதுரை மாவட்டத்திலுள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் 2007-ஆம் ஆண்டு தீபாவளி விற்பனைக் குறியீடு ரூ.640 இலட்சம் ஆகும். ஆனால், அதையும் தாண்டி 774 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதுபோல் 2008ஆம் ஆண்டில் தீபாவளி விற்பனை ரூ.835 இலட்சம் ஆகும்.

கோ-ஆப்டெக்ஸ் புதிய வடிவமைப்புகளையும், புதிய ரகங்களையும் உருவாக்குவதில் தொடர்ந்து முனைப்புடன் செயல்பட்டு சாதனை படைத்து வருகின்றது. இந்த முயற்சியின் தொடர்ச்சியாக வாடிக்கையாளர்களின் நவநாகரிக விருப்பத்திற்கு ஏற்ப தீபாவளி விழாக்கால விற்பனைக்குப் பல புதிய ரகங்களை பட்டுச்சேலைகளிலும், பருத்தி நூல் சேலைகளிலும் அறிமுகப்படுத்தியது.

டிசைனர் பட்டுச்சேலைகளில் ஜர்துசி, குந்தன், ஜமிக்கி போன்ற வேலைப்பாடுகளுடன் உயர்தர நூலிழைகள் கொண்டு வடிவமைப்பு வேலைகள் கண்கவரும் விதத்தில் செய்யப் பட்டுள்ளன. இந்தப் பட்டுச் சேலையின் மதிப்பு ரூ.9,000இலிருந்து வேலைப் பாடுகளின் அடிப்படையில் சேலையின் விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இவ்வகை பட்டுச்சேலைகள் வாடிக்கையாளர் களிடையே அதிக வரவேற்பைப் பெற்று வருகின்றது.

மகளிரைக் கவரும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள பட்டுச்சேலையில் “ஒலியும்-ஒளியும்” கலந்து புதியதொரு பட்டுச்சேலையை கோ-ஆப்டெக்ஸ் உருவாக்கியுள்ளது. புடவையின் முந்தானைப் பகுதியில் அணிகலன் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் வடிவமைப்பில் சிறிய பல்புகள் பொருத்தப்பட்டு சிறிய பாட்டரி (வெளியே தெரியாத வண்ணம்) உதவியுடன் பல்புகள் மிளிர்வதும், அவ்வப்போது ஓசை எழுப்புவதும் இதன் சிறப்பம்சமாகும்.

சேலையை அணிந்திருப்பவர் அவரது விருப்பத்திற்கேற்ப ஒலியையும், ஒளியையும் தனித்தனியே இயங்கச் செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. சலவையின்போது பேட்டரியை எடுத்துக்கொள்ளவும், தேவைப்படும்போது பொருத்திக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதியரக “ஒலியும்-ஒளியும்” பட்டுச்சேலைகள் வாடிக்கையாளர்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்தப்புடவைகள் ஆர்டரின்பேரில் செய்து கொடுக்கப்படுகின்றன.

தனியார் மில் துணி வகைகளுக்கு இணையாக உருவாக்கப்பட்டுள்ளது. இது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எளிய மற்றும் நடுத்தர மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் விதமாக புதிய ரக பட்டுச்சேலைகள் குறைந்த விலையில் வந்துள்ளன. இனி ஏழைப் பெண்களும் பட்டுச்சேலை அணியலாம் என்ற நிலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

**– சிவ. சு.சரவணன்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

# பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டுவரும் சிறந்த ஆட்சி

இராமநாதபுரம் மாவட்டத்தில்

ரூ.87.75 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்து

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உரை.

இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதை மாற்றியமைக்கும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் ரூ.616 கோடியில் கூட்டுக்குடிநீர்த் திட்டப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும் மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் மற்றும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இராமநாதபுரத்தில் 12.12.2008 அன்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.13.54 கோடி மதிப்பிலான 9 புதிய கட்டடங்கள் மற்றும் 7 புதிய குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த ரூ.55.93 கோடி மதிப்பிலான புதிய 480 கட்டடங்களைத் திறந்து வைத்து, ரூ.18.28 கோடி மதிப்பில் 4,558 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிகளையும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கிப் பேசும்போது தெரிவித்ததாவது:

இந்த நிகழ்ச்சியின் மூலம் அரசுத் திட்டங்கள் மற்றும் கருத்துக்களை உங்களிடையே பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. இங்கு கூடியுள்ள மகளிர் குழுக்களிடையே காணப்படுகின்ற பொறுமை, அமைதி, கட்டுப்பாடு போன்றவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்களின் தன்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது. இன்றைய தினம் 16 புதிய கட்டடங்கள், திட்டங்கள், குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு ரூ.13.54 கோடியில் அடிக்கல் நாட்டுதல் நிறைவடைந்த ரூ.55.93 கோடியில் 480 புதிய கட்டடங்கள், சாலைப் பணிகள் போன்றவை திறந்து வைத்தல், 4,558 பயனாளிகளுக்கு ரூ.18.28 கோடி நலத்திட்ட உதவிகள் மற்றும் மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் போன்றவை இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக அரசு விழாக்களில் அமைச்சர்கள் மேடையில் ஒரு சில பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பின்னர் விழா முடிந்து அரசு அலுவலர்கள் அவற்றைத் தொடர்ந்து வழங்குவது வழக்கம். ஆனால் தற்போது உங்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தும் வகையில், வந்திருக்கும் அனைத்து மகளிர் குழுக்களுக்கும் மேடையிலேயே நலத்திட்ட உதவிகளை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டமாக வழங்கி வருகிறேன். மேலும் ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்று பல்வேறு அரசுத்துறைகள் சார்பிலும் இன்றைய தினம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன. மொத்தமாக ரூ.87.74 கோடியில் திட்டப்பணிகள் துவக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் இந்த விழா அமைந்துள்ளது.

**கூட்டுக் குடிநீர்த்திட்டம்**

வறண்ட பூமியாக உள்ள இந்த மாவட்டத்தின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில்ரூ.616கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்திற்கு நான் வருகை தரும்போதெல்லாம் இத்திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறேன். இத்திட்டத்தைத் துவக்கி வைக்கும் நிகழ்ச்சியின்போது மூன்றாண்டு காலத்தில் திட்டப்பணிகளை முடிக்கவேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இருப்பினும் 20 மாதங்களில் முடிக்கின்ற வகையில் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் செவ்வனே நடைபெற்று வருகிறது. 95 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள். அவ்வாறாக இருந்தால் தமிழர் திருநாளாம் தைத்திங்கள் தமிழ் வருடப்பிறப்பு அன்று திட்டத்தை துவக்கி வைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. எத்தனையோ பணிகள் எனது துறையில் இருந்தாலும் இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்

இத்திட்டப்பணிகள்தான் என்னைப் பெருமைப்பட வைக்கிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவை முதன்முறையாக துவக்கி வைத்தார். தன்னம்பிக்கையை உருவாக்கி பொருளாதார மேம்பாடு அடையும் வகையில் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதை குறிக்கோளாகக்கொண்டு இந்த சுயஉதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிகளும், வங்கிக் கடனுதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. 99 சதவீத மகளிர் குழுக்களால் வங்கிக் கடன்கள் தவறாது திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது. இது ஒட்டுமொத்த தமிழகத்திற்கு கிடைத்த பெருமையாகும். மகளிர் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் வகையில் இந்தியன் வங்கி இந்தியாவில் 16 இடங்களில் தனி மையங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் 10 இடங்கள் தமிழ்நாட்டில் அமையவுள்ளன.

**மகளிர் நலத்திட்டங்கள்**

துவக்கத்தில் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த மகளிர் குழுக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சிகள் தற்போது நகர்புறங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்கான கட்டணத்தொகையும் உயர்த்தப்பட்டு தற்போது ரூ.45 வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 1.5 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது ஒவ்வொரு மாவட்டமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திருமண உதவித் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 1989ஆம் ஆண்டு ரூ.5,000/– நிதி உதவி வழங்கப்பட்டது. பின்னர் இந்த ஆட்சிக் காலத்தில் ரூ.10,000/–ஆக உயர்த்தப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்றால் ரூ.15,000/–ஆக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு தற்போது ரூ.20,000/– வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழகத்தில் 42,784 பெண்களுக்கு ரூ.64.57 கோடி இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம்

**"எத்தனையோ பணிகள் எனது துறையில் இருந்தாலும் இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் இத்திட்டப்பணிகள்தான் என்னைப் பெருமைப்பட வைக்கிறது"**

மாவட்டத்தில் மட்டும் 568 பெண்களுக்கு ரூ.85.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கான மகப்பேறு நிதி உதவித்திட்டத்தின்கீழ் 9.66 இலட்சம் பெண்களுக்கு ரூ.425 கோடி வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 1,395 பெண்களுக்கு ரூ.83.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 50 வயதைக் கடந்த திருமணமாகாத பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இதுவரை 9,100 மகளிருக்கு ரூ.36.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 220 பெண்களுக்கு ரூ.88,000 வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 6.84 இலட்சம் பயனாளிகளுக்கு 6.84 இலட்சம் இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 15,611 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபின் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தில் முதல் கையெழுத்திட்டார். அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு தற்போது செப்டம்பர் 15ஆம் தேதி முதல் 1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அத்துடன் 10 மளிகைப் பொருட்கள் மானிய விலையில் ரூ.50க்கு வழங்கும் திட்டம் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டுவரும் இந்த ஆட்சிதான் சிறந்த ஆட்சி. இதற்கு நீங்கள் துணைநிற்க வேண்டும்.

**"99 சதவீத மகளிர் குழுக்களால் வங்கிக் கடன்கள் தவறாது திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது. இது ஒட்டுமொத்த தமிழகத்திற்கு கிடைத்த பெருமையாகும். மகளிர் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் வகையில் இந்தியன் வங்கி இந்தியாவில் 16 இடங்களில் தனி மையங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் 10 இடங்கள் தமிழ்நாட்டில் அமையவுள்ளன"**

இன்றைய தினம் நலத்திட்ட உதவிகளைப் பெற வருகை தந்துள்ள அனைவருக்கும் மற்றும் பொதுமக்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன், இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறந்த செயல்பாடுகளுக்காக இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி, பாண்டியன் கிராம வங்கி, இந்தியன் வங்கி ஆகிய வங்கியாளர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு குடிசைமாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள் தலைமையுரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அண்ணாவின் பொன்மொழிகள்

### ஒருபோதும் மாறமாட்டேன்

"நான் நெஞ்சில் உள்ளதைக் கூறுகிறேன். கள்ளங்கபடமில்லாமல் கூறுகிறேன். பேச்சுக்குக் கூறவில்லை. எந்தப் பலனையும் எதிர்பார்த்துக் கூறவில்லை. மற்ற கட்சியிலுள்ள எல்லோரையும் மதிக்கிறேன். மரியாதைக் குறைவான எண்ணம் எனக்கு ஒரு துளியும் கிடையாது".

"நான் எளிய ஏழைக் குடியில் பிறந்தவன். கல்லூரியில் நான் படிப்பேனா என்று ஜோஸ்யம் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தவன். அதையெல்லாம் மறந்து விட்டு இன்று வந்த பதவியினால் தலைகனத்துப் போய் 50 வருடமாக நான் பயின்ற பண்பாட்டை இழக்கச் சம்மதிக்கமாட்டேன்".

"பதவி இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் பண்பாட்டைப் பெறுவது கடினம். பெறமுடியாத பண்பாட்டைப் பெற்று—அந்தப் பண்பாட்டை இழக்கும் போதையாக ஒருபோதும் மாறமாட்டேன்".

### மரியாதை இல்லையென்றால் தமிழகம் பொறுக்காது!

"தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும், ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனால்... தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்".

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் அந்த மொழிக்குச் சொந்தக்காரர் நாம் என்று நினைக்கும்போது அந்த மொழி மீது நமக்குப் பற்றுப் பாசம் ஏற்படாமலா இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது – எந்த நோக்குடனாவது – எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால் அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதான் இருக்கிறது. பக்குவமாகக் கடக்க வேண்டுமானால் நல்ல நாவாயின் – கப்பலின் மூலம் கடக்கலாம். அதுபோல தமிழர்களை அணைத்துக்கொண்டு சென்றால் அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

❖

## இராமநாதபுரம் மாவட்டத்தில்

# நரிக்குறவர் குழந்தைகளுக்கான உண்டு உறைவிடப் பள்ளி



தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளுக்கு தரமான கல்வி அளிக்கப்பட வேண்டும், அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும்; இதில் எவ்வித ஏற்றத் தாழ்வும் இருத்தல் கூடாது என்பன போன்ற பல்வேறு நோக்கங்களைக் கொண்டு கல்வித்துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் நரிக்குறவர்களின் குழந்தைகளுக்கு இராமநாதபுரம் மாவட்டம், பண்ணவயல் ஊராட்சியில் உண்டு உறைவிடப்பள்ளி உருவாக்கப்பட்டுள்ளது. திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள பண்ணவயல் ஊராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் 36 வீடுகள் நரிக்குறவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 58 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. பிழைப்புக்காக இவர்கள் வெளியூர்களுக்கும், திருவிழாக்கள் நடைபெறும் இடங்களுக்கும் சென்று பல நாட்களுக்குப் பின்னர் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

ஆதிதிராவிட மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் பண்ணவயல் ஊராட்சியில் ஊராட்சிஒன்றியத் துவக்கப்பள்ளி 1992 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 106 குழந்தைகள் கல்வி கற்கிறார்கள். அனைவரும் ஆதிதிராவிடர்களாவர். அதன் அங்கமாக நரிக்குறவர்களின் குழந்தைகளுக்கு கல்வியறிவு புகட்டவேண்டும்என்பதற்காக இப்பள்ளியுடன் இணைந்து, அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனை மற்றும் அறிவுரைகளின்படி, உண்டு உறைவிடப்பள்ளி கடந்த 2006–07ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்தச் செயல்வழிக் கற்றல் பள்ளியில் நரிக்குறவர் குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆண் குழந்தைகளும், 21 பெண் குழந்தைகளும் கல்வி கற்கின்றனர்.

தமிழ்மொழி தெரியாத இக்குழந்தைகள், (ABL) செயல்வழிக்கற்றல் (அட்டை) மூலம் சிறப்பாகப் பாடம் கற்கிறார்கள். இக்குழந்தைகளுக்கு தங்குமிடம், மூன்று வேளை உணவு, புத்தகங்கள், சீருடைகள், எழுது பொருட்கள் ஆகியன அனைவருக்கும் கல்வி மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. நரிக்குறவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு குழந்தைகூட விடுபடாமல்

**குழந்தைகளிடையே தன்னம்பிக்கை, சுயமரியாதை, ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆளுமை உணர்வு போன்றவை வளரும் வகையில் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.**

அனைவரும் இந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் பள்ளியினை நிர்வகிக்க அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் ஆர். சசிகலா, ஐ. ஆர்த்தி, எஸ். ஜெகதீஸ்வரி ஆகியோர் பாதுகாவலர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இங்கு பயிலும் குழந்தைகள் தனியார் மெட்ரிக் பள்ளி குழந்தைககளைப் போன்று சீருடை, அடையாள அட்டை அணிந்து பள்ளிக்கு வருகின்றனர். ஆங்கிலப் பாடங்கள், பாடல்கள் போன்றவற்றை தெளிவாகக் கூறுகின்றனர். தேவாரம், திருவாசகப் பாடல்களைக் கற்று கோவில்களில் பாடி பரிசுகள் பெற்றுள்ளனர்.

இந்தப் பள்ளியின் தலைமையாசிரியராக திரு. பா. உதயகுமார் கடந்த 10 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். நரிக்குறவர்களின் வக்ரபோலி மொழியைக் கற்று அவர்களுடன் ஒருங்கிணைந்து பழகி, கல்வியின் அவசியம் குறித்து அவர்களின் மொழியிலேயே எடுத்துரைத்து, அவர்களிடையே நம்பிக்கையை வளர்த்து குழந்தைகளைப் பள்ளியில் இவர் சேர்க்க அரும்பாடுபட்டுள்ளார்.

கழிவு நீர் ஊருணியாக இருந்த இடம் செப்பனிடப்பட்டு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியாக உருவெடுத்துள்ள இந்தப் பள்ளி வளாகத்தில் பழக்கன்றுகள், வேம்பு, அரிய மூலிகைச் செடிகள் பயிரிட்டுள்ளனர். இந்த மூலிகைச் செடிகளால் பலர் பல்வேறு நோய்களிலிருந்து குணமடைந்து உள்ளார்கள். திருவாடானை பகுதிகளில் இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூறும் வகையில் பள்ளி வளாகத்தில் உள்ள மரக்கன்றுகளுக்கு அவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களுள் ஒன்றான இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இப்பள்ளியில் பயிலும் புனிதா என்ற 7 வயது நரிக்குறவர் குழந்தைக்கு மதுரை அரசு இராஜாஜி தலைமை மருத்துவமனையில் இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

நரிக்குறவர் பெற்றோர்களான விஜயன், விஜி ஆகியோர் இப்பள்ளியின் பணி குறித்துக் கூறுகையில், "எங்கள் குழந்தைகள் இங்கு படிக்கின்றனர். முன்பைவிட சுத்தமாக உள்ளனர். தினமும் பல்தேய்த்துக் குளிக்கின்றனர். அவர்கள் பள்ளியில் படிப்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எங்கள் குழந்தைகளும் பள்ளியில் படிக்கும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. நாகரீகமற்ற வாழ்க்கை எங்களுடன் போகட்டும். எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையட்டும்," என்றனர். இத்தகைய முயற்சிகள் மூலம் பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டதுடன், தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அறிஞர் அண்ணாவின் வாக்கிற்கிணங்கவும், சமச்சீர் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையிலும் இத்தகைய உண்டு உறைவிடப்பள்ளிகள் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

**– சி. செல்வராஜ்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம்

## அண்ணாவின் பொன்மொழி



**கல்வியின் துணை**

**போ**ட்டியும், பொறாமையும், பொச்சரிப்பும் நிறைந்த இவ்வுலகில் நமது பாதையில் நாம் நேராக நடந்து செல்ல நமக்குத் துணையாக இருக்கக் கூடியது கல்விபோல் வேறொன்றுமில்லை.

# தமிழக அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி வருகிறது

## தமிழகத்தில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் ரூ.3,811 கோடி கடனுதவி

விருதுநகர் மாவட்டம், ஆர்.ஆர். நகரில் 5.12.2008 அன்று
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை:–

விருதுநகர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் சிறப்பான நிகழ்ச்சியை பெரிய வகையில் இல்லாது எழுச்சியோடு ஏற்பாடு செய்யப்பட்டு இதில் நானும் அமைச்சர் பெருமக்களும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



மகளிர் சுயஉதவிக் குழுக்களுடைய தற்போதைய நிலைமை அவர்களுக்கு அரசு அளித்து வரும் சலுகைகள் உதவிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். விருது நகர் மாவட்டத்தை பொறுத்த வரையில் கடந்த 11.9.2008 அன்று நடைபெற்ற சுழல்நிதி வழங்கும் விழாவில் 1,500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மானியமாக ரூ.1 கோடியே 50 இலட்சமும், வங்கிக் கடனாக ரூ.4 கோடியே 50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.6 கோடி வழங்கப்பட்டது. இன்றைய தினம் நடைபெறும் விழாவில் 500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியம் மற்றும் கடனாக ரூ.3 கோடி வழங்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் நடப்பாண்டு இதுவரை 2,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.9 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### புதிய குழுக்கள் உருவாக்கம்

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முதல் முதலாக தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக இருந்தபோதுதான் தருமபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் துவங்கப்பட்டது. இன்றைய தினம் மிகப் பெரிய அளவில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. தமிழ்நாட்டில் 3 இலட்சத்து 78 ஆயிரத்து 564 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இதில் 60 இலட்சத்து 63 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மே 2006ல் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 60,826 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் புதிதாக அமைக்கப்பட்டு உள்ளன. விருதுநகர் மாவட்டத்தை பொறுத்த வரையில் 11,089 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 1,65,789 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். ஊரகப் பகுதிகளில் உள்ள குழுக்களுக்கு மட்டுமே சுழல்நிதி மானியம் வழங்கப்பட்டது. தற்போது நகர்ப்புற குழுக்களுக்கும் சுழல்நிதி மானியம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

### போட்டி போட்டு கடன் வழங்குகின்றன

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆன நிலையிலும் சுழல்நிதி மானியம் வாங்கத் தகுதி இருந்தும் அவ்வாறு மானியம் பெறாமல் 1,50,000 குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் வழங்குவதற்காக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.3,811 கோடி வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கடனாகப் பெறும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள், வட்டியுடன் திரும்ப கடனை 99 சதவீதம் செலுத்தி வருகின்றனர். இது ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கு கிடைத்த பெருமை. வங்கிகளைப் பொறுத்த வரையில்

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு கடனுதவி வழங்கி வருகின்றன.

இதற்கெனவே இந்தியன் வங்கி 16 புதிய வங்கி கிளைகளை இந்திய அளவில் துவக்கப்பட உள்ளது. அதில் தமிழ்நாட்டில் மட்டும் தருமபுரி, திண்டிவனம், தஞ்சாவூர், பல்லாவரம், திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் வேலூர் ஆகிய 10 இடங்களில் புதிய உதவிக் குழு வங்கிக்கிளைகள் துவக்கப்பட உள்ளது. இந்த அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. பெண்களின் திருமணத்திற்காக 89ஆம் ஆண்டு ரூ.5 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு ரூ.10 ஆயிரம் ஆகவும், 2006ஆம் ஆண்டு 15 ஆயிரம் ஆகவும் நடப்பாண்டு ரூ.20 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கி வருகிறது. மாநில அளவில் 42,787 பெண்களுக்கு ரூ.64 கோடியே 57 இலட்சத்து 45 ஆயிரம் வழங்கப்பட்டு உள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 611 பெண்களுக்கு ரூ.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ் மாநில அளவில் 9,66,199 பெண்களுக்கு ரூ.425 கோடி நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 3,025 பெண்களுக்கு ரூ.1 கோடியே 68 இலட்சத்து 97 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

50 வயதைக் கடந்த திருமணம் ஆகாத மகளிருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் மாநில அளவில் 9,100 மகளிருக்கு ரூ.36 இலட்சத்து 40 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 174 மகளிருக்கு ரூ.69 ஆயிரத்து 600 நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது.

நியாயவிலைக் கடைகளில் 10 வகையான சமையல் பொருட்கள் ரூ.50 மானிய விலையில் வழங்கப்படுகிறது. இந்த அரசு சொன்னதை மட்டும் செய்யாமல் சொல்லாததையும் செய்து வருகின்றது. தேர்தல் நேரத்தில் 1 கிலோ அரிசி ரூ.2க்கு வழங்குவோம் என்று சொன்னோம். ஆனால் தற்போது 1 கிலோ அரிசி ரூ.1க்கு வழங்கி வருகிறோம். பெண்கள் திருமண உதவி ரூ.15 ஆயிரம் வழங்குவோம் என்று சொன்னோம். தற்போது ரூ.20 ஆயிரம் வழங்கி வருகின்றோம். பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்குவோம் என்று சொன்னோம். தற்போது வாரம் மூன்று முறை முட்டை வழங்கி வருகிறோம். மகளிர் நலனுக்காக இதுபோன்று அருமையான திட்டங்களை செயல்படுத்தி வரும் இந்த அரசுக்கு நீங்கள் தொடர்ந்து துணை நிற்க வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.

❖ ❖ ❖

# மத்திய கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை மூலம் தமிழகத்தில் ரூ.50,594 கோடியில் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமயபுரத்தில் நடைபெற்ற விழாவில், ரூ.110 கோடி செலவில் பாடாலூர்–சமயபுரம் இடையே அமைக்கப்பட்ட 21 கி.மீ நான்கு வழிச் சாலையை திறந்து வைத்து மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் பேசியபோது, “தமிழகத்தில் 4,675 கி.மீ.க்கு புதிய நெடுஞ்சாலைகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்துக்கு நான்குவழிச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.33,000 கோடியிலும், சிறப்புத் திட்டங்களின் மூலமாக ரூ.2,023 கோடியிலும், துறைமுகங்கள் வளர்ச்சி, மத்திய கடல்சார் பல்கலைக்கழகம், கடல்சார் வளாகம் என ரூ.15,571 கோடி என மத்திய அரசு மூலமாக ரூ.50,594 கோடிக்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன”, என்று தெரிவித்தார்.

# கடந்த இரண்டரை ஆண்டுகளில் அரசுத்துறைகளில் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 294 பேர் பணி நியமனம்

தமிழக அரசு வழங்கியுள்ள பணி நியமனங்கள் பற்றிய துறைவாரியான விவரங்கள் பின்வருமாறு:–

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 1,213 பேர் .
2. வேளாண்மைத்துறை 2,028 பேர்.
3. கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை 2,019 பேர்.
4. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை 853 பேர்.
5. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை 953 பேர்.
6. வணிகவரி மற்றும் பதிவுத்துறை 445 பேர்.
7. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 1,162 பேர்.
8. எரிசக்தித்துறை 20,860 பேர்.
9. நிதித்துறை 460 பேர்.
10. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை 19,693 பேர்.
11. உயர்கல்வித்துறை 4,471 பேர்.
12. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை 197 பேர்.
13. கைத்தறி, கைவினை மற்றும் துணிநூல்துறை 65 பேர்.
14. நெடுஞ்சாலைத்துறை 760 பேர்.
15. உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை 13,939 பேர்.
16. தொழில்துறை 92 பேர்.
17. தகவல் தொழில்நுட்பவியல்துறை 23 பேர்.
18. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 438 பேர்.
19. சட்டமன்றப் பேரவைச் செயலகம் 5 பேர்.
20. சட்டத்துறை 129 பேர்.
21. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை 18,364 பேர்.
22. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 111 பேர்.
23. திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை 52 பேர்.
24. பொதுத்துறை 82 பேர்.
25. பொதுப்பணித்துறை 1,990 பேர்.
26. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை 30,614 பேர்.
27. வருவாய்த்துறை 5,926 பேர்.
28. பள்ளிக் கல்வித்துறை 82,479 பேர்.
29. சிறுதொழில்துறை 108 பேர்.
30. சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை 28,800 பேர்.
31. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை 135 பேர்.
32. தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை 285 பேர்.
33. போக்குவரத்துத்துறை 39,487 பேர்.
34. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை 56 பேர்.

ஆக மொத்தம், இதுவரை தமிழ்நாடு அரசில், அரசுத் துறைகளின் மூலம் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 294 நிரப்பப்படாத பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ★

# நகராட்சி நிருவாகத்துறையில் பணிபுரியும் 84 பேருக்கு பதவி உயர்வு மூலம் துப்புரவு ஆய்வாளர் பணி நியமன ஆணை

முந்தைய ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு 29.11.2001 முதல் ஒட்டு மொத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசு பணியின்போது இயற்கை எய்திய அரசுப் பணியாளர்களின் பணியிடங்களில் வாரிசு தாரர்களைக் கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக பணியிடைக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குகூட பணி நியமனம் கிடைக்காமல் துன்புற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் பதவியேற்று பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடை நீக்கப்பட்டது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக இருந்து வந்த அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிருவாகத் துறையில் 15 மருத்துவர் பணியிடங்களும், 48 உதவிப் பொறியாளர் பணியிடங்களும், 3 நகரமைப்பு அலுவலர் பணியிடங்களும், 128 துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கும் தேர்வு பெற்றவர்களுக்கான நியமன உத்தரவுகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு உத்தரவிட்டதற்கிணங்க, நிலுவையில் இருந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 334 பணியிடங்களுக்கு நியமனம் பெற்றவர்களுக்கான பணிநியமன உத்தரவுகள் வழங்கப்பட்டன.

மேலும் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வுசெய்யப்பட்ட 11 இரண்டாம் நிலை நகராட்சி ஆணையர்களுக்கு 30.9.2008 அன்று பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரால் நடத்தப்படும் 6 மாத பயிற்சியில் தேர்ச்சி பெற்ற நகராட்சிகளில் பணிபுரியும் 84 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் களப்பணி உதவியாளர்கள் பணி உயர்வு மூலம் துப்புரவு ஆய்வாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவு 13.11.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின்போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக கூடுதல் ஆணையர் முனைவர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவரும் ஆலந்தூர் நகர் மன்றத் தலைவருமான திரு. ஆர். எஸ். பாரதி மற்றும் நகராட்சி நிருவாகத்துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

★ ★ ★

## அண்ணாவின் பொன்மொழிகள்

### ஒட்டை வேண்டாம்



நீங்கள் கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. துணிவுடன் நீங்கள் செயலாற்றினால் மட்டும் போதாது. பல நூற்றாண்டு காலமாக உங்கள் உள்ளங்களிலே புகுந்து கொண்டுள்ள "ஒட்டைகளை அகற்ற முன்வரவேண்டும். பகுத்தறிவு தங்கு தடையின்றி அங்கு ஆட்சி செலுத்த வேண்டும்."

# ஏழை எளிய, நடுத்தர மக்கள் நோயற்ற வாழ்வு பெற தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் தமிழகத்தில் மருத்துவத் துறைக்காக மட்டும் கடந்த 3 ஆண்டில் 21,500 பேர் நியமனம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை

இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவத் துறையில் சிறந்து விளங்குகிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் உலகின் பல நாடுகளில் இருந்தும் சிகிச்சை பெறு வதற்காக தமிழகத்திற்கு இன்றைக்கு பலர் வந்து செல்கின்றனர்.

அந்த அளவிற்கு தமிழகத்தில் மருத்துவத்துறை சிறந்து விளங்குகிறது. தமிழகத்தில் அண்மையில் ஒரு செய்தி, ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனத்தில் சென்ற ஒரு மாணவன் கடும் விபத்துக்குள்ளாகி அவனது மூளை செயலிழந்து விட்டது. இதை அறிந்த அவர் தந்தை அவரும் ஒரு டாக்டர் என்பதால் மூளை செயலற்றுவிட்டபோதிலும் இருதயம் நன்கு செயல்பட்டிருந்த காரணத்தால் அதை வேறு ஒருவருக்கு வழங்கி அதன்மூலம் இருதயம் கெட்டுப்போன ஒருவருக்கு வாழ்வளிக்க முன்வந்தார். அதுபோன்ற மனிதாபிமான செயல்கள் தொடர்ந்து தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இருதய மாற்று அறுவைச் சிகிச்சையில் தமிழகம் சிறந்து விளங்குகின்ற காரணத்தால்தான் இது சாத்தியமாயிற்று.

நடுத்தர ஏழை எளிய மக்கள் சிறந்த சிகிச்சைப் பெற இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. சென்னை மாநகராட்சி மேயராக நான் இருந்த போது சென்னையில் வளர்ச்சியின் ஒரு பங்காக பத்து மேம்பாலங்களை கட்ட திட்டமிட்டு அதில் ஒன்பதை கட்டிமுடித்தோம். இந்த மருத்துவமனையின் முன்னால் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை பராமரிக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்த்த நிலையில், இம்மருத்துவமனையின் தலைவர் டாக்டர். ராமமூர்த்தி அவர்கள்தான் மேற்கொள்ள முன்வந்தார்.

இப்படி அரசின் திட்டங்களுக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும். மனித சமுதாயம் திறம்பட விளங்க பல்வேறு நலத்திட்டங்கள் அவசியம். தமிழக அரசு வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பல்வேறு சேவைகளை செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்கெனவே அறிமுகம் செய்து, இடையில் நிறுத்தப்பட்டு, பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்தபின்னர் வருமுன் காப்போம் திட்டம் நல்ல முறையில் தமிழகத்தில் செயல்பட்டு அதனால் ஏராளமானோர் பலன் பெற்று வருகின்றனர்.

அனைத்துத் துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கான நிதியை தமிழக அரசு ஒதுக்கினாலும், மருத்துவத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நிதியை ஒதுக்கி வருகிறது. 2006 – 07ஆம் நிதியாண்டினை பொறுத்த வரையில் 1,951 கோடி ரூபாயும், 2007 – 08ஆம் நிதியாண்டில் 2,286 கோடி ரூபாயும், 2008 – 09ஆம் நிதியாண்டில் 2,741 கோடி ரூபாய் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மருத்துவத்துறைக்கு மட்டும் ஒதுக்கியுள்ளார்.

அதுமட்டுமின்றி கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் புதியதாக 4,102 மருத்துவர்களும், 5,124 செவிலியர்களும், 12,332 பணியாளர்களும் ஆக 21,558 பேரை மருத்துவத் துறைக்கு இந்த அரசு நிய மித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி புதியதாக 756 மருத்துவர்களுக்கும் தற்போது நியமன ஆணை வழங்கியுள்ளது.

அந்த வகையில் மருத்துவத்துறை சிறப்புடன் விளங்க தமிழக அரசு தொடர்ந்து சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்கு பொதுமக்களும் இதுபோன்ற தனியார் மருத்துவமனைகளும் ஒத்துழைப்பு நல்கி தமிழகம் மருத்துவத்துறையில் சிறந்து விளங்க உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு செயல்பட்டால் இந்த மருத்துவத்துறை நிச்சயம் பொதுமக்களுக்கு தொண்டாற்றுவதில் பெரும் வெற்றி பெறும் என்பதோடு, பொதுமக்களும் அரசின் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். ❖

**கல்வியின் துணை**



போட்டியும், பொறாமையும்,
பொச்சரிப்பும் நிறைந்த
இவ்வுலகில் நமது பாதையில்
நாம் நேராக நடந்து செல்ல
நமக்குத் துணையாக
இருக்கக் கூடியது
கல்விபோல்
வேறொன்றுமில்லை.

**அண்ணாவின் பொன்மொழி**

# பேரூராட்சிகள்துறை தொடர்பான அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் அடங்கிய நூல் தொகுப்பு வெளியீடு



பேரூராட்சிகள்துறை தொடர்புடைய அரசாணைகள் மற்றும் முக்கிய சுற்றறிக்கைகள் அடங்கிய நூல் தொகுப்பினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.11.2008 அன்று வெளியிட்டார்.

பேரூராட்சிகள்துறை 7.5.1981 அன்று துவக்கப்பட்டு நகர்ப்புற மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இத்துறை அரசின், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. பேரூராட்சிகள் துறையின் செயல்பாட்டிற்கென அரசாணைகள் மற்றும் வழிகாட்டு சுற்றறிக்கைகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகள்துறை அலுவலர்களின் நிருவாகம் மற்றும் திட்டச் செயலாக்கத்தினை எளிதாக்கிடவும், மேம்படுத்தவும், அவற்றைத் தொகுத்து வெளியிட பேரூராட்சிகளின் ஆணையரால் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, 183 முக்கிய அரசாணைகள் அடங்கிய முதன்மைத் தொகுப்பு ஒன்றும், 35 சுற்றறிக்கைகள் அடங்கிய உபதொகுப்பு ஒன்றும் என இரண்டு தொகுப்புகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இத்தொகுப்பு அரசு வலைதளத்திலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இத்தொகுப்புகள் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கூடிய குடிநீர் வழங்கல், கட்டட அனுமதி, வரியினங்கள், மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல், இதர முக்கிய திட்டப்பணிகள் மற்றும் நிருவாக மேம்பாடு குறித்த அரசாணைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இத்தொகுப்புக்களை அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார்.

வெளியிடப்பட்ட தொகுப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயல் அலுவலர்களின் நிருவாகச் செயல்பாடுகளுக்கும், மேம்பட்ட திட்டச் செயலாக்கத்திற்கும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் பயன்பாட்டிற்கும் பயனுள்ளதாக அமையும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகளின்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இத்தொகுப்பிலுள்ள விபரங்களை வலைதளம் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். வலைதள முகவரி www.tn.gov.in/dtp ❖

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளுக்கான திட்டம், தமிழகத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த புதிய வீடுகள் கட்டுதல், மற்ற உட்கட்டமைப்பு வசதிகளான சாலை, குடிநீர், பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், பல்நோக்கு வளாகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் / நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் மூலம் ஏற்படுத்தி தரப்படுகிறது.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி திட்டத்தில், மத்திய அரசு 80 சதவீதம் மானிய நிதியும் 10 சதவீதம் மாநில அரசு மானிய நிதியும் 10 சதவீதம் பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் இருக்கும்.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தில் 50 சதவீத மத்திய அரசும் 40 சதவீத மாநில அரசும், 10 சதவீத பயனாளிகளின் பங்குத்தொகையாகவும் இருக்கும்.

தமிழகத்தில் இதுவரை நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் 24 திட்டங்களுக்கு ரூ.2134.10 கோடியில் 85,607 வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30 உள்ளாட்சி அமைப்புகளுக்கு 19,766 வீடுகள் கட்டவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ரூ.225.66 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

21.11.2008 அன்று மாநில அளவிலான வழிகாட்டும், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

**நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த திட்டம்**

தேனி நகராட்சிக்கான ரூ.3.85 கோடிக்கான திட்ட அறிக்கை, திண்டுக்கல் நகராட்சிக்கான ரூபாய் 9 கோடியே 24 இலட்சத்திற்கான திட்ட அறிக்கையையும் பரிசீலனை செய்து ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பேரூராட்சிகளுக்கு ரூ.19 கோடியிலும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 7 பேரூராட்சிகளுக்கு ரூ.11.75 கோடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேரூராட்சிகளுக்கு ரூ.4.23 கோடியிலும், ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த 19 பேரூராட்சிகளுக்கு ரூ.21.93 கோடியிலும் திட்டங்களை ஹட்கோ மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப மாநில கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சென்னையில் உள்ள எழில்நகர், பெரும்பாக்கம் நிலை 1 மற்றும் பெரும்பாக்கம் நிலை 2, மதுரையில் உள்ள பெரியார் நகர், கோவையில் உள்ள உக்கடம் மற்றும் அம்மன் குளம் ஆகிய திட்டங்களில் இடமாற்றம், வடிவமைப்பு மாற்றம் மற்றும் 2008–2009 விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடு சமர்ப்பித்துள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினமாக ரூ.401.80 கோடியினை தமிழக அரசு வழங்கவும் இக்குழு பரிந்துரை செய்தது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சு.ப. தங்கவேலன், டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கௌரிசங்கர், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசு முதன்மைச் செயலர், திரு.கே. தீனபந்து, இ.ஆ.ப., நிதித்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. கு. ஞானதேசிகன். இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலர், முனைவர் சி. சந்திரமௌலி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேலாண்மை இயக்குநர், திரு. டி.கே. இராமச்சந்திரன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகக் கூடுதல் ஆணையர் முனைவர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். ❖

# தமிழகத்தில் 9 ஆயிரம் முகாம்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட 764 சிறுவர்களுக்கு இலவச இருதய அறுவைச் சிகிச்சை

நகர மக்கள் அதிநவீன மருத்துவச் சிகிச்சை முறைகளை பெறுகின்றனர். அதற்கான வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கு கிடைக்கின்றன, அதே வாய்ப்பை கிராம மக்களும் பெறுவதற்காக தமிழக அரசு வருமுன் காப்போம் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது

நகர மக்களுக்கு இணையாக கிராம மக்களும் சிகிச்சை பெறுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வருமுன் காப்போம் திட்டத்தை அறிமுகம் செய்து, இதுவரை 9 ஆயிரம் முகாம்கள் மூலம் கிராமப் பகுதியில் உள்ளவர்கள் சிறந்த சிகிச்சை பெற வழி வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான முகாம்கள் மூலம் 764 சிறுவர்களுக்கு இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

சென்னை மலர் மருத்துவமனையில் 17.12.2008 அன்று மலர் இருதய அறுவைச் சிகிச்சை மையத் துவக்க விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் பேசியதாவது:

தமிழகத்தில் மருத்துவத்துறை சிறந்த முறையில் விளங்குவதற்கு அரசின் நலத்திட்டங்கள் முழு முதல் காரணமாக விளங்குகின்றன. அத்துடன் அரசின் திட்டங்களுக்கு தனியாரும் ஒத்துழைப்பு நல்கினால் இன்னும் சிறப்பாகத் தமிழகத்தில் சுகாதாரம் சிறந்து விளங்கும்.

தமிழகம் முழுவதும் இதுவரை ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான வருமுன் காப்போம் திட்ட முகாம்களை இந்த அரசு நடத்தி அதன்மூலம் கிராமத்தில் உள்ள மக்களும், எவ்வாறு எல்லாம் பாதிக்கின்றனர் என்பதை அறிந்து அதற்கேற்ற சிகிச்சைகளை அளித்து உதவுகின்றன.

காலப்போக்கில் உடல் உழைப்பு என்பது குறைந்துவிட்ட காரணத்தால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடுகிறது. இருதயம் தொடர்பான பிரச்சினைகளும் தற்போது கிராமப்பகுதியிலே அதிக அளவில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு இந்த வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்கள்தான் உதவி புரிகின்றன.

இன்றைக்குத் தமிழகம் மருத்துவச் சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. அமெரிக்கா, லண்டன் போன்ற வெளிநாடுகளுக்கு சிகிச்சை பெறுவதற்காக இங்கிருந்து சென்ற காலம்போய் இப்பொழுது தமிழகத்திற்கு அங்கிருந்து – அதாவது வெளிநாடுகளில் இருந்து சிகிச்சை பெறுவதற்காக வருவதை காண்கின்றோம்.

அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழகம் மருத்துவத்துறையில் சிறந்து விளங்குகின்றது. சிறுவர்களும் குறிப்பாக 12 வயதிற்குட்பட்டவர்கள் இருதயத் தொடர்பான நோய்களுக்கு ஆளாவதை அறிந்து அவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்க சுமார் 10 கோடி ரூபாய் வரை தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது.

இதுவரை வருமுன் காப்போம் திட்ட முகாம்கள் மூலம் கண்டெடுக்கப்பட்ட 764 சிறுவர்களுக்கு அரசின் உதவியால் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் நலமுடன் இருந்து வருகின்றனர். குறைந்த செலவில் அல்லது செலவில்லாமல் நிறைவான சேவை தமிழக அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்றது என்பது நமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும்.

குறைந்த அளவில் சிறந்த சிகிச்சை வழங்கும் அரசின் திட்டங்களைப் பொதுமக்களும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

**அண்ணாவின் பொன்மொழி**

**நாட்டுடைமை**

அரசின் புதிய முயற்சிகள் யாரையும்
எந்தத் தொழிலில் உள்ளவர்களையும்
நிலை குலையச் செய்வதற்காக அல்ல,
அடிப்படைத் தொழில்கள்
நாட்டுடைமையாக இருக்க வேண்டும்
என்ற பொதுக் கருத்துக்கு ஒப்பவே
இவை செய்யப்படுகின்றன.

# ஈரோடு மாவட்டத்தில்,
# அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் நிறைவேற்றம்



ஈரோடு மாவட்டத்தில் உள்ள 53 பேரூராட்சிகளில் 2007-08ஆம் ஆண்டு முதல் 2010-11ஆம் ஆண்டு முடிய நான்கு கட்டங்களாக அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்திட அரசு ஆணையிட்டுள்ளது. 2007-08 - ஆம் ஆண்டில் 14 - பேரூராட்சிகளிலும், 2008-09 -ஆம் ஆண்டில் 13 -பேரூராட்சிகளிலும், 2009-10 மற்றும் 2010-11ஆம் ஆண்டுகளில் தலா 13 - பேரூராட் சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிக்கும் அரசு மானியமாக ரூ. 50 இலட்சம் வழங்கப்படுகிறது. பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இந்நிதியைக் கொண்டு சாலைகள் மேம்பாடு, சமுதாயக்கூடம், குளம் மேம்பாடு, குடிசைப்பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல், சந்தை மேம்பாடு, கடைகள் கட்டுதல், மயானம் புதிதாக அமைத்தல், குடிநீர் விநியோகம், மின் விளக்குகள் அமைத்தல், பூங்கா அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

2007-08ஆம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வடுகப்பட்டி, பள்ளபாளையம், ஒலகடம், ஜம்பை, நல்லாம்பட்டி, பி. மேட்டுப்பாளையம், கொல்லன்கோவில், பெத்தாம்பாளையம், கெம்பநாயக்கன்பாளையம், வெள்ளோட்டாம்பரப்பு, அரச்சலூர், வெங்கம்பூர், மொடக்குறிச்சி மற்றும் ஊஞ்சலூர் ஆகிய 14 பேரூராட்சிகளில் ஒவ்வொரு பேரூராட்சியிலும் தலா ரூ. 1 கோடிக்குமேல் சாலை மேம்பாட்டுப் பணிகள் சமுதாய நலக்கூடம், குளம் மேம்பாட்டுப் பணிகள், சிமெண்ட் கான்கிரீட் சாலை, புதிய மயானம், குடிநீர் விநியோகம், கழிப்பிட வசதிகள் மற்றும் பாலங்கள் போன்ற 153 பணிகள் ரூ. 7 கோடியே 22 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**தண்ணீர் வசதி**

காஞ்சிக்கோயில் பேரூராட்சியைச் சார்ந்த முத்துக்கவுண்டன் பாளையத்தில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 7 ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் குளம் ஒன்று அமைத்து தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கீழ் பவானி வாய்க்காலில் இருந்து தண்ணீர் இங்கு வந்துகொண்டிருந்தது. ஆனால் இதன் மூலம் பாசனவசதி ஏற்படவில்லை. பாசனவசதி இருந்தும் போதிய அளவிற்குத் தண்ணீர் வசதி இல்லை. எனவே கிராம மக்கள் இங்கு பெரிய குளம் வெட்டி நீரைச் சேமித்து பாசன வசதி செய்ய எண்ணினார்கள். அண்ணா

மறுமலர்ச்சித் திட்டம் இவர்களின் கோரிக்கைக்கு உதவியது. இத்திட்டத்தின் மூலம் தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்தக் குளத்தில் கீழ் பவானி வாய்க்கால் நீர் பெருமளவில் இருப்பு வைக்கப்பட்டு தண்ணீர் பாசனத்திற்காக கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள வாழை, தென்னை, மஞ்சள், கரும்பு, நெல் சாகுபடி செய்யப்பட்டுவரும் சுமார் 200 ஏக்கர் நிலம் பாசனவசதி பெற்று வருகிறது. இது குறித்து காஞ்சிக்கோவில் பேரூராட்சித் தலைவர் திரு. எஸ். ஈஸ்வரமூர்த்தி, துணைத் தலைவர் திரு. சசிகுமார் ஆகியோரை நேரில் கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது:– "இக்குளம் அமைப்பதற்கு முன்னர் இப்பகுதி மக்கள் தண்ணீருக்காக மிகவும் சிரமப்பட்டு வந்தனர். பாசனம் செய்ய முடியவில்லை. தற்போது இக்குளம் உருவாக்கப்பட்டதன் மூலம் நிலத்தடி நீர் உயர்ந்து உள்ளது. அருகாமையில் உள்ள விவசாய நிலங்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைத்து வருகிறது. இதனால் விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்து உள்ளனர். குடிதண்ணீருக்கும் பிரச்சினை இல்லை. மேலும் குளத்தில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு மீன் குத்தகை விடப்பட்டுள்ளதால் இதன் மூலம் பேரூராட்சிக்கு வருமானமும் கிடைத்துள்ளது. இதனைக் கொண்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க முடியும் என்றனர்".

**சாலை வசதி**

இப்பேரூராட்சிக்குட்பட்ட அவினாசிலிங்கபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்பை சார்ந்த திருமதி. பாப்பாத்தி என்பவர் தெரிவித்ததாவது : – "எங்களுக்கு நல்ல சாலை கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் சாலைவசதி இல்லை. இவ்விடம் மேடு பள்ளமாக இருந்தது. மழைக்காலத்தில் நடக்க முடியாது. தற்போது வடிகால் வசதியும் அமைத்து தரப்பட்டுள்ளது. தண்ணீர் தேங்குவதில்லை. சாலைவசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கி பொதுமக்களின் சிரமங்களைப் போக்கிய அரசுக்கு நன்றி என்று கூறினார்".

காஞ்சிக் கோவிலில் ரூ.10 இலட்சம் மதிப்பில் 8 கடைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பில் 3 கடைகள் கட்டும் பணி நிறைவடைந்து உள்ளது. மேலும் 15 அடி அகலம் கொண்ட தேர்வீதி தார்ச்சாலை தற்போது 25 அடி அகலத்தில் 1 கி. மீட்டர் நீளத்திற்கு ரூ.10 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு மின்விளக்குகளும் அமைக்கப் பட்டுள்ளன.

**சமுதாயக் கூடம்**

பள்ளபாளையம் பேரூராட்சியில் தம்பிக்கலை அய்யன்கோவில் அருகில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் இரண்டாயிரம் சதுர அடியில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து ஈஸ்வரமூர்த்தி என்பவர் தெரிவித்ததாவது. "இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் சுபகாரியங்கள் நடத்த மண்டபம் இல்லாததால் சிரமப்பட்டு வந்தனர். 3 கி.மீ அப்பால் உள்ள காஞ்சிக் கோவிலுக்குச் சென்று வந்தனர். இதனால் பொருட்செலவும், நேரமும் செலவாயின. இந்த நிலை மாறாதா என எண்ணியிருந்தபோது அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் சமுதாயக்கூடம் கட்டப்பட உள்ள செய்தியை அதிகாரிகள் சொன்னபோது நாங்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தற்போது சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளதால் நாங்கள் சுபகாரியங்கள் செய்ய வெளியே செல்லவேண்டுமென்ற அவசியம் இல்லாமல் போய்விட்டது. எங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு சமுதாயக்கூடம் கட்டிக்கொடுத்த அரசிற்கு நன்றி என்று கூறினார்".

**பெண்கள் தங்கள் சொந்த இடத்திலேயே தையலகம் அமைத்து தொழில் செய்ய முடியும். குடும்ப வேலையுடன் கைத்தொழிலையும் செய்யமுடியும். இந்த பயிற்சிக்குப் பின்னர் வங்கிகள் மூலம் கடன்பெற்று தொழில் தொடங்க முடியும். இதனால் நிரந்தர வருமானமும் கிடைக்கும். இதனால் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதார நிலையும் உயரும்**

**மகளிருக்குத் தொழிற்பயிற்சி**

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சுயதொழில் தொடங்கி தங்கள் வாழ்க்கையில் வளத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், வருமானம் ஈட்டவும் இவர்களுக்கு அரசின் சார்பில் பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. லக்கம்பட்டி பேரூராட்சியில் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தையல் கலை, எம்ப்ராய்டரிங், கூடை பின்னுதல் மற்றும் அலங்காரவேலை குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் அரியப்பம்பாளையம், வாணிப்புத்தூர், லக்கம்பட்டி பேரூராட்சிகளை சேர்ந்த 50 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று



பயிற்சி பெற்று வருகின்றனர். இதற்காக 40 நாட்கள் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.600–ம், பயிற்சி கொடுப்போருக்கு ரூ.1,400–ம் வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர் இவர்கள் தொழில் தொடங்க ரூ.50 ஆயிரம் கடனுதவியும், குழுவிற்கு ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரமும் கடனுதவியும் அளிக்கப்படும். மகளிர்க்குப் பயிற்சி அளித்துவரும் பயிற்சியாளர் திருமதி. ஸ்ரீதேவி தெரிவித்ததாவது, "மகளிர் சுயதொழில் செய்ய இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நாளுக்குநாள் ஆடைகளின் தேவை அதிகரித்து வருகிறது". பெண்கள் தங்கள் சொந்த இடத்திலேயே தையலகம் அமைத்து தொழில் செய்ய முடியும். குடும்ப வேலையுடன் கைத்தொழிலையும் செய்யமுடியும். இந்த பயிற்சிக்குப் பின்னர் வங்கிகள் மூலம் கடன்பெற்று தொழில் தொடங்க முடியும். இதனால் நிரந்தர வருமானமும் கிடைக்கும். இதனால் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதார நிலையும் உயரும்.

**குடிநீர் வசதி**

காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் காந்தி நகரில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ரூ.4.75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் ரூ.10 இலட்சம் மதிப்பில் வாரச்சந்தையில் சமுதாயக்கூடமும், சத்தி, கோபி மெயின்ரோட்டிலிருந்து மணியக்காரன் பாளையம், கரட்டுப்பாளையம் செல்லும் சாலையில் சிறு பாலம் அமைத்து தார்ச்சாலை அமைக்கும் பணியும், மணியக்காரன் பாளையத்தில் ரூ. 5 இலட்சம் மதிப்பில் மயானம் மேம்பாடு செய்து, தங்கும் கொட்டகை, முன்புற சுற்றுச்சுவர், முட்கம்பி வேலி, குடிநீர் வசதிமற்றும் மின்விளக்கு வசதி ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அரியப்பம்பாளையம் பேரூராட்சியில் பழைய கழையனூரில் ரூ.2.50 இலட்சம் மதிப்பில் மயானம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சி சொசைட்டி வீதியில் ரூ.8.20 இலட்சம் மதிப்பில் தார்ச்சாலை அமைக்கும்பணி நிறைவேற்றப்பட்டு உள்ளது. மேலும் அரியப்பம்பாளையம் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அடித்தள கான்கிரீட் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

அரியப்பம்பாளயம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை உரமாகத் தயாரிக்கும் பணிகள் அஞ்சுகம் ஆடவர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நாள்தோறும் இரண்டு டிராக்டரில் பேரூராட்சிப் பகுதிகளில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு இவைகள் கம்போஸ்ட் மையத்தில் மக்கும் குப்பை, மக்கா குப்பை எனத் தரம் பிரித்து உரம் தயாரிக்கப்படுகிறது. இந்த உர உற்பத்தி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளதால் இப்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்வதன் மூலம் ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கிறது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு இந்த ஆண்டு அரசு ரூ.3.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினால் பல்வேறு திட்டப்பணிகள் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

* * *

# வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் மயிலம்பாடி ஊராட்சிக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது

ஊராட்சியில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்துச் சிறப்பான நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில் "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விருதிற்குத் தேர்வு பெறும் ஊராட்சிக்கு நற்சான்றிதழும், கேடயமும் மற்றும் ரூ.5 இலட்சம் பரிசாக வழங்கப்படுகிறது. மேலும் ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது.

இவ்விருதிற்கான அனைத்து அம்சங்களையும் நல்ல முறையில் மேற்கொண்ட ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மயிலம்பாடி ஊராட்சிக்கு இவ்விருது கிடைத்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19.12.2008 அன்று சென்னையில் ஊராட்சியின் தலைவர் திரு. எம்.ஏ.திருஞானசம்பந்தம் அவர்களிடம் இவ்விருதினை வழங்கினார்.

மயிலம்பாடி ஊராட்சியில் 74 கைப்பம்புகளும், 36 விசைப் பம்புகளும், 21 மேல்நிலைத் தொட்டிகளும், 22 தரைமட்டத் தொட்டிகளும் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு தண்ணீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஊராட்சியிலுள்ள 53 குடியிருப்புகளிலும் ஆழ்குழாய்க் கிணறுகளில் மினி பம்பு, மேல்நிலைத் தொட்டி, தரைமட்ட தொட்டி ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் விருப்பு நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலம் நிதி உதவி பெற்று குடிநீர் வசதிகள் செய்துகொடுத்து, குடிநீர் வசதி இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஊராட்சியில் 260 குழல் விளக்குகளும், 22 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டு, இரவு நேரங்களிலும் சாலைகளில் பொதுமக்கள் சென்றுவர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சியில் உள்ள கிராமங்களில் 15 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவ வசதிக்கென மயிலம்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கன்னடிய பாளையம், மயிலம்பாடியில் துணை ஆரம்ப சுகாதார நிலையமும், 1 கால்நடை மருத்துவமனையும் இயங்கி வருகிறது.

பூமி வெப்பமாதலை தடுக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும், கன்னடியபாளையம் முதல் அந்தியூர் பவானி மெயின்ரோடு வரை 600 மீட்டர் தூரத்திற்கு சாலையில் இருபுறமும் 100 மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்போது இவைகள் நிழல்தரும் மரங்களாக காட்சியளிக்கின்றது. சுற்றுப்புற சுகாதாரத்தை பாதுகாக்க தெரு ஓரங்களில் கிடக்கும் பிளாஸ்டிக் பை, பிளாஸ்டிக் பொருட்களை துப்புரவுப் பணியாளர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மகளிர் குழுக்கள் மூலம் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் பயன்பெற இலவச சட்ட விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் காவல்துறை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமசபைக் கூட்டங்களிலும் பள்ளிக்குச் செல்லும் வயதுள்ள குழந்தைகளைப் பணியில் அமர்த்தக் கூடாது எனவும், அவ்வாறு பணியில் அமர்த்தினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டதனால், இவ்வூராட்சியில் குழந்தைத் தொழிலாளர் எவரும் இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலவச கண்சிகிச்சை முகாமினை அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ஊராட்சித் தலைவர் பொதுமக்களிடம் விளம்பரம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தி கண் சிகிச்சை முகாம்களையும் சுகாதாரத் துறையினருடன் இணைந்து எய்ட்ஸ் நோய் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி மற்றும் பிரச்சார முகாம்களையும் நடத்தியுள்ளார்.

அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் போன்ற அரசின் பல்வேறு திட்டங்களைப் பொதுமக்கள் அறியும் வகையில் விழாக்கள் வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் விளம்பரப்படுத்தி பலருக்கும் நலத்திட்டங்கள் கிடைக்க உதவி புரிந்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த ஊராட்சியில் கிராமசபை சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கேட்டறிந்து செயல்படுத்தி இருக்கின்றார். இவரது சீரிய முயற்சியால் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பொதுமக்களின் பங்களிப்பினைப் பெற்று மயிலம்பாடி அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவரும், கன்னடியபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு ரூ 45 ஆயிரம் மதிப்பில் சுற்றுச்சுவரும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நபார்டு திட்டத்தின் மூலம் மயிலம்பாடி வாரச்சந்தையில் அடிப்படை வசதிகளான நிரந்தரக் கடைகள், குடிநீர், கழிப்பிடம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. இச்சந்தை ஏலம் விடப்பட்டு அதன் வாயிலாக மூன்றில் ஒரு பங்கு ஊராட்சிக்கு வருமானமாகக் கிடைக்கிறது.

செலவினங்களைக் குறைக்க அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட்டு, வெள்ளை அட்டை வைக்கப்பட்டு, அதன்படி மின் கட்டணம் செலுத்தப்படுகிறது. தானியங்கி சுவிட்ச் பொருத்தப்பட்டு மோட்டார்கள், தெருவிளக்குகளின் பயன்பாடு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் குடிநீரின் அளவைக் கண்காணிக்க மீட்டர் பொருத்தப்பட்டு பெறப்படும் குடிநீரின் அளவிற்கு மட்டுமே கட்டணம் செலுத்தப்படுகிறது. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாக்கடைகள் தூர்வாரும் பணிகளை அப்பகுதி மக்களும், மகளிர் சுய உதவிக் குழுக்களும் இணைந்து செயல்படுத்தி வருவதால், ஊராட்சி மூலம் சாக்கடைகள் தூர்வாரும் பணிகள் செய்யப்படாமல் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளைப் பாராட்டி இந்த ஊராட்சிக்கு அரசு உத்தமர் காந்தி ஊராட்சி விருதினை வழங்கி உள்ளது. இந்த ஊராட்சியின் தலைவர் திரு. எம். ஏ. திருஞானசம்பந்தம் அவர்கள் பி.எஸ் ஸி., (வேளாண்மை) பட்டதாரி ஆவார். வேளாண் துறையில் பணியாற்றியவர். தொடர்ந்து நான்கு முறை இந்த ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படுத்தாமலும், அரசு நலத் திட்டங்கள் அனைத்தும் அத்திட்டப் பயன்கள் பொதுமக்களை சென்றடையும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளார்.

விருது குறித்து ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எம். ஏ. திருஞானசம்பந்தம் அவர்களை நேரில் சந்தித்து கேட்டபோது அவர் தெரிவித்ததாவது :–

“மயிலம்பாடி ஊராட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் வீட்டுவரி மற்றும் தொழில்வரிகள் 17 இலட்சத்து 66 ஆயிரத்து 356 வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையிலிருந்து பொதுமக்களின் தேவைகளை அறிந்து புதிய சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் விரிவுபடுத்துதல், சிறுபாலங்கள் அமைத்தல், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், குடிநீர் ஆதார விரிவாக்கம், வடிகால் வசதி உருவாக்கம், மயான எரிமேடை அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற பணிகள் ரூ.11 இலட்சத்து 92 ஆயிரத்து 326 மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டு அரசு ஒதுக்கிய ஊரக கட்டமைப்பு நிதியான ரூ.2 இலட்சத்து 63 ஆயிரம் மற்றும் ஊராட்சி நிதி ரூ.2 இலட்சமும் சேர்த்து சிறு பாலங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போடப்பட்டுள்ளன. மயிலம்பாடியில் உள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டதன் பலனாக அரசு அனுமதி அளித்துள்ளது. ஊராட்சியைப் பொருத்தவரை வரி வசூல் நிலுவை ஏதுமில்லை. தணிக்கைக் குறிப்பும் நடத்தப்பட்டு வருகிறது. ஐந்து ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு இங்கு 134 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. கிராம மக்களின் தேவைகளை அறிந்து பல அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருகிறோம்”.

தமிழ்நாட்டில் 15 ஊராட்சிகள் உத்தமர் காந்தி ஊராட்சி விருதிற்கு தேர்வு செய்யப்பட்டன. இதில் பவானி ஒன்றியம், மயிலம்பாடி ஊராட்சியும் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்று ஈரோடு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

— என். பாலையா,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

## அண்ணாவின் பொன்மொழிகள்

### தங்கம்

“ஆப்பிரிக்க நாட்டில் ஏராளமான தங்கம் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரிடம் குறைந்த விலைக்கு விற்றார்கள்.

இன்று அந்தத் தங்கதத்தை ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை–அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்கவில்லை.

அவர்கள் தங்கத்தின்மீது தான் நடக்கிறார்கள், ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொருளாதாரம் முதலில் பலப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு வருவாய் இருந்தால்தான், வியாபாரம் நடக்கும். வியாபாரம் நடந்தால் தான் லாபம்; பிறகுதான், லாப விகிதம் ஐந்தா ஆறா என்பதெல்லாம்”.

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# முனைப்புடன் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற அனைத்து அரசு நலத்திட்டங்களும் திண்டுக்கல் மாவட்டத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுத் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்திட உரிய நடவடிக்கைகளை மாவட்ட நிருவாகம் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச வீட்டுமனைப் பட்டா, மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள், புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கம், மலைப்பகுதி மக்கள் மேம்பாடு, போலி குடும்ப அட்டைகள் கண்டறிதல், போன்ற மக்கள் நலத்திட்டங்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என அறிவித்ததின் பேரில் இம்மாவட்டத்தில் மொத்தம் 306 ஊராட்சிகள் உள்ளன. அதில் இதுவரை 186 ஊராட்சிகளில் 1,67,672 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல வருகிற நிதியாண்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**இலவச எரிவாயு அடுப்பு**

திண்டுக்கல் மாவட்டத்தில் 2006–07 மற்றும் 2007–08 நிதியாண்டுகளில் 34,397 நபர்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அனைத்துப் பகுதிகளுக்கும் கொடுப்பதற்கான நடவடிக்கை மாவட்ட நிருவாகத்தின் மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

**இலவச சைக்கிள்**

இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 24,362 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகளின் சமூகக் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக கல்வி உதவித்தொகை, இலவச பாடப்புத்தகங்கள், சீருடை ஆகியவை உரிய காலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட 1,03,236 நபர்களுக்கு ரூ.7 கோடியே 88 இலட்சத்து 83 ஆயிரம் மதிப்பில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பட்டா மாறுதல் முகாம்**

பட்டா மாறுதல், நில உடைமைச் சான்று ஆகியவை வழங்குவதை துரிதப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிர்க்கா அளவில் தனி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மையங்களில் இதுவரை 15,000 மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இதுவரை 18,564 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் தற்போது 10,971 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 1,77,209 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 27,719 உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட பெண்கள் ஆவார்கள். மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்க 22 தொண்டு நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு 260 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2 கோடியே 71 இலட்சம் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 2008–09ஆம் நிதியாண்டில் நகர்ப்புறங்களில் 400 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க மாவட்ட நிருவாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோன்று கிராமப்புறங்களில் அதிகளவில் குழுக்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள மலைப்பகுதி மக்களுக்குப் புதிதாகச் சாலைகள் அமைத்துத் தருதல், மலைப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, குடிநீர் வசதி

ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து மாவட்ட நிருவாகம் செயல்பட்டு வருகிறது. கொடைக்கானல் மலைப்பகுதியில் மட்டும் சுமார் 800 பழங்குடியினர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் 167 குடும்பத்தினருக்கு இதுவரை சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மலைப்பகுதி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குத் தேவையான மார்க்கெட் வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**போலி குடும்ப அட்டைகள்**

ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கின்ற முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, போலி குடும்ப அட்டைகளை ஒழிப்பதற்கு மாவட்ட அளவில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 1,490 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு இரத்து செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாக அரசுக்கு ரூ.17.88 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு உரிய 3,723 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் வழங்குவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் கடத்துபவர்கள், பதுக்கி வைப்பவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**செம்மை நெல் சாகுபடி – உழவர் சந்தை**

திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, திண்டுக்கல், சின்னாளப்பட்டி ஆகிய 3 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 2007–08ஆம் நிதியாண்டில் ரூ.8 கோடியே 6 இலட்சத்து 31 ஆயிரம் மதிப்பில் விற்பனை நடந்திருக்கிறது. 8 இலட்சத்து 433 மெட்ரிக் டன் காய்கறிகள் 53,683 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு 20,35,804 பொதுமக்கள் பயனடைந்திருக்கிறார்கள். மேலும் இம்மாவட்டத்தில் வத்தலக்குண்டு, கொடைக்கானல் ஆகிய 2 இடங்களில் புதிதாக உழவர் சந்தை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. செம்மை நெல் சாகுபடியைப் பொருத்த வரையில் கடந்த ஆண்டு 16,483 ஹெக்டேர் பரப்பளவில் 63 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 3,739 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. வரும் ஆண்டில் இந்த உற்பத்தி 10 சதவீதம் அதிகரித்து ஒரு ஹெக்டேருக்கு 5,500 கிலோ அரிசி உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல், ஆத்தூர், ரெட்டியார் சத்திரம், வத்தலக்குண்டு, பழநி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உள்ளன. தற்போது வேடசந்தூர் வட்டம் கல்வார்பட்டி கிராமத்தில் புதிதாக சமத்துவபுரம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசிடமிருந்து 1 கோடியே 29 இலட்சத்து 31 ஆயிரத்து 34 ரூபாய் முதற்கட்டமாக கிடைத்திருக்கிறது அந்தப் பணி விரைவில் துவங்க இருக்கிறது.

இதுபோன்று அரசு அறிவிக்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் உடனுக்குடன் அதைச் செயல்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டத்தைப் பொருத்தவரையில் ஆட்சியரை முகாம் அலுவலகத்திலோ அல்லது ஆட்சியர் அலுவலகத்திலோ சந்தித்து குறைகளைத் தெரிவிக்கலாம். அவ்வாறு பொதுமக்களிடமிருந்து வரப்பெறுகின்ற குறைகள் தொடர்பான மனுக்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்வதில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் தனிக்கவனம் மேற்கொண்டு செயல்பட்டு வருகிறார் என்றால் அது மிகையாகாது. ❖

**அண்ணாவின் பொன்மொழி**

**சென்றிடுவீர் வென்றிடுவீர்**

தமிழ் உமது முரசாகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறிவு உமது படைக்கலனாகட்டும்! அறநெறி உமது வழித் துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டுவீர்! பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ–தரணிக்குத் துணை நின்றிடும் தகுதிபெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

# பெண்களுக்கான 100 நாட்கள் எழுத்தறிவுத் திட்டம் – கல்வியறிவு இல்லாத அனைத்துப் பெண்களுக்கும் எழுத்தறிவு பெறச் செய்ய முனைப்பான நடவடிக்கை

**நா**ட்டின் சமுதாய முன்னேற்றத்திற்கு பெண்கள் கல்வி பெறுவது அவசியமாகும். ஒரு பெண் கற்கும் கல்வியானது ஒரு குடும்பமே கற்கும் கல்வி ஆகும். பெண் கல்விக்கு இத்தனை முக்கியத்துவம் அளித்து அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. படிப்பறிவு இல்லாதவர்களுக்கு கல்வியைக் கொடுக்க அறிவொளி வளர்கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயினும் படிப்பறிவு இல்லாதவர்கள் அதிகம் உள்ளனர். இதில், பெரும்பாலானவர்கள் பெண்களே ஆவார்கள்.

படிப்பறிவு இல்லாத பெண்களுக்கு 100 நாட்களில் எழுத, படிக்க கற்றுக்கொடுக்கும் புதிய திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினை 15.11.2008 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. படிப்பறிவு இல்லாத பெண்களைக் கண்டறிந்து அவர்களை ஒருங்கிணைத்து பயிற்சி அளிக்கப்படும். 100 நாட்களின் முடிவில் அந்தப் பெண்களுக்கு முழுமையாக எழுத, படிக்கத் தெரிய வைப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தில் முதல்கட்டமாக இம்மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா ஒரு கிராமங்கள் என கீழ்க்கண்ட கிராமங்களான செட்டிநாயக்கன்பட்டி, வக்கம்பட்டி, பூசாரிபட்டி, கருங்கல், காமனூர், வீலிநாயக்கன்பட்டி, லிங்கவாடி, தங்கச்சியம்மாபட்டி, கலிக்கநாயக்கன்பட்டி, புதுப்பட்டி, அஞ்சுகுழிப்பட்டி, மொல்லம்பட்டி, பாகாநத்தம், நாகையன்கோட்டை ஆகிய 14 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கிராமங்களில் உள்ள படிப்பறிவு இல்லாத பெண்கள் கணக்கெடுக்கப்பட்டது. அதன்படி 14 கிராமங்களிலும் மொத்தம் 4,345 பெண்கள் கல்வி அறிவு பெறாதவர்கள் என்பது தெரியவந்துள்ளது. இவர்களுக்கு கல்வி அறிவைப் போதிக்க அந்தந்த கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளில் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பெண்களுக்கு செயல்வழி கற்றல்முறை மூலம் எழுத, படிக்க கற்றுக்கொடுக்கப்படும். இதற்காக செயல்வழி கற்றல் அட்டைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. தினமும் ஒரு கலைநிகழ்ச்சி நடத்தி சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். எழுத்தறிவு என்று இல்லாமல் அவர்கள் மனதில் நினைப்பதை எழுதிப் படைப்புகளாக மாற்றுவது



மற்றும் சில தொழில் பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பின் முக்கியத்துவம், பெண் சிசுக்கொலை எதிர்ப்பு, வளர்இளம் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், உடல்நலம் பேணுதல், இரத்ததானம் செய்தலின் அவசியம், நோயற்ற வாழ்வு, சுற்றுப்புற சுகாதாரம், சாலை விதிகள் கடைபிடித்தல், தேச ஒற்றுமை, மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பு என ஒவ்வொரு நாளும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்படுகிறது. இந்த வகுப்புகள் மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும்.

கல்வி கற்கும் மையத்துக்கு தொடக்கத்தில் ஆர்வமாக வரும் பெண்கள் சில நாட்கள் வருகை தந்து இடையில் நின்று விடுவார்கள். இவர்களைக் கண்டறிந்து மீண்டும் மையத்திற்கு அழைத்துவரும் பொறுப்பு ஊராட்சி தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு 100 நாட்களின் முடிவில் நன்றாக எழுத, படிக்க கற்றுக் கொடுத்து இருக்கவேண்டும். இதனை அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்வதோடு மாவட்ட ஆட்சியர் அவ்வப்போது நேரில் ஆய்வு செய்து இந்தப் பணியை துரிதப்படுத்தி வருகிறார்.

இந்தத் திட்டம் விரைவில் மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்தத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டால்

**"13,308 பெண்களுக்கு எழுத்தறிவு கற்றுத் தரப்பட்டுள்ளது. அதோடு அங்கு பணிபுரியும் பெண்களுக்கு சுகாதாரத் திட்டம் குறித்து மாலை நேரங்களில் கற்றுக் கொடுக்கும் முன்மாதிரி திட்டத்தையும் திண்டுக்கல் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது"**

இம்மாவட்டத்தில் எழுத, படிக்கத் தெரியாத பெண்களே இல்லை என்ற நிலை உருவாகிவிடும். இதற்கான முயற்சியில் வளர்கல்வித் திட்ட பணியாளர்கள் தீவிரமாக இறங்கி உள்ளனர். அவர்கள் முயற்சி வெற்றி பெற நமது ஒத்துழைப்பும் அவசியமாகிறது. நமக்குத் தெரிந்து படிக்கத் தெரியாதவர்களுக்கு, நாம் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கல்வியைத் தேடி நாம் சென்ற காலம் மாறிவிட்டது. காலம் கடந்த பின்னரும் கல்வி நம்மைத் தேடி வருகிறது.

100 நாட்கள் எழுத்தறிவுத் திட்டம் வருவதற்கு முன்பாகவே இம்மாவட்டத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வரும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்யும்போது பணி புரியும் பெண்களில் சிலர் கையெழுத்து போடத்தெரியாமல் இருந்த நிலையை அறிந்த மாவட்ட ஆட்சியர் எடுத்த முழு முயற்சியின் காரணமாக தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கு எழுத்தறிவு கற்றுதரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு மதிய உணவு இடைவேளைகளில் வளர்கல்வித் திட்டப் பணியாளர்கள் மூலம் எழுத, படிக்க கற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார். அதன்படி

இதுபோன்ற சமுதாய நலனில் அக்கறை கொண்டு பல்வேறு சமுதாயத் திட்டங்களை திண்டுக்கல் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்றால் அது மிகையாகாது.

**– டி.எஸ். சுப்பிரமணியம்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்

★ ★ ★

## அண்ணாவின் பொன்மொழி



### உயர் தனிச் செம்மொழி

நமது தாய் மொழியான தமிழ், உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும்.

# தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 17 முதல் 20 இலட்சம் மெ.டன்கள் யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன

**கா**ரீப் பருவத்தில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான உரத்தேவை பல்வேறு பயிர்களின் சாகுபடி பரப்பினை அடிப்படையாகக் கொண்டு யூரியா 4,35,000 மெ.டன், டி.ஏ.பி 2,00,000 மெ.டன், பொட்டாஷ் 2,10,000 மெ.டன், காம்ப்ளக்ஸ் 1,58,000 மெ.டன் எனக் கணக்கிடப் பட்டது. அதன் அடிப்படையில் காரீப் 2008 பருவத்தில் யூரியா 4,49,305 மெ.டன்னும், டி.ஏ.பி 1,86,255 மெ.டன்னும், பொட்டாஷ், 2,68,661 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 1,21,403 மெ.டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த 3 ஆண்டுகளில் காரீப் பருவ சராசரி விநியோகம், யூரியா 3,50,542 மெ.டன்னும், டி.ஏ.பி 1,71,542 மெ.டன்னும் பொட்டாஷ் 1,83,198 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 1,84,233 மெ.டன்னும் ஆகும். எனவே பல்வேறு உரங்களின் மொத்த விநியோகத்தை ஒப்பிடுகையில் காரீப் 2008 பருவத்தில் அதிக அளவில் உரம் தமிழகத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் ராபி பருவத்தில், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்திற்கு யூரியா 2,53,370 மெ.டன்னும், டி.ஏ.பி 1,05,460 மெ.டன்னும் பொட்டாஷ் 1,13,470 மெ. டன்னும், காம்ப்ளக்ஸ் 69,930 மெ.டன்னும் எனக் கணக்கிடப்பட்டு 2,84,240 மெ.டன் யூரியாவும், 1,18,016 மெ.டன் டி.ஏ.பியும் 1,31,147 மெ.டன் பொட்டாஷ் உரமும், 74,251 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதத்திற்கு யூரியா 1,09,350 மெ.டன், டி.ஏ.பி 29,070 மெ.டன்னும், பொட்டாஷ் 40,180 மெ.டன், காம்ப்ளக்ஸ் 30,880 மெ.டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 8.12.2008 வரை யூரியா 47,141 மெ.டன்னும், பொட்டாஷ் 13,466 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 11,360 மெ.டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் கையிருப்பாக யூரியா 45,200 மெ.டன்னும், டான்பெட் நிறுவனத்தில் டி.ஏ.பி 48,989 மெ.டன்னும் பொட்டாஷ் 99,700 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 381 மெ.டன்னும் நிறுவனங்களில் உள்ளது. மேலும் தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் யூரியா 61,141 மெ.டன்னும் பொட்டாஷ் 29,481 மெ.டன்னும் காம்ப்ளக்ஸ் 11,412 மெ.டன்னும் இருப்பு உள்ளது.

எனவே தமிழகத்தில் பல்வேறு வகையான உரங்கள் தேவையான அளவுக்கு இருப்பு உள்ளது. எனினும் தனியார் உரநிலையங்களில் காம்ப்ளக்ஸ் உரங்கள் அரசு நிர்ணயம் செய்த விலையைவிடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாக புகார்கள் வரப்பெற்றவுடன் வேளாண்மை ஆணையர் அலுவலகத்திலிருந்து 29.11.2008 அன்று எல்லா மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் கடிதம் அனுப்பி அரசு நிர்ணயம் செய்த விலையைவிட அதிகமான



விலையில் விற்பனை செய்யும் உர விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது ஸ்பிக் நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகம் செய்துள்ள 20:20:20 காம்ப்ளக்ஸ் உரங்கள் அரசு நிர்ணயம் செய்த விலையைவிடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாக தெரியவந்தால் வேளாண்மைத் துறையினரால் உரிமம் வழங்கப்பட்ட உர விற்பனை நிலையங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்படுவதுடன், சட்டபூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

❖ ❖ ❖

# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
# பருத்தி பட்டின் கோடி அழகு





**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்பமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008

R.N.I. No.21446/70-Regn.No-TN/ARD/48/06-0
TN/PMG(CCR) WPP-518/06-08



தமிழரசு